## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# மக்கள் சாசனம்
# 2018

©
தமிழ்நாடு அரசு
2018

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# மக்கள் சாசனம்
# 2018

©

தமிழ்நாடு அரசு

2018

# பொருளடக்கம்


| வ.எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | ஊராட்சி நிர்வாகம் | 7 |
| 3. | முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் | 23 |
| 4. | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 28 |
| 5. | தன்னிறைவுத் திட்டம் | 36 |
| 6. | தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 41 |
| 7. | நபார்டு – ஆர்.ஐ.டி.எப். திட்டம் | 42 |
| 8. | ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டம் | 43 |
| 9. | ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் | 45 |
| 10. | ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் | 47 |
| 11. | தூய்மையான கிராம இயக்கம் | 49 |
| 12. | ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் | 50 |
| 13. | பள்ளிக் கழிப்பறைகளை பராமரித்தல் | 53 |
| 14. | தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் | 55 |
| 15. | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் | 57 |
| 16. | தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) | 68 |
| 17. | பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) | 70 |
| 18. | நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 72 |
| 19. | பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் | 75 |
| 20. | குறை தீர்க்கும் வழிமுறை | 76 |

| வ.எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 21. | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் | 85 |
| 22. | பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் (IFAD) உதவியுடன் கூடிய சுனாமிக்கு பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (PTSLP) | 114 |

# மக்கள் சாசனம் – 2018

## 1. முன்னுரை

நாட்டில் மிகவும் முன்னேற்றம் அடைந்த மாநிலங்களுள் ஒன்றான தமிழ்நாட்டில் 2011 – ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 7.21 கோடி மக்கள் வசிக்கின்றனர். இதில் 4.05 கோடி மக்கள் ஊரகப்பகுதிகளில் வசிக்கின்றனர். எனவே, மாநிலம் ஒட்டுமொத்த வளர்ச்சி அடைவதற்கு ஊரக மேம்பாடு அத்தியாவசியமானதாகும். ஊரக வளர்ச்சி என்பது மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாடு மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை சமமாகவும், நிலையாகவும் மேம்படுத்தும் வகையில் தேவையான சமுதாய மாற்றத்தை உருவாக்குவதைக் குறிக்கும். அரசினால் நிறைவேற்றப்படும் ஊரக வளர்ச்சித் திட்டங்களின் அடிப்படை நோக்கம் சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புகளை உருவாக்கி வேலைவாய்ப்பின்மை மற்றும் வறுமையை அகற்றுதல், வேலையில்லா ஊரக இளைஞர்களுக்கு பயிற்சி அளித்தல், ஊரக ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பளித்தல், சிறு, குறு விவசாயிகள்மற்றும் கூலித்தொழிலாளிகள் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக நகரப்பகுதிகளுக்கு இடம் பெயர்வதை தடுக்கும் வகையில் வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருவதும் ஆகும்.

தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூன்று முக்கிய பிரிவுகளைக் கொண்டு செயல்படுகிறது. ஊரக மக்களின் அடிப்படைத் தேவைகளான வீட்டு வசதி, சாலை வசதிகள், குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், சுகாதாரம் ஆகிய வளர்ச்சிப்பணிகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் மூலம் செயல்படுகிறது. கிராம, வட்டார, மாவட்ட அளவிலான மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் நல்ல உள்ளாட்சி நிர்வாகத்தை வழங்க இவ்வியக்ககம் உதவுகிறது. மேலும், இத்துறையில் வாழ்வாதாரத்தை மையமாகக் கொண்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம், பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிதியுதவியுடன் செயல்படும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பயிற்சி ஆணையரகம் இத்துறையின் அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. மாநிலத்திலுள்ள 5 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மற்றும் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் மூலம் திறன் மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை திட்டமிட்டு செயல்படுத்தி கண்காணிக்கிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையானது கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையில் அவர்களின் அடிப்படை தேவைகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெரு விளக்குகள், சாலைகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் மற்றும் துப்புரவு பணி ஆகியவற்றை ஊரகப் பகுதி மக்களுக்கு வழங்கி வருகிறது. மேலும், பள்ளிகளுக்கு

கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல், குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவறை வசதிகள் ஆகிய பணிகளும் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஊரக சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஒருங்கிணைந்த மகளிர் மற்றும் ஆண்கள் சுகாதார வளாகங்கள் அமைத்தல், பொதுக்கழிப்பிடங்கள் அமைத்தல் மற்றும் பராமரித்தல், சுகாதாரத்தை பேணுவதற்கான விழிப்புணர்வை ஊரக மக்களிடையே ஏற்படுத்துதல் போன்ற பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக, வறுமை கோட்டிற்கு கீழே உள்ள மக்களின் வேலை வாய்ப்பினை உறுதி செய்து அவர்களுக்கான ஊதியத்தினை பெற்றிட இத்துறை வழிவகை செய்யப்படுகின்றது. இவை தவிர, சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள் மூலம் கிராம மக்களின் வறுமை ஒழிப்பு, கிராமப்புற மகளிர் மேம்பாடு உறுதி செய்தல் மற்றும் வாழ்வாதாரங்களை வளப்படுத்துதல் போன்றவை செயல்படுத்தப்படுகிறது.

## மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள்

73–வது இந்திய அரசியலமைப்புச் சட்டத் திருத்தம், 1993 ல் கொண்டு வரப்பட்ட பிறகு, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இதன் அடிப்படையில் ஊரகப்பகுதிகளில் மூன்றடுக்கு ஊராட்சி முறையின் அடித்தள அமைப்பாக கிராம ஊராட்சி, இடைநிலையில் வட்டார ஊராட்சி மற்றும் மேல்நிலையில் மாவட்ட ஊராட்சி ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த மூன்றடுக்கு ஊராட்சிகள் மத்திய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களை செயல்படுத்தப்படுகின்றன.

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் நோக்கம்

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள், சாலைகள், வடிகால் வசதிகள் போன்றவற்றை அமைத்தல் மற்றும் பராமரித்தல், ஊரக துப்புரவு பணிகள் மேற்கொள்ளுதல் ஆகியவை கிராம ஊராட்சிகளின் முக்கிய பொறுப்பாகும். தனி நபர் பயன்பெறும் திட்டங்களுக்கான பயனாளிகளைக் கண்டறிந்து மற்றும் தேர்ந்தெடுத்து கிராம சபையில் ஒப்புதல் பெறுவதை கிராம ஊராட்சிகள் செய்கின்றன.

இடைநிலை ஊராட்சிகளான வட்டார ஊராட்சிகள் வலுவான நிர்வாக அமைப்பினையும் மற்றும் தொழில் நுட்ப பிரிவினையும் கொண்டுள்ளதால் ஊரக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிற வளர்ச்சித் திட்டங்களை கிராம ஊராட்சிகளுடன் இணைந்து செயல்படுத்துகின்றது. திட்டங்களை ஒருங்கிணைத்தல், ஆலோசனை வழங்குதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும் அமைப்பாக மாவட்ட ஊராட்சி திகழ்கிறது. ஊராட்சி சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கடமைகள் மற்றும் விருப்புரிமை பணிகளை மூன்று அடுக்கு ஊராட்சிகள் செய்வதுடன் அரசினால் ஒப்படைக்கப்பட்ட மற்ற பணிகளையும் செய்து வருகின்றன.

## நிர்வாக அமைப்பு

### மாநில அளவில்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நிர்வாகத்தை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமை செயலர் செயல்படுத்துகிறார். மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து செயலாக்கத்தை கண்காணித்தல் ஆகியவற்றை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் ஒருங்கிணைத்து செயல்படுத்துகிறார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு உதவியாக திட்ட செயலாக்கத்தில் நிர்வாகம் மற்றும் தொழில்நுட்ப பிரிவு செயல்படுகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர், மகளிர் மேம்பாட்டிற்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பொறுப்பாகிறார். சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களில் வாழும் மக்களுக்காக வாழ்வாதார திட்டங்களை செயல்படுத்தவும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் அதன் திட்ட இயக்குநரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

### மாவட்ட அளவில்

மாவட்ட ஆட்சித் தலைவர் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் ஆய்வாளராகவும் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி திட்டப் பணிகளை மேற்கொள்ளும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு தலைவராகவும் உள்ளார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர், மாவட்ட ஆட்சியர் திட்ட பணிகளை நிறைவேற்ற உதவி புரிகிறார். ஒவ்வொரு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில், செயற் பொறியாளர் தலைமையில் தொழில்நுட்ப பிரிவு உள்ளது. மாவட்ட ஊராட்சி அலுவலகத்தில் உதவி இயக்குநர் நிலையில் ஒரு செயலாளர் பணிபுரிகிறார். மேலும், இவர் மாவட்ட திட்ட குழுவில் அலுவல் சாரா உறுப்பினராகவும் பணிபுரிகிறார். மேலும், மாவட்ட அளவில் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் உதவி இயக்குநர் (தணிக்கை) ஆகியோர் மாவட்டங்களில் ஊரக வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்ற மாவட்ட ஆட்சியருக்கு உதவியாக பணிபுரிகின்றனர்.

### வட்டார அளவில்

ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் ஒரு வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) என இரண்டு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பணிபுரிகின்றனர். வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையராகவும், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) கிராம

ஊராட்சி நிர்வாகம் மற்றும் கிராம ஊராட்சிகளில் நிறைவேற்றப்படும் வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றனர். ஒவ்வொரு வட்டார ஊராட்சி அலுவலகத்திலும் ஒன்றியப் பொறியாளர், உதவி பொறியாளர், பணிமேற்பார்வையாளர்கள் மற்றும் சாலை ஆய்வாளர்கள் தொழில்நுட்ப பணிகளை மேற்கொள்கின்றனர். இப்பொறியாளர்களின் செயல்பாடுகள் உட்கோட்ட அளவில் உள்ள ஊரக வளர்ச்சி உதவி செயற்பொறியாளர்களால் கண்காணிக்கப்படுகிறது.

## கிராம ஊராட்சி அளவில்

கிராம ஊராட்சித் தலைவர் அந்த ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார். கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் ஊராட்சி துணைத் தலைவர் ஆகியோருக்கு கிராம ஊராட்சி கணக்குகளிலிருந்து மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்கு அளிக்கப்படும் காசோலைகளில் ஒப்பம் செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சி செயலாளர் கிராம ஊராட்சி தலைவருக்கு கிராம ஊராட்சியின் நிர்வாகத்தில் உதவி புரிகிறார்.

# ஊராட்சி நிர்வாகம்

# 2. ஊராட்சி நிர்வாகம்

## 1. கிராம ஊராட்சியின் கடமைகள்

மூன்றடுக்கு ஊராட்சிகளில் அடிப்படை வசதிகளை உருவாக்கி, அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பில் இருந்து செயல்படும் முக்கியமான அமைப்பாக, கிராம ஊராட்சி விளங்குகிறது. இந்த அமைப்பு , மக்களுக்கும், அரசுக்கும் பாலமாக செயல்படுகிறது.

## 1.1 கிராம ஊராட்சிகளின் சட்டரீதியான கடமைகள்

1994–ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 110–ன் படி கீழே குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ளுதல் கிராம ஊராட்சிகளின் முக்கியக் கடமையாகும்.

i) அனைத்து கிராமச்சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், தடுப்புச்சுவர்கள் மற்றும் தரைப்பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர).

ii) பொது இடங்களில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) கழிவு நீர்க் கால்வாய் அமைத்துக் கழிவு நீரை வெளியேற்றுதல்.

iv) தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் சுகாதாரத்தை திடக்கழிவு மேலாண்மை செயல்பாட்டின் மூலமாக மேம்படுத்துதல்.

v) பொதுக் கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்.

vi) இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல்.

vii) குடிநீர் வழங்குதல்.

viii) சமுதாய சொத்துக்களை பராமரித்தல்.

ix) கிணறுகளை பராமரித்தல் மற்றும் குளம் தோண்டுதல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்.

x) அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்.

## 1.2. விருப்புரிமைப் பணிகள்

1994 ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 111–ன் படி ஊராட்சியின் தேவைக்கேற்பவும் நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டும் பின்வரும் கடமைகளை நிறைவேற்றிட வேண்டும்.

i) மரங்களை நட்டு பாதுகாத்தல்

ii) கிராமத்திலுள்ள சாலையோரங்களில் மற்றும் பொது இடங்களில் தெரு விளக்குகள் அமைத்தல்

iii) சந்தைகள் ஏற்படுத்தி பராமரித்தல்

iv) விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளை கட்டுப்படுத்துதல்

v) வண்டிகள் நிறுத்துமிடங்கள், கால்நடைத் தொழுவங்கள், இறைச்சிக் கூடங்கள் மற்றும் படிப்பகங்களை ஏற்படுத்தி பராமரித்தல்.

vi) விளையாட்டுத் திடல்கள், பூங்காக்கள், உடற் பயிற்சி கூடங்கள் ஏற்படுத்தி பராமரித்தல்.

**2. கிராம ஊராட்சிக் குழுக்கள்**

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கீழ்க்கண்ட குழுக்கள் அமைத்து செயல்பட வேண்டும்.

(i) நியமனக்குழு

(ii) வளர்ச்சிக்குழு

(iii) வேளாண்மைக் குழு

(iv) பணிகள் குழு

(v) கல்விக் குழு

**நியமனக் குழு**

கிராம ஊராட்சியில் ஊராட்சி நிதியில் ஊதியம் பெற அனுமதிக்கப்பட்ட பணியாளர்களை தேர்வு செய்வது இக்குழுவின் முக்கிய பணி ஆகும். இக்குழுவில் கிராம ஊராட்சித் தலைவரும், தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களும் இடம் பெறுவர்.

**வளர்ச்சிக் குழு**

- இக்குழுவின் தலைவராக கிராம ஊராட்சியில் உள்ள பெண் உறுப்பினர்களில் ஒருவர் இருப்பார். மேலும் இரண்டு உறுப்பினர்களும் இடம் பெறுவர்.
- மக்கள் நலம், சுகாதாரம், குடிநீர், சமுதாய சொத்துக்கள் ஆகியவற்றினை பராமரித்தல், தரம் உயர்த்துதல், தொற்று நோய் பரவாமல் தடுக்க விழிப்புணர்வு முகாம் நடத்துதல், தடுப்பூசி முகாம்கள் அமைத்தல் ஆகியவை இக்குழுவின் முக்கிய பணிகளாகும்.

**வேளாண்மைக் குழு**

இக்குழுவின் தலைவர், கிராம ஊராட்சியின் உறுப்பினர்களுள் ஒருவராவார். நீர்பாசன ஆதாரங்களில் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்த விவசாய குழுக்களை ஏற்படுத்துதல், வேளாண்மை, தோட்டக்கலை, பட்டு வளர்ப்பு, பால் பண்ணை, தரிசு நில மேம்பாடு, வறட்சிப்

பணி மேம்பாடு, சமூக காடுகள், நில மேலாண்மை மற்றும் மண் அரிப்பு தடுப்பு போன்ற நடவடிக்கைகளில் கிராம ஊராட்சிக்கு உதவுதல் போன்ற முக்கிய பணிகளை இக்குழு மேற்கொள்ளும்.

### பணிகள் குழு

மத்திய, மாநில அரசுத் திட்டங்களை தரத்துடன் உரிய காலத்தில் நிறைவேற்றவும், கிராம ஊராட்சிப் பகுதிகளில் உள்ள உள்ளூர் வள ஆதாரங்களைப் பயன்படுத்தி வளர்ச்சித் திட்டங்களை தயாரிக்கவும், இக்குழு கிராம ஊராட்சிக்கு உதவியாக இருக்கும்.

### கல்விக் குழு

கிராம ஊராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்துப் பள்ளிகளின் செயல்பாடுகளை கண்காணித்தல், பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மக்களின் பங்கேற்பினைப் பெறுதல், மக்களிடையே முதியோர் கல்வி, நூலகப் பராமரிப்பு, எழுத்தறிவு ஆகியவற்றை ஏற்படுத்தும் முகாம்களை அமைத்தல் ஆகியவை இக்குழுவின் முக்கிய பணிகளாகும்.

### 3. கிராம சபை

- கிராம சபை என்பது ஒவ்வொரு கிராம ஊராட்சியில் உள்ள ஜனநாயகத்தின் ஆணிவேராகும்.
- கிராம ஊராட்சிகள் செவ்வனே செயல்படத் தேவையான, வெளிப்படையான மற்றும் பொறுப்பான நிர்வாகத்தினை ஊக்குவிக்கவும், திட்டமிடுதல், திட்டங்களை செயல் படுத்துதல் மற்றும் பயனாளிகளை தேர்வு செய்தல் ஆகியவற்றில் பொதுமக்களின் பங்கேற்பினை அதிகரித்தல் மற்றும் சமூகத் தணிக்கைக்கு வழிவகுத்திட செயல்திறன் மிக்க ஒரு கிராம சபை அவசியமாகிறது.
- சட்டப்படி, இரண்டு கிராமசபைக் கூட்டங்களுக்கு இடையே உள்ள காலம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில் கிராம சபைக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும்.
- ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஆண்டில் குறைந்தது நான்கு முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக்கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

கிராம ஊராட்சியில் உள்ள மக்கள் தொகை அடிப்படையில் அரசு கீழ்க்கண்டவாறு குறைவெண் வரம்பு நிர்ணயம் செய்துள்ளது.

**கிராம சபை கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு**

| மக்கட் தொகை | குறைவெண் வரம்பு |
|---|---|
| 500 வரை | 50 |
| 501 முதல் 3000 வரை | 100 |
| 3001 முதல் 10000 வரை | 200 |
| 10001க்கு மேல் | 300 |

கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல் மற்றும் கூட்ட நடவடிக்கைகளை முறையான பதிவேடுகள் மற்றும் புகைப்படம் மூலம் பதிவு செய்யவும் கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

கிராம சபை பின்வரும் முக்கியமான பணிகளை நிறைவேற்றுகின்றது.

1. கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.
2. கிராம ஊராட்சியின் வரவு–செலவு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.
3. அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து தகவல் தெரிவித்து வளர்ச்சிக்கான விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
4. பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளின் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்குதல்.
5. திட்டப்பணிகள் செயல்பாட்டின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.
6. தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் வழங்குதல்.
7. கிராமத்தில் உள்ள பல்வேறு இன மக்களிடையே சமுதாய மற்றும் சமூக நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்.

## 4. ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு உயர்த்தி வழங்கப்பட்ட இட ஒதுக்கீடும் பதவிகளும் (50 விழுக்காடு ஒதுக்கீடு)

- தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21, 1994)–ல் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக் குழு மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் உள்ள பதவியிடங்கள் மற்றும் தலைமை பதவியிடங்கள் மூன்றில் ஒரு பங்கு மகளிருக்கு ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- ஆனால், அப்போதைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உள்ளாட்சி நிர்வாகத்தில் மகளிர் பங்கேற்பினை அதிகப்படுத்தவும் மகளிரை அதிகாரப்படுத்தவும் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீட்டினை 50 விழுக்காடாக உயர்த்துவது அவசியமென கருதினார்.

- ஆகவே, மகளிருக்கான இடஒதுக்கீடு மூன்றில் ஒரு பங்கு என்பதை உயர்த்தி 50 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யும் வகையில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் (இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை இட ஒதுக்கீடு) விதிகள் 1995–ல் திருத்தம் செய்து, அதன் அடிப்படையில் அரசு ஆணை எண். 60 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா–1) துறை, நாள்.23.05.2016–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாணையின்படி, மகளிருக்கான உயர்த்தப்பட்ட இட ஒதுக்கீடு எதிர்வரும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் நடைமுறைக்கு வரும்.

## 5. நிதி ஆதாரங்கள்

மூன்றடுக்கு கிராம ஊராட்சி அமைப்புகளில் வரி விதிப்பு செய்ய அதிகாரம் பெற்ற ஒரே அமைப்பு கிராம ஊராட்சியாகும். கிராம ஊராட்சிகள், கீழ்க்கண்ட வரி, வரியில்லா வருவாய் மற்றும் மான்யம் நிதி ஆதாரங்களைப் பெற அதிகாரம் பெற்றுள்ளன.

### 5.1. வரி வருவாய்

கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட வரி இனங்களிலிருந்து வருவாயாகப் பெற அதிகாரம் பெற்றுள்ளன.

i) வீட்டு வரி / சொத்து வரி

ii) தொழில் வரி

iii) விளம்பர வரி

### 5.2. வரியல்லாத வருவாய்

கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வரியல்லாத வருவாய் பெற கிராம ஊராட்சிகள் அதிகாரம் பெற்றுள்ளன.

i) மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்

ii) அபாயகரமான, அருவருக்கத்தக்க தொழில்களுக்கான கட்டணங்கள்

iii) சந்தைக் கட்டணம்

iv) குடிநீர் கட்டணம்

v) வண்டி நிலையங்களுக்கான கட்டணம்

vi) சமூகக் காடுகள் ஏலம்

vii) மீன்பாசி குத்தகை

viii) 2சி பட்டா கட்டணம்

ix) சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்

x) படகுக் குழாம் மூலம் பெறப்படும் கட்டணங்கள்

xi) அபராதங்கள் மற்றும் தண்டத்தீர்வை

xii) கணிமம் மற்றும் சுரங்க உரிம தொகை.

**6. மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்**

- ஊரகப் பகுதிகளில் உள்ள மனைப்பிரிவுகள் மற்றும் கட்டிட வரைபடங்களுக்கு அனுமதி அளித்தல் தொடர்பாக தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997ல் விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997 விதி 3–ன்படி கிராம ஊராட்சித் தலைவரால், நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் அல்லது அவரால் அங்கீரிக்கப்பட்ட இணை இயக்குநர் அல்லது துணை இயக்குநர் முன் அனுமதியுடன் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படவேண்டும்.

- மனைப்பிரிவு அனுமதிக்கான விண்ணப்பத்தினை கிராம ஊராட்சித் தலைவரிடம் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட வேண்டும். கிராம ஊராட்சித் தலைவர், அவ்விண்ணப்பத்தை நகர் மற்றும் ஊரமைப்பு துறைக்கு தொழில்நுட்ப அனுமதிக்காக பரிந்துரைக்க வேண்டும்.

- விண்ணப்பதாரரால் கிராம ஊராட்சிகளுக்கு ஒப்பளிப்பு செய்திட வேண்டிய பொது உபயோகத்திற்கான திறந்த வெளி இடம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் உள்ளிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நகர் மற்றும் ஊரமைப்பு துறையால் மனைப்பிரிவுகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படும். அதனடிப்படையில் கிராம ஊராட்சித் தலைவரால் மனைப்பிரிவுகளுக்கான இறுதி ஒப்புதல் வழங்கப்படும்.

- தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997 விதி 4–ன்படி குறிப்பிட்ட வரையறைகளுக்குட்பட்டு கட்டட வரைபட அனுமதி கிராம ஊராட்சித் தலைவரால் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- 4,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் 2,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத வணிக கட்டடங்களுக்கு வரைபட அனுமதியினை கிராம ஊராட்சித் தலைவர் வழங்கலாம்.

- இவ்வரம்பிற்கு மேற்பட்ட கட்டடங்களுக்கு நகர் மற்றும் ஊரமைப்பு துறையின் தொழில்நுட்ப அனுமதியுடன் கட்டட வரைபட அனுமதியினை கிராம ஊராட்சித் தலைவர் வழங்கலாம்.

## 7. அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் மற்றும் மனைகள் ஒழுங்குபடுத்துதல் விதிகள், 2017

- நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் உருவாகி உள்ளன. இம்மனைப்பிரிவுகளில் அடிப்படை வசதிகள் மற்றும் போதுமான கட்டமைப்பு வசதிகள் இல்லாத நிலையில் பெரும்பாலான மனைகளை ஏழைகள் மற்றும் விவரம் அறியாத மக்கள் வாங்கியுள்ளனர். இந்த மனைப்பிரிவுகளை மீளவும் முந்தைய பயன்பாட்டு நிலைக்கு மாற்றிட இயலாத நிலை உள்ளது.

- ஏழைகள் மற்றும் விவரம் அறியாதோர் வாங்கியுள்ள அங்கீகரிக்கப்படாத மனைகளை, உரிய வகையில் ஒழுங்குமுறைபடுத்தி உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித்தர அரசு முடிவு செய்து, அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் உள்ள சாலைகளை அகலப்படுத்துதல், பொது உபயோகத்திற்கான இடங்களை பயன்படுத்துதல் ஆகிய நிபந்தனைகளுடன் அங்கீகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம் 35, 1972) பிரிவு 113ன்படி தமிழக ஆளுநருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 20.10.2016க்கு முன்னர் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் விற்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட வீட்டு மனைகளை தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971க்கு விலக்களித்து மேற்படி, அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் மற்றும் வீட்டு மனைகளை வரைமுறை செய்வதற்கு மேற்கண்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு 122ன் கீழ் விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

  1. அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு அல்லது உட்பிரிவிலுள்ள தனி வீட்டுமனைகளை வரன்முறை செய்தல்.
  2. அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளை வரன்முறை செய்தல்.

- இவ்வாறு, அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு அல்லது உட்பிரிவில் உள்ள தனி மனைகளை நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் ஒப்புதல் பெற்று வரன்முறை செய்வதற்கு வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

## 8. ஊராட்சி ஒன்றியம்

- தமிழ்நாட்டில் இடைநிலை அளவில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டார ஊராட்சிகள்) உள்ளன.

- ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும்.
- ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் தொடர்புடைய வார்டில் உள்ள மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலின் மூலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.
- வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியத்தின் செயல் அலுவலர் ஆவார். அவருக்கு உதவியாக நிர்வாகப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் உள்ள பணியாளர்கள் இருக்கின்றனர்.

**1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 112–ன்படி ஊராட்சி ஒன்றியக் குழு மேற்கொள்ளும் பணிகளில் முக்கியமானவை பின்வருமாறு**:

1. மத்திய மாநில அரசுத் திட்டங்களை செயல்படுத்துதல்.
2. ஊராட்சி ஒன்றிய சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், தடுப்புச் சுவர்கள், தரைப் பாலங்கள் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.
3. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.
4. ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளான சிறுபாசனக் குளங்கள், குட்டைகள், ஊரணிகள் ஆகியவற்றை பராமரித்தல் மற்றும் புதிதாக அமைத்தல்.
5. தொற்றுநோய் பரவாதவண்ணம் இருக்கத் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
6. ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் வரையறுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.
7. ஊராட்சி ஒன்றியச் சந்தைகளாக வகைப்படுத்தப்பட்டவற்றை பராமரித்தல்.

**1994–**ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு **114**ன்படி பொருளாதார வளர்ச்சி குறித்த திட்டங்கள் மற்றும் இதர செயல்பாடுகளை ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் செயல்படுத்தும்படி அரசு பணிக்கலாம்.

## 9. நிதி

1. ஊராட்சி ஒன்றிய குழுவிடம் வரி நிர்ணயம் செய்யும் அதிகாரம் இல்லை.
2. வரியில்லா வருவாய், ஒப்படைக்கப்பட்ட / பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாயில் ஒரு பகுதி, கட்டணங்கள், வாடகை, அபராதம் மற்றும் தண்டதீர்வை.

3. மாநில நிதி ஆணையத்தால் விடுவிக்கப்படும் மானியங்களான மக்கள் தொகை அடிப்படையிலான மானியம் மற்றும் குறைந்த பட்ச மானியம், ஆகியன ஊராட்சி ஒன்றியத்திற்கு மானியங்களாக வழங்கப்படுகிறது. ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரை அடிப்படையில குறைந்தபட்சமான மானியம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ.40 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

## 9.1.மாநில நிதிக் குழு மானியம்

73வது அரசியல் அமைப்பு சட்ட திருத்தம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்., 1994, பிரிவு 198ன்படி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தொடர்ச்சியாக மாநில நிதிக் குழு ஆணையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசு ஆணை எண்.350, நிதித்துறை, நாள்:23.04.1994ன் மூலம் தமிழகத்தில் “முதல் மாநில நிதிக்குழு” ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் மாநில நிதிக்குழு அமைத்த முதன்மை மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்வு செய்திட இதுவரை ஐந்து மாநில நிதி குழு அமைக்கப்பட்டுள்ளது.

1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள் மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பிரித்து வழங்கும் முறை.

2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.

3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.

4. ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

## 9.2. ஐந்தாவது மாநில நிதி ஆணையம்

மாநில அரசால் நியமிக்கப்பட்டிருந்த ஐந்தாவது மாநில நிதி ஆணையம், 2017 முதல் 2022 வரையிலான காலத்திற்கு தனது பரிந்துரையை டிசம்பர் 2016ல் அளித்துள்ளது. ஐந்தாவது மாநில நிதிக்குழு பரிந்துரைகளை அரசு ஏற்று அதன்படி சட்டமன்ற பேரவையில் 24.03.2017 அன்று வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. கீழ்க்காணும் முக்கிய பரிந்துரைகளின் மீது அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 10 சதவீத விழுக்காடு ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படும்.

ஆ) ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு முறையே 56:44 என்கிற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

இ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையிலேயான நிலையான பகிர்வு முறையே மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு 8: 37:55 ஆகும்.

ஈ) கிராம ஊராட்சிகளுக்கான குறைந்தபட்ச மான்யம் ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.7 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

உ) ஊராட்சி ஒன்றியங்களுக்கான குறைந்தபட்ச மான்யம் ஆண்டுக்கு ரூ.40 இலட்சம் என உயர்த்தப்பட்டுள்ளது.

ஊ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநில நிதிக்குழு மான்ய தொகை பகிர்வு கீழ்காணும் வழிமுறைகளை கொண்டிருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| (i) | 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி | : | 60% |
| (ii) | பரப்பளவு | : | 15% |
| (iii) | ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மக்கள் தொகை | : | 15% |
| (iv) | தனிநபர் செலவு நுகர்வு இடைவெளி | : | 10% |

எ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய பங்குத் தொகையில் 20 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டு உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதிக்கு பதிலாக மூலதன மானிய நிதி நிர்வகிக்க ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஏ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த தொகையில் 10 விழுக்காடு பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய நிதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 9.3. மூலதன மானிய நிதி

- ஏற்கனவே நடைமுறையில் இருந்த உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதிக்கு பதிலாக ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மூலதன மானிய நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் பகிர்மான நிதி தொகுப்பில் 20 விழுக்காடு மூலதன மானிய நிதிக்கு வழங்கப்படும். மாநில அளவில் முக்கியமானதாக கருதப்படும் திட்டங்களை செயல்படுத்த இதில் 20 விழுக்காடு தனியே ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை செயலர், ஊரக வளர்ச்சி இயக்குநர், நிதித்துறை பிரதிநிதி ஒருவர் மற்றும் மாநில திட்டக்குழு உறுப்பினர் செயலர் அடங்கிய குழுவால் இப்பணிகள் தேர்வு செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்படும்.

- எஞ்சியுள்ள 80 விழுக்காடு நிதி மாவட்ட ஊராட்சிகளுக்கு இடையேயான பகிர்மான விகிதத்தின் அடிப்படையில் மாவட்ட வாரியாக பகிர்ந்து அளிக்கப்படும்.

- நிதித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஆலோசனையின்படி ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையினால் வெளியிடப்படும் அரசாணையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் திட்டங்களுக்கு மாவட்ட திட்டக் குழுவால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 9.4. பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதி

- ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் ஒட்டு மொத்த பகிர்மான நிதியில் 10 விழுக்காட்டினை கொண்டு பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- இதில் 40 விழுக்காடு தொகை அதாவது ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஒட்டு மொத்த பகிர்மான நிதியில் 4 விழுக்காடு, கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தது மூன்று ஆண்டுகளில் நிதி பற்றாக்குறை உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு இடையே ஐந்தாவது நிதி ஆணைய காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஊரக வளர்ச்சி இயக்குநரால் பகிர்ந்து அளிக்கப்படும்.

- இதில் 20 விழுக்காடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வசம் இருக்கும்.

- 20 விழுக்காடு தொகை மாநில நிதி ஆணையத்தால் மாவட்ட ஊராட்சிகளுக்கு பரிந்துரைத்துள்ள விகிதாச்சார அடிப்படையில் மாவட்டங்களுக்கு பிரித்து வழங்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் இத்தொகையினை வேறு எந்த திட்டத்திலும் அல்லது வழிமுறையிலும் தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சம்மபந்தப்பட்ட கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு இத்தொகையினை மானியமாக வழங்க வேண்டும்.

- மீதமுள்ள 20 விழுக்காடு தொகை கூட்டு குடிநீர் திட்டத்திலுள்ள பற்றாக்குறையினைப் போக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மானியமாக விடுவிக்கப்படும்.

## 9.5 மத்திய நிதி ஆணைய மானியம்

பதினான்காவது மத்திய நிதி ஆணைய குழு கிராம ஊராட்சிக்கு அடிப்படை மான்யம் மற்றும் செயலாக்க மான்யம் ஆகிய இரு மானியங்களை பரிந்துரை செய்துள்ளது. மொத்த மான்ய தொகையில் 90 விழுக்காடு அடிப்படை மான்யமாகும். 10 விழுக்காடு செயலாக்க மான்யமாகும்.

### (i) 14வது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானியம்

பதினான்காவது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானியத் தொகை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்தொகை முழுவதும் மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளில் அடிப்படை பணிகளான குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள் பராமரிப்பு, சுகாதாரம், மின்கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றிற்காக இம்மானியம் பயன்படுத்தப்படுகிறது. இத்தொகை மாநில அரசின் மானியத்தோடு இணைக்கப்பட்டு கிராம ஊராட்சியின் விருப்புரிமை பணிகளான அம்மா பூங்கா, உடற்பயிற்சி கூடம் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

### (ii) 14வது மத்திய நிதி ஆணைய செயலாக்க மானியம்

- பதினான்காவது மத்திய நிதி ஆணையம், கிராம ஊராட்சிகளுக்கு செயலாக்க மானியம் வழங்கிட விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் பரிந்துரை செய்துள்ளது. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டு கிராம ஊராட்சிகளுக்கு செயலாக்க மானியம் வழங்கப்படுவதை மாநில அரசே தீர்மானித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2017–18ஆம் ஆண்டு முதல் கிராம ஊராட்சிகள், செயலாக்க மானியம் பெற கீழ்க்கண்ட நிபந்தனைகளை விதித்துள்ளது.

  1. கிராம ஊராட்சிகள் செயலாக்க மானியம் பெறுவதற்குரிய ஆண்டுக்கு, முந்தைய இரண்டு ஆண்டுகளின் முற்படாத ஆண்டின் தணிக்கை அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

  2. தணிக்கை செய்யப்பட்ட அறிக்கையில், கிராம ஊராட்சிகளின் சொந்த வரி வருவாய் அதிகரித்து இருக்கும் வகையில் பிரதிபலிக்க வேண்டும்.

3. செயலாக்க மானியம் பெறும் ஆண்டுக்கு உரிய கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் மத்திய அரசின் இணைய தளமான பிளான் பிளஸ்–ல் பதிவேற்றம் செய்திருக்க வேண்டும்.

4. செயலாக்க மானியம் பெறும் ஆண்டிற்கு முந்தைய ஆண்டிற்குரிய, 14–வது நிதிக்குழு மானிய தொகை செலவின விவரத்தை பிரிவு வாரியாக மத்திய அரசின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்திருக்க வேண்டும்.

- மேலே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை முழுமை செய்த ஊராட்சிகள் மட்டுமே மதிப்பீடு செய்ய பரிசீலிக்கப்படும்.

- மத்திய ஊராட்சி அமைச்சகம் தெரிவித்துள்ளபடி மதிப்பெண் அடிப்படையில் தகுதிபெற்றுள்ள கிராம ஊராட்சிகள் மதிப்பீடு செய்யப்படும்.

    1. சொந்த வருவாய் அதிகரித்தல் – 20 மதிப்பெண்
    2. 14–வது நிதிக்குழு மானியத்திற்கு ஒப்பீடான சொந்த வருவாய் விழுக்காடு – 40 மதிப்பெண்
    3. திறந்தவெளியில் மலம் கழித்தலே இல்லாத கிராம ஊராட்சியின் நிலைப்பாடு – 30 மதிப்பெண்
    4. கிராம ஊராட்சியில் தடுப்பூசி திட்டம் – 10 மதிப்பெண்

- 14–வது மத்திய நிதிக்குழு, செயலாக்க மானிய தொகையை கிராம ஊராட்சிகள் பெறுவதற்குரிய வழிகாட்டுமுறை மற்றும் அளவுகோல் அரசு ஆணை எண். 147, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.1) துறை, நாள்: 20.12.2017 ல் வெளியிடப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசு, அரசிதழ் சிறப்பு எண். 400, நாள்: 20.12.2017ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

### 9.6. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் வரியின் மூலம் பெறப்படும் வருவாயினை மாநில அளவில் ஒருங்கிணைத்து ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது.

### 9.7. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதி

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச் செயலரைத் தலைவராகக் கொண்ட குழுவிற்கு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்ட கூறு

நிதியிலிருந்து பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள், கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், பெரிய பாலங்கள், தரைப் பாலங்கள், இணைப்புச் சாலைகள், பேருந்து நிறுத்தங்கள் போன்ற பெரிய அளவிலான பணிகள் இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளன.

## 10. குறை தீர்க்கும் வழி முறை

ஊராட்சி நிர்வாகம் மற்றும் ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் தொடர்பான குறைகளை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), அவர்களிடம் தெரிவித்து நிவாரணம் பெறலாம் .

கிராம ஊராட்சிகளின் செயல்பாடு குறித்த புகார்களை வாரந்தோறும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள் கிழமை அன்று நடைபெறும் பொதுமக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரிடத்தில் நேரிடையாக அளிக்கலாம். மேலும் மாதந்தோறும் நடைபெறும் மனு நீதி நாள் கூட்டத்திலும் புகார்கள் தெரிவிக்கலாம்.

மாவட்ட ஆட்சியர்கள், திட்ட இயக்குநர்கள் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை), உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்), மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்கள்(வளர்ச்சி) ஆகியோர்களின் தொலைபேசி எண்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

# மாநில அரசுத் திட்டங்கள்

# 3. முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்

**நோக்கம்** : கிராமப் பகுதிகளில் வாழும் வீடு இல்லாத ஏழை மக்களுக்கு வீட்டின் தேவையை பூர்த்தி செய்து கொடுப்பதே முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் நோக்கமாகும்.

**நிதி ஆதாரம் :** இத்திட்டத்திற்கு தேவையான நிதி முழுவதையும் மாநில அரசே வழங்குகிறது.

**அலகுத் தொகை – ரூ.2,10,000**

| | |
|---|---|
| ஒரு வீட்டிற்கான கட்டுமானத் தொகை | ரூ. 1,80,000 |
| சூரிய மின் சக்தி விளக்கு பொருத்துவதற்கான தொகை | ரூ. 30,000 |
| **மொத்தம்** | **ரூ. 2,10,000** |

**சிறப்பு அம்சங்கள் :**

1. ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவில் கட்டப்படும்.
2. ஒவ்வொரு வீடும், வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையல் அறை, தாழ்வாரம் மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் அமைக்கப்படும்.
3. ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தப்படும்.
4. ஒவ்வொரு வீட்டிலும் சூரிய மின் சக்தியில் எரியும் 5 ஒளி உமிழும் டையோடு விளக்குகள் (LED) பொருத்தப்படும்.
5. கூடுதல் வசதியாக பயனாளியின் விருப்பத்தின்படி தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திலிருந்து மின் இணைப்பு பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
6. வீடுகள் கட்டும் பணி நேரடியாக பயனாளிகளால் மேற்கொள்ளப்படும்.
7. சூரிய மின் சக்தி விளக்குகள் அமைக்கும் பணிகளை செயல்படுத்துவதற்கு தொடர்புடைய மாவட்ட திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பொறுப்பாவார்.
8. பசுமை வீடுகள், பயனாளியின் தற்போது குடியிருப்பு அமைந்துள்ள மனையில் (ஏற்கெனவே உள்ள குடியிருப்பு அமைப்பினை அகற்றிவிட்டு) அல்லது கிராம ஊராட்சியின் பிற பகுதியில் அமைந்துள்ள பயனாளிக்கு சொந்தமான மனையில் கட்டப்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படுவதற்கான நில எடுப்பு ஏதும் செய்யப்படமாட்டாது. வீட்டுமனைப்பட்டா உள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியானவர்கள் ஆவர்.
9. அமைக்கப்படும் சூரிய மின் சக்தி விளக்குகள் மற்றும் அத்துடன் கூடிய இதர உபகரணங்களை பயனாளிகள் முறையாக பயன்படுத்தும் விவரங்களைத்

தெரிவிக்கும் பிரசுரங்கள், பயிற்சி விபரங்கள் மற்றும் கையேடுகள் விநியோகம் செய்யப்படும்.

10. ஒவ்வொரு பசுமை வீடும் அனுமதிக்கப்பட்ட பரப்பளவான 300 சதுர அடிக்கு மிகாமல் ஏற்கெனவே இதற்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டவாறு கட்டப்படவேண்டும். இதன் வடிவமைப்பில் மாறுதல்கள் அனுமதிக்கப் படமாட்டாது.

11. இருப்பினும் அனுமதிக்கப்பட்ட வீட்டின் பரப்பளவான 300 சதுர அடியில் வீட்டின் வடிவமைப்பில் மாறுதல் செய்யாமல், சமையலறை மற்றும் படுக்கை அறை ஆகியவற்றை இட அமைவிற்கேற்ப மாற்றி அமைக்க அனுமதிக்கப்படும்.

12. பயனாளிகள் கதவுகள் மற்றும் ஜன்னல்களைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ளலாம். பயனாளிகளால் கதவுகள் மற்றும் ஜன்னல்களை ஏற்பாடு செய்ய இயலாத நிலையில், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கதவுகள் மற்றும் ஜன்னல்களை வழங்க ஏற்பாடு செய்து, அதற்கான தொகையினை திட்ட நிதியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளப்படும்.

13. இத்திட்டத்திற்கான சின்னம் செராமிக் ஓடுகளில் வடிவமைக்கப்பட்டு அனைத்து வீடுகளிலும் அனைவரும் பார்க்கும் வகையில் பதிக்கப்பட வேண்டும்.

14. கட்டி முடிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டிலும் திட்டத்தின் பெயர், பயனாளியின் பெயர் மற்றும் வீடு கட்டப்பட்ட ஆண்டு ஆகிய விபரங்கள் தெளிவாகத் தெரியும் வகையில் வண்ணத்தினால் எழுதப்பட வேண்டும்.

15. ஒவ்வொரு பயனாளிக்கும் ரூ.2.10 இலட்சம் அலகுத் தொகையுடன் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 90 மனித சக்தி நாட்களுக்கான அறிவிக்கப்பட்ட ஊதியம் அளிக்கப்பட வேண்டும். (90 x ரூ.224 = ரூ. 20,160)

16. மேலும் பயனாளிக்கு தனி நபர் இல்லக் கழிப்பறை கட்ட ரூ.12,000 மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்பட வேண்டும்.

**தகுதி வாய்ந்த பயனாளிகள் :**

கிராமப் பகுதிகளில் வாழும் வீடு இல்லாத வீட்டு மனை பட்டா உடைய ஏழை மக்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த பயனாளிகள் ஆவர்.

**பயனாளிகளின் தகுதி**

பயனாளி கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

1. சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

2. 300 சதுர அடிக்கு குறையாத வீட்டு மனை சொந்தமாக இருக்க வேண்டும்.

3. குடும்ப தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவர் பெயரிலோ வில்லங்கமற்ற வீட்டு மனைப்பட்டா இருக்க வேண்டும்.

4. தொடர்புடைய கிராம ஊராட்சியில் அல்லது வேறு எங்கும் கான்கிரீட் கூரை போடப்பட்ட சொந்த வீடு எதுவும் இருக்கக் கூடாது.

5. அரசின் எந்தவொரு வீடு கட்டும் திட்டத்திலும் பயன் பெற்றவராக இருக்கக் கூடாது.

**பயனாளிகள் தேர்வு**

1. பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்படும் போது, மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் துணை இராணுவ படையினர், ஊரகப் பகுதிகளில் வாழும் ஊட்டச்சத்து குறைவினால் பாதிக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத் துறையால் (ICDS) அடையாளம் காணப்பட்ட குழந்தைகளை கொண்ட குடும்பங்கள், திருநங்கைகள், துணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) அவர்களால் சான்றிதழ் வழங்கப்பட்ட ஹெச்ஐவி/எய்ட்ஸ்/காசநோய் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், தீ விபத்து, வெள்ளம் போன்ற இதர பிற இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். மேலும், மனநலம் குன்றியோர் உள்ள குடும்பங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

2. ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் வாழும் ஏழை மக்களிலிருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் அப்போதைய புது வாழ்வு திட்டம் மூலம் தேர்வு செய்யப்பட்ட நலிவுற்றவர்கள் பட்டியலில் (PIP) இருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தயார் செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியல்களில் அவர்களின் ஏதுநிலைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில், கிராம சபையின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**வீடுகள் ஒதுக்கீடு செய்தல்**

1. மாநில அளவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் கட்டப்படவுள்ள வீடுகளின் எண்ணிக்கையை மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்வார்.

2. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர் கிராம ஊராட்சிகளுக்கான வீடுகளை ஒதுக்கீடு செய்ய முடிவெடுக்க வேண்டும்.

3. தகுதிவாய்ந்த பயனாளிகள் பட்டியல் தேர்வு செய்வதற்கு கிராம அளவிலான குழு அமைக்கப்பட வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) ஆகியோர் அடங்கிய குழு, கிராம ஊராட்சியில் உள்ள ஏழை மக்களிலிருந்து வழிகாட்டி நெறிமுறைகளின்படி பயனாளிகளை தேர்வு செய்து, அவ்வாறு குழுவால் இறுதி செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியலை கிராம சபைக் கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெறப்பட வேண்டும். ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் கிராம அளவிலான குழுவில் சிறப்பு அழைப்பாளராக இருப்பார்.

4. கிராம சபையில் ஒப்புதல் பெறப்பட்டு தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு முன்னுரிமைப்பிரிவின் அடிப்படையில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), வீடுகள் ஒதுக்கீடு செய்வார்.

**இன வாரியான ஒதுக்கீடு :**

**மொத்த ஒதுக்கீட்டில் வீடுகள் கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.**

1. ஆதிதிராவிடர் – 29%
2. பழங்குடியினர் – 1%
3. இதர பிரிவினர் – 70%

மாவட்ட வாரியான ஒதுக்கீட்டில் 3 விழுக்காடு மாற்றுத் திறனாளிகளுக்கு பிரத்தியேகமாக ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.

**பணிகளுக்கான உத்தரவு வழங்குதல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அலுவலர்களால் நில உரிமை, இடம் ஆகியவை சரிபார்க்கப்பட்டதை உறுதி செய்த பிறகு தகுதியுள்ள பயனாளிகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி) வேலை உத்திரவினை வழங்குவார்.

**திட்ட செயலாக்கம்**

1. ஒவ்வொரு ஆண்டும் மாவட்டத்திற்கான ஒதுக்கீட்டின் அடிப்படையில் திட்டத்திற்கான நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட வேண்டும்.

2. திட்ட செயலாக்கம், வட்டார வளர்ச்சி அலுவலரிடம் (வட்டார ஊராட்சி) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

3. இடத்தை குறியீடு செய்தல்: சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியின் ஒன்றிய மேற்பார்வையாளர் மற்றும் ஒன்றிய / உதவிப் பொறியாளர் அரசினால் ஒப்புதலளிக்கப்பட்ட வடிவமைப்புக்கேற்றவாறு வேலையைத் துவக்குவதற்காக நிலத்தில் குறியீடு செய்வார்.

4. வீடுகளைக் கட்டுவதற்கும் மற்றும் இதர தொழில்நுட்ப அம்சங்களுக்கு அரசாணை (நிலை) எண்.54, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (PR.1) துறை நாள். 22.05.2014–ன்படி ஒன்றியப் பொறியாளர்கள் / உதவிப் பொறியாளர்கள் பொறுப்பாவார்கள். ஒன்றிய மேற்பார்வையாளர்கள் நிலத்தை குறியீடு செய்வதற்கும், மாதிரி வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப குறியீடுகளின்படி வீடுகள் கட்டும் பணிகளை மேற்பார்வையிடவும் உதவியாக இருப்பார்கள்.

5. உதவி செயற்பொறியாளர்களால் (ஊ.வ) வீடுகள் கட்டுவதை சரிபார்த்து மேல் அளவீடு செய்யப்பட வேண்டும்.

6. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்கள், செயற்பொறியாளர்கள்(ஊ.வ) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் (ஊ.வ) வீடுகளின் பணி முன்னேற்றத்தை அடிக்கடி ஆய்வு செய்து வீடுகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பதை உறுதிப்படுத்த வேண்டும். மேலும் இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாதிரி வடிவமைப்பிலும் அல்லது இத்திட்டத்திற்கான செயல்பாடு குறித்த வழிகாட்டு நெறிமுறைகள்/அறிவுரைகளிலிலிருந்து மாறுபாடாக இல்லை என்பதையும் அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

7. பசுமை வீடுகளின் கட்டுமானத்தை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை உதவியுடன் பயனாளிகளே மேற்கொள்வர்.

8. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் சூரிய மின்சக்தி விளக்கு அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

**திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்**

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | 1. மாவட்ட ஆட்சித் தலைவர்<br>2. திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை.<br>3. உதவி திட்ட அலுவலர் (வீட்டு வசதி (ம) சுகாதாரம்) |
| வட்டார அளவில் | : | 1.வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)<br>2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி). |
| கிராம ஊராட்சி அளவில் | : | தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) |

# 4. சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

**நோக்கம் :**

சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் தனது தொகுதிக்குத் தேவைப்படும் முக்கியப் பணிகளைச் செயல்படுத்திடவும் மற்றும் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதுமே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

**சிறப்பு அம்சங்கள் :**

இத்திட்டம், மாநில அரசின் முழு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இதன்படி ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தனது தொகுதியில் தேவைப்படும் பணியினைக் கண்டறிந்து அப்பணியினை செயல்படுத்திட பரிந்துரைப்பார். ஊரக மற்றும் நகர்ப் புறங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு :**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியாக ஆண்டு ஒன்றிற்கு ஒவ்வொரு தொகுதிக்கும் 2017–18ஆம் ஆண்டு முதல் ரூ. 2 கோடியிலிருந்து ரூ.2.50 கோடியாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆதி திராவிடர்/ பழங்குடியினருக்கான ஒதுக்கீடு :**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில், 22 விழுக்காடு நிதி ஆதி திராவிடர்/ பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் ஊரகப் பகுதிகள் அல்லது நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டும்.

**வரையறுக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்படாத நிதி :**

மொத்த ஒதுக்கீடான ரூ.2.50 கோடியில் ரூ.1.50 கோடி வரையறுக்கப்பட்ட நிதியாகும். அத்தொகையில் அரசால் குறிப்பிடப்பட்ட முன்னுரிமைப் பணிகளையும், மீதமுள்ள ரூ.1 கோடி வரையறுக்கப்படாத நிதியில் சட்டமன்ற உறுப்பினர் தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம் பெறாத எந்தப் பணியையும் அவர் தம் விருப்பத்தின் அடிப்படையில் தேர்வு செய்யலாம்.

**திட்டச் செயலாக்கம்**

**1. வரையறுக்கப்பட்ட கூறு நிதியான ரூ. 1.50 கோடியில் எடுத்துச் செய்யக் கூடிய பணிகள்:-**

மேலே குறிப்பிட்டுள்ளபடி, ரூ. 1.50 கோடி, வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு மட்டும் செலவு செய்யப்பட வேண்டும் :-

1.1 **பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ. 25 இலட்சம்:** 2018-19 ஆம் நிதியாண்டில் பள்ளிகளுக்கு (மாநகராட்சி/ நகராட்சி / ஊராட்சி ஒன்றியம் / அரசு பள்ளிகள் மட்டும்) தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுக்காக குறைந்தபட்சம் ரூ.25 இலட்சம் வரையறுக்கப்பட்ட கூறு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இதில் பள்ளிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான கழிவறை வசதிகள் (குறிப்பாக மாணவிகள், மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தனித்தனியாக கழிப்பறைகள்) குடிநீர் விநியோகம், பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர், பள்ளிகளில் வகுப்பறைகள், நூலகங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

1.2 **பள்ளிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் அமைத்திட ரூ.15 இலட்சம்:** பள்ளி மாணவ மாணவியர்க்கு சுத்தமான மற்றும் சுகாதாரத்துடன் கூடிய குடிநீர் வழங்கும் பொருட்டு, 2018-19 ஆம் ஆண்டில் பள்ளிகளுக்கு (மாநகராட்சி/ நகராட்சி / ஊராட்சி ஒன்றியம் / அரசு பள்ளிகள் மட்டும்) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் **(Rerverse Osmosis (RO) System**) ஏற்படுத்திட குறைந்தபட்சம் ரூ.15 இலட்சம் வரையறுக்கப்பட்ட கூறு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

1.3 **அங்கன்வாடி / சமையல் கூடம் / குழந்தை நேயக் கழிப்பறைகள் / அங்கன்வாடி மையங்களுக்கு குடிநீர் வசதி பணிகளுக்காக ரூ.20 இலட்சம்:–** ஊரகம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில், அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையங்கள், சத்துணவு சமையல் கூடங்கள் ஆகியவற்றுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையங்கள் மற்றும் சத்துணவு சமையல் கூடங்கள் மற்றும் குழந்தை நேயக் கழிப்பறை கட்டுதல், அங்கன்வாடி மையங்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் அங்கன்வாடி சமையல் அறைகளை எரிவாயு இணைப்பு கொண்டு நவீனபடுத்தும் பணிகள் ஆகியவற்றை எடுத்துச் செய்திட ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்திடல் வேண்டும்.

1.4 **குடிநீர்ப் பணிகளுக்காக ரூ. 30 இலட்சம்: –** குறிப்பாக கோடை காலத்தில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையைத் தணிப்பதற்காக தற்போதுள்ள குடிநீர் வழங்கும் நீராதாரத்தினைப் பெருக்குவதற்கான, மின் விசை இறைப்பான், சிறு மின் விசை இறைப்பான், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல், புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல், ஆழ்குழாய் கிணறு ஆழப்படுத்தும் பணிகள், புதிய கைப் பம்பு அமைத்தல், மோட்டார் திறன் உயர்த்துதல், திறந்த வெளி கிணறு அமைத்தல், ஏற்கனவே உள்ள திறந்த வெளி கிணறுகளை ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ள ஒவ்வொரு சட்டமன்ற தொகுதி உறுப்பினரும் ரூ.30 லட்சத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

**1.5 இதர வரையறுக்கப்பட்ட பணிகளுக்கு ரூ.60 இலட்சம்:-** இதர வரையறுக்கப்பட்ட கூறு நிதியின் கீழ், சட்டமன்ற உறுப்பினர் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளை மொத்த வரம்பான ரூ.60 இலட்சத்தில் கீழ்கண்டவாறு பணிகளை எடுத்து செய்திட பரிந்துரைக்கலாம்.

**a).** ஊரகப் பகுதிகளில் :–

1. ஊரகப் பகுதிகளில் சூரிய ஒளி சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டிடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல். (மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து, வழங்கப்படும் மான்யத் தொகையினை பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்)

2. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்

3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார் இடுகின்ற பணிகளை மட்டும் மேற்கொள்ளல்).

4. தெருக்கள் மற்றும் பாதைகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் / பேவர் பிளாக் அமைக்கும் பணிகள்.

5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவைகளுக்கு அறைகள், கட்டடம் மற்றும் / அல்லது சுற்றுச்சுவர் கட்டுதல்.

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல்.

7. பாலங்கள் கட்டுதல்,

8. கிராம ஊராட்சிகளில் தேவைப்படின் கூடுதல் இடுகாடு / சுடுகாடு அமைத்தல்,

9. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் / முள் கம்பி வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதனால்,

இவ்வேலைகளை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பு செய்யலாம்.

10. பெண்கள் மற்றும் ஆண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டுதல்.

11. பொது விநியோக கடை கட்டடங்கள் கட்டுதல்.

12. உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடம் கட்டுதல் மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல். இது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்.

**b). நகர்ப்புறப் பகுதிகளில் :–**

1. நகர்ப்புறப் பகுதிகளில் சூரிய ஒளி சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டிடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல் மற்றும் LED தெருவிளக்குகள் நிறுவுதல், (மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து வழங்கப்படும் மான்யத் தொகையினைப் பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்).

2. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்.

3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார் இடப்படும் பணி மட்டும் மேற்கொள்ளல்).

4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்.

5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவைகளுக்கு அறைகள், கட்டடம் மற்றும் / அல்லது சுற்றுச்சுவர் கட்டிக்கொடுத்தல்.

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல்.

7. பாலங்கள் கட்டுதல்.

8. சுடுகாடு / இடுகாடுகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல்.

9. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல்.

10. புதிய பொது பூங்காக்கள் அமைத்தல்.

11. பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்.

12. பொது விநியோக கடை கட்டடங்கள் கட்டுதல்.

13. ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற கழிவு நீர் அகற்றும் இயந்திரங்கள் வாங்குதல்.

14. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் / முள் கம்பி வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதனால், இவ்வேலைகளை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பு செய்யலாம்.

15. உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடம் கட்டுதல் . மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல். இது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்.

**2. வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.1 கோடியில் எடுத்து செய்யப்படக்கூடிய பணிகள்:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், **"எதிர்மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட கீழ்கண்ட பணிகளைத்"** தவிர பிற எந்தப் பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியின் கீழ் எடுத்துச் செய்யலாம். அதே போல் வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் எடுத்து செய்யப்படக் கூடிய பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.1 கோடியில் இருந்து மேற்கொள்ளலாம். பயணிகள் நிழற்குடை அமைப்பது இக்கூறில் எடுத்துச் செய்திட அனுமதிக்கப்படுகின்றது.

**3. எதிர்மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட பணிகள்:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பின்வரும் தடை செய்யப்பட்ட பணிகளை மேற்கொள்ளல் கூடாது. அவற்றுள் விதிவிலக்காக எடுத்து செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளை விதிமுறைகளின்படி மேற்கொள்ளலாம்.

3.1 மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகள் (பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் ஆகியவற்றுக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

**விதிவிலக்கு :-**

I. நேரடிக் கொள்முதல் நிலையங்கள் (Direct Procurement Centres), கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மைய (Bulk Chilling Centre) கட்டடங்கள் கட்டுதல்.

II. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச் சுவர், சிமிண்ட் கான்க்ரீட் தளம், தொழிலாளர் ஓய்வறை மற்றும் கழிவறை கட்டுதல்.

3.2 தனிநபர் / குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்.

**விதிவிலக்கு :-**

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)—ன் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு பேரூராட்சிப் பகுதிகளில் புதிய வீடுகள் கட்டுதல்.

3.3 அனைத்து வகையான புதுப்பித்தல், பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளுதல்.

**விதிவிலக்கு :-**

அரசுத் திட்டங்களின் கீழ் 31.12.2008 வரை கட்டப்பட்ட இந்திரா நினைவு குடியிருப்பு, தாட்கோ மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளை ஒரு வீட்டிற்கு ரூ.50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)—க்கு மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். இருப்பினும், மேற்படி வீடுகளை பழுது நீக்கம் செய்ய எடுத்துக் கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் / தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3.4 அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்:-

**விதிவிலக்கு :**

(i) 2016—17ம் ஆண்டில் 15வது சட்டமன்றப் பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் 14—வது சட்டமன்றப் பேரவையில் பணியாற்றி தற்போது மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மடிக்கணினி (Laptop) அல்லது மேசைக் கணினி (Desktop), பிரிண்டர் (Laser / Inkjet) மற்றும் அகண்ட அலைவரிசை இணையதள இணைப்பு வசதி (Broadband / Internet Data card connection) ஆகியவற்றை ஒரு முறை மட்டும் தேவைக்கேற்ப கொள்முதல் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு வரையில் கணினி, பிரிண்டர் மற்றும் அகண்ட அலைவரிசை இணைய இணைப்பு வசதிகள் வாங்கப்படாமல் விடுபட்டு இருப்பின், அவ்வினங்களில் மட்டும், 2018—19ம் ஆண்டின் வரையறுக்கப்படாத கூறு நிதியில் இருந்து அரசாணை எண். 95 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி—1) துறை நாள்—18—8—2016ல் அனுமதி அளித்துள்ளவாறு வழிகாட்டி நெறிமுறைகளுக்குட் பட்டு கொள்முதல் செய்து கொள்ளுதல்.

(ii) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு விடுதிகள், அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றிற்கு தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

(iii) அரசு ஆணை (1டி) எண். 405, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி-1) துறை, நாள். 17.08.2010 மற்றும் அரசு கடித (1டி) எண். 653, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள். 31.12.2012-ல் குறிப்பிட்டுள்ளபடி மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.5 லட்சம் அல்லது அதற்கு மேலான மதிப்பிற்கு வாங்குதல்.

(iv) போலியோ மற்றும் மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்காக CP Chair வாங்குதல் மற்றும் மனவளர்ச்சி குன்றிய சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அறிவுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு, மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு கற்பிக்கும் கருவி கலப் பெட்டிகள் வாங்குதல்.

(v) உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடத்தில் (physical fitness centre / Gymnasium) உடற்பயிற்சி செய்ய தேவையான கருவிகள் வாங்குதல். இவை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்.

(vi) தற்போதுள்ள அரசு கட்டடங்களில் சூரியசக்தி மின்கலன்கள் (Solar Power Equipement) நிறுவுவதற்காக உபகரணங்கள் வாங்குதல்.

3.5 அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள், அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிப் பள்ளிகள், சுயநிதிக் கல்லூரிகளில் எவ்விதப்பணிகளையும் மேற்கொள்ளுதல்.

3.6 அனைத்து வணிக நிறுவனங்கள்/ அலகுகள் குறித்த பணிகள்.

3.7 மானியம் மற்றும் கடன் வழங்குதல் மற்றும் மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.

3.8 நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

3.9 முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.

3.10 அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.

3.11 மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.

3.12 குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்கள் போன்றவைகளைத் தூர் வாருதல்.

3.13 சரளை / கப்பி சாலைகள் (தார்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).

3.14 உயர் கோபுர மின் விளக்குகள் பொருத்துதல்.

4. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 22 சதவீதம் ஊரகப் பகுதிகளில் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதி மற்றும் நகர்புறங்களில் குடிசை பகுதிகளில் (slums) வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டும்.

5. பணிகளை செயல்படுத்துதல் / தளவாடச் சாமான்களை கொள்முதல் செய்வது ஆகியவை 1998-ம் ஆண்டு, தமிழ்நாடு ஒழிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், மற்றும் அதன் 2000-ம் ஆண்டு விதிகளின்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

**திட்டம் செயல்படுத்துதல்** : தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்வாக அனுமதி வழங்கிச் செயல்படுத்தும் துறையினை நிர்ணயிப்பார்.

**திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்**

| | | |
|---|---|---|
| தொகுதி அளவில் | : | சட்டமன்ற உறுப்பினர் |
| மாநில அளவில் | : | இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி , சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) |

# 5. தன்னிறைவுத் திட்டம்

## துவக்கம்

ஊரகப் பகுதி மக்கள் தங்களுடைய தேவைகளை தாமே நிறைவு செய்யும் மனப்பான்மை, பொது மக்கள் பங்கேற்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் தன்னிறைவுத் திட்டம் 2011–12–ஆம் ஆண்டு முதல் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## நோக்கம்

பொது மக்களின் சுயசார்பு தன்மையை ஊக்குவிப்பதற்கும், மேன்மைப்படுத்துவதற்கும், சமுதாய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி பராமரிப்பதில் அவர்களின் பங்களிப்பை அதிகரித்து அதன்மூலம் தன்னிறைவு பெற செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

## மக்கள் பங்களிப்பு

கண்டறியப்படும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பொது மக்களின் பங்களிப்பு இருக்க வேண்டும்.

மொத்த மதிப்பீட்டில் மூன்றில் இரண்டு பங்கு தொகை அரசால் வழங்கப்படும்.

## பணிகளை தேர்வு செய்தல்

1. ‘தன்னிறைவுத் திட்டத்தின்’ கீழ் பணிகளை எடுத்துச் செய்வதற்கான தேவை குறித்த கருத்து, தனிநபர், குழுக்கள், நிறுவனங்கள், பொது அல்லது தனியார் நிறுவனங்கள் அல்லது சமுதாயம் ஆகியவற்றின் மூலமாக உருவாகலாம்.

2. எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பணியினைக் குறிப்பிட்டு பொது மக்களின் பங்களிப்பான மூன்றில் ஒரு பங்கு தொகையை வழங்க சம்மதம் தெரிவித்து விண்ணப்ப படிவம் ஒன்று கோரிக்கை வடிவில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுக்கப்படவேண்டும்.

3. தேவை மற்றும் செயல்படுத்தத்தக்க தன்மையினை உறுதிபடுத்திய பின்னரே மதிப்பீடுகள் தயார் செய்யப்படுதல் வேண்டும்.

4. இத்திட்டத்தின் கீழ் குறைவாக நிதி இருக்கும் பட்சத்தில், பல்வேறு பணிகளை செய்ய கோரிக்கைகள் வரப்பெறின், அவற்றுள் மிக அதிக அளவில் சமுதாயத்திற்கு பயன்தரும் பணிகளை மாவட்ட ஆட்சியர் கண்டறிந்து அத்தகைய பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

5. மாநில அளவில் செயல்படுத்தப்படும் சிறப்பு திட்டங்களுக்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அதற்கான பங்களிப்பை தனியார் அல்லது பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பெறலாம்.

**பரிந்துரைக்கப்பட்ட பணிகளின் பட்டியல்**

- அரசு பள்ளிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், கள்ளர் சீரமைப்பு பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகளுக்கு கட்டடங்கள், ஆய்வகங்கள், கழிவறைகள் கட்டுதல், மிதி வண்டி நிறுத்துமிடம் மற்றும் சுற்றுச்சுவர் / சுற்று வேலி அமைத்தல்.

- அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள், துணை மையங்கள், கால்நடை மருந்தகங்கள், கால்நடை வளர்ப்பு மையங்கள் மற்றும் நூலகங்கள் ஆகியவைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல் மற்றும் சுற்றுச்சுவர் / சுற்று வேலி அமைத்தல். தமிழ்நாடு இஸ்லாமிய அறக்கட்டளைக் குழுமத்தில் பதிவு செய்யப்பட்ட பொது இஸ்லாமிய அறக்கட்டளைக்கு (Wakf) சொந்தமான இடுகாடுகள் உட்பட இடுகாடுகளுக்கு பொது வசதிகள் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் பணிகளையும் எடுத்துக்கொள்ளலாம்.

- ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நூலகங்கள் கட்டுதல் மற்றும் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் சத்துணவு மையங்கள், அங்கன்வாடிகள், பள்ளி சமையல் கூடங்கள் மற்றும் பொது விநியோகக் கடைகள் ஆகியவைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல். நூலகங்கள் கட்டுமானப் பணிக்கு எடுத்துக்கொள்ளும் பொழுது புத்தகங்கள் வாங்குவதற்கு போதுமான நிதி பங்களிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதில் தனிக்கவனம் செலுத்தவேண்டும்.

- ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் சமுதாய கட்டடங்கள், குடிநீர் வழங்குதல், சிமெண்ட் கான்கீரிட் சாலைகள் மற்றும் கதிரடிக்கும் களங்கள் போன்ற சமுதாய சொத்துக்களை உருவாக்குதல்.

- ஆண்கள் மற்றும் மகளிருக்கென ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டுதல்.

- பாலங்கள், சிறிய பாலங்கள் கட்டுதல், சரளை /கப்பிச் சாலைகளை தார் சாலைகளாக தரம் உயர்த்துதல், பழுதடைந்த தார்சாலைகளை புதுப்பித்தல், தெருக்கள் மற்றும் சிறிய சந்துக்களை செங்கல் அல்லது கப்பி கற்கள் அல்லது சிமெண்ட் பலகை அல்லது சிமெண்ட் கான்கிரீட் கொண்டு சீரமைத்தல்.

- பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சாலை திட்டு (Traffic Island), நீரூற்று (Fountain) போன்றவற்றை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.

- அரசு பள்ளிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், நூலகங்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிலுள்ள கட்டடங்களுக்கு தேவையான அறைகலன்கள், கணினிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை வாங்குதல். பழைய கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கக்கூடாது.

- ❖ திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை தொடர்பான அனைத்து வகைப்பணிகள் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு தொடர்பான துப்புரவு பணிகள்.
- ❖ அரசு மற்றும் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான பொது கட்டடங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு சூரிய ஒளி விளக்குகள் அமைத்தல்.
- ❖ குடிநீர் வழங்குதலுக்கான சவ்வூடு பரவல் சுத்திகரிப்பு ஆலை (Reverse Osmosis Plant) அமைத்தல்.

## எதிர்மறையான பட்டியல் /தடை செய்யப்பட்ட பணிகள்

விதிவிலக்காக எடுத்துச் செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர, கீழ்க்காணும் தடை செய்யப்பட்ட பணிகள் பட்டியலில் இடம்பெற்ற பணிகளைத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்து செய்ய இயலாது.

1. மத்திய மற்றும் மாநில அரசு பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவைகளுக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுதல்.

   **விதிவிலக்கு :** ஆரம்ப சுகாதார நிலையங்கள் / அரசு மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கான குடியிருப்புக்களுக்கான கட்டடங்கள் கட்டுதல், பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல், அனைத்து வகையான அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவைகளுக்கு கட்டடங்கள் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல், பொது விநியோகக் கடைகள் கட்டுதல், நேரடி கொள்முதல் நிலையங்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள் மற்றும் மொத்த குளிர்பதன மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுதல் ஆகியவற்றை எடுத்துச் செய்யலாம்.

2. அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாட சாமான்கள் வாங்குதல்.

   **விதிவிலக்கு:** அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் சத்துணவு மையங்கள், அங்கன்வாடிகள், அரசுக் கல்லூரிகள், அரசு மாணவ – மாணவியர் தங்கும் விடுதிகள், அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கு தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல் அனுமதிக்கப்படுகிறது. அதேபோல் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக மூன்று சக்கர மிதிவண்டி, சிறு லாரிகள் போன்ற வாகனங்கள் வாங்கலாம்.

3. அரசு உதவி பெறும் / சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் மற்றும் அரசு உதவிபெறும் / சுயநிதி கல்வி நிறுவனங்களுக்கு எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

4. அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் சார்ந்த பணிகள்.

5. மானியம் மற்றும் கடன் மத்திய மற்றும் மாநில / யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.

6. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

7. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகையினை மீளச் செலுத்துதல்.

8. தனிநபர் / குடும்ப பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்.

9. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.

10. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.

11. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள், வாய்க்கால்கள் மற்றும் அதைப் போன்றவைகளை தூர் வாருதல்.

**விதிவிலக்கு:**

1) மாவட்ட ஆட்சியர் அவசியம் என கருதினால் பொதுப் பணித் துறை கண்மாய்களை மட்டும் தூர் வாருதல், கரைகளை பலப்படுத்துதல் மற்றும் மதகு / அணைகளைக் கட்டுதல்/ சீரமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம். இதில் மக்கள் பங்களிப்புத் தொகை பொதுப்பணித்துறையினரால் தயாரிக்கப்படும் மதிப்பீட்டிற்கு 50 சதவிகிதத்திற்கு குறையாமல் இருக்கவேண்டும். தேவையின் அடிப்படையில் நீர்நிலைகள் வரத்து கால்வாய் மற்றும் உபரிநீர் கால்வாய் ஆகியவற்றிற்கான பணிகளை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS) / நீர்வள நிலவளத் (IAMWARM) திட்டத்தின் கீழ் மேற்கொள்ளலாம்.

2) நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முக்கிய நீர் ஆதார குளங்களை தூர்வாரும் பணியினை 50 விழுக்காடு பொதுமக்களின் பங்களிப்புடன் ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றி எடுத்துச் செய்யலாம்.

12. சரளை / கப்பி சாலைகள் (தார்சாலை நிலைக்கு அமைக்கும் சாலைப் பணிகளை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும்).

## பணிகளை செயல்படுத்துதல்

- இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்குவார்.
- தொழில் நுட்ப அனுமதி/ஆலோசனைகளை கண்காணிப்பு பொறியாளர்/செயற் பொறியாளர்/உதவி செயற் பொறியாளர்/உதவி பொறியாளர் வழங்குவர்.

## திட்ட செயலாக்கம்

- சம்மந்தப்பட்ட துறைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் அதன் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட விதிகளை பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணிகள் செயல்படுத்தப்படும்.
- மக்கள் பங்கேற்பினை அதிகப்படுத்தும் நோக்குடன் மதிப்பீட்டில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக பங்களிப்பு செய்த பணிகளை பொது மக்களோ அல்லது பணம் செலுத்தியவரோ நேரடியாக செயல்படுத்திட அனுமதி கோரும் நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கான அனுமதியை வழங்கலாம்.

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்,<br>பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை– 15 |
| மாவட்ட அளவில் | : | 1) மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை.<br>2) திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை. |

# 6. தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

**நோக்கம்**

ஊரகப் பகுதிகளிலுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில், தார் இடப்படாத சாலைகளை தார் சாலைகளாக மேம்படுத்துதல், பழுதடைந்த தார் சாலைகளை வலுப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**செயலாக்கம்**

இத்திட்டம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

**நிதிஒதுக்கீடு**

இத்திட்டம் 100 விழுக்காடு மாநில அரசின் நிதியைக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

**பணிகள்தேர்வுமுறை :**

இத்திட்டம் மூன்று பிரிவுகளாக செயல்படுத்தப்பட்டுவருகிறது.

**பிரிவு–1**

இப்பிரிவின் கீழ் தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்படும்.

**பிரிவு–2**

இப்பிரிவின் கீழ் ஏற்கனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துவதற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**பிரிவு–3**

இப்பிரிவின் கீழ் ஏற்கனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளை பராமரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**திட்டத்தில் பயன் பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களைப் பெற அணுக வேண்டிய அலுவலர்கள்**

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | இயக்குநர், ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை– 15 |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) |

# 7. நபார்டு – ஆர்.ஐ.டி.எப். திட்டம்

**நோக்கம்**

ஊரக பகுதிகளில் அனைத்து பருவ காலங்களிலும் சாலைகள் பயன்படும் வகையில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் மிகவும் பழுதடைந்த சாலைகளை மேம்படுத்துதல், தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக தரம் உயர்த்துதல் மற்றும் பாலங்கள் அமைத்தலும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**செயலாக்கம்**

இத்திட்டம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

**நிதிஒதுக்கீடு**

இத்திட்டத்திற்கு தேவைப்படும் மொத்த நிதியில் 20% மாநில அரசால் நேரடியாகவும் மீதமுள்ள 80% நிதி நபார்டு வங்கியின் மூலம் கடனாகவும் பெறப்பட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**பணிகள் தேர்வு முறை :**

ஒவ்வொரு நிதியாண்டும் இத்திட்டத்திற்கென அரசால் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப பணிகள் மாவட்டங்களில் தேர்வு செய்யப்படுகிறது.

**பணிகள் தேர்வு செய்யப்படும் போது கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன:**

- ❖ தேர்வு செய்யப்படும் பணிகளில் பேருந்துகள் மற்றும் சிற்றுந்துகள் இயங்கும் சாலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.
- ❖ விவசாயத்திற்கு பயன்படும் சாலைகள்
- ❖ தொழில் மற்றும் வணிக மையங்களுக்கு செல்லும் சாலைகள்
- ❖ சுற்றுலாப் பகுதிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு செல்லும் சாலைகள்
- ❖ குறைந்த பட்சம் 1 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள்
- ❖ கடந்த ஐந்து ஆண்டுகளில் வேறு எந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திட்டங்களின் கீழ் தேர்வு செய்யப்படாத பழுதடைந்த நிலையில் உள்ள சாலைகளை மட்டும் தேர்வு செய்ய வேண்டும்.

**திட்டத்தில் பயன் பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதரவிவரங்களைப் பெற அணுக வேண்டிய அலுவலர்கள்:**

| | | |
|---|---|---|
| மாநிலஅளவில் | : | இயக்குநர், ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,<br>பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை– 15 |
| மாவட்டஅளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டாரஅளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) |

# 8. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம்

**நோக்கம்**

கிராமப் புறங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

**நிதி ஒதுக்கீடு**

உள்ளாட்சி அமைப்புகளில் பெறப்படும் ஒப்படைக்கப்பட்ட வருவாயான முத்திரைத்தாள் கட்டணம் மூலம் பெறப்படும் வருவாய் அனைத்தும் மாநில அளவில் ஒருங்கிணைத்து, பின்னர் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும். இதனால் ஒருங்கிணைக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாயினை சமச்சீரான முறையிலும், விரைவாகவும், எளிதாகவும், பகிர்ந்தளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**பணிகள் தேர்வு முறை**

அடிப்படை கட்டமைப்புக்கு தேவையான சாலைகள், பாலங்கள், குடிநீர் வசதி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி மன்றக் கட்டடங்கள் போன்ற பணிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**செயலாக்கம்**

மாவட்ட அளவில் பணியை தேர்வு செய்து அதன் விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் முன்மொழிவு பெறப்பட்டு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தலைமையில் செயல்படும் மாநில குழு ஒப்புதலுக்கு வைக்கப்படும். குழு ஒப்புதல்பெறப்பட்டவுடன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் அவர்களால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு செயல்முறை ஆணை வழங்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் இப்பணியை மேற்கொள்ள, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சி அமைப்புகளில் பொருத்தமான அமைப்பு மூலம் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்படுகின்றன.

**பயனடைவோர்**

இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மூலம் ஊரகப் பகுதியில் வாழும் பொதுமக்கள் பயனடைவர்.

**திட்டத்தில் பயன் பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதரவிவரங்களைப் பெற அணுக வேண்டிய அலுவலர்கள்:**

| | | |
|---|---|---|
| மாநிலஅளவில் | : | இயக்குநர், ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை– 15 |
| மாவட்டஅளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்டஇயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டாரஅளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) |

# 9. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள்

**துவக்கம்**

- பெண்களுக்கு மேம்பட்ட சுகாதார வசதிகளை ஏற்படுத்த வேண்டி இத்திட்டம் 2001 –ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது.

**நோக்கம்**

- பொது சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது மற்றும் கிராமப்புற பெண்களின் தனித்துவம், பாதுகாப்பை உறுதி செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**திட்ட செயலாக்கம்**

**சுகாதார வளாகங்கள் அமைத்தல்**

❖ 2001–ஆம் ஆண்டு முதல் 2004–ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் அப்போதிருந்த ஒவ்வொரு 12,618 கிராம ஊராட்சிகளிலும் சுமார் 750 சதுர அடி பரப்பளவில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டன.

❖ ஒவ்வொரு வளாகத்திலும், 14 கழிவறைகள், 2 குளியலறைகள், ஒரு மின்மோட்டாருடன் நீரேற்று அறை, ஒரு தண்ணீர் தொட்டி மற்றும் துணி துவைக்கத் தேவையான கல் ஆகியவற்றுடன் தேவையான தண்ணீர் விநியோகத்தினை வளாகத்தில் உறுதி செய்யப்பட்டது.

❖ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2011–12 ஆம் ஆண்டில் பழுதடைந்த நிலையிலிருந்த 12,796 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களை ரூ.170 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

❖ தண்ணீர் விநியோகம் மற்றும் விளக்குகளுக்குத் தேவையான மின் வசதி கிராம ஊராட்சிகளால் மேற்கொள்ளப்பட்டு, தொடர் பராமரிப்பு செய்யப்படுகிறது.

❖ வளாகத்தின் உபயோகிப்பாளர்கள் கண்டறியப்பட்டு பயன்படுத்துவோர் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுக்கள் வளாகத்தின் தினசரி பராமரிப்பை மேற்கொள்கின்றனர்.

**பயன்படுத்துவோர் குழுக்கள் அமைத்தல்**

❖ புனரமைக்கப்பட்ட மகளிர் சுகாதார வளாகங்களை முறையாக பயன்படுத்தவும், பராமரிக்கவும் ஒவ்வொரு வளாகத்திற்கும் பயன்படுத்துவோர் குழு ஒன்றினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

- ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தை முறையாக பயன்படுத்தவும், பராமரிக்கவும், பயன்படுத்துவோர் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயன்பாடு மற்றும் பராமரிப்பிற்கான வழிகாட்டி புத்தகம் தயாரிக்கப்பட்டு அனைத்து பயன்படுத்துவோர் குழுக்களுக்கும் கையேடாக வழங்கப்பட்டுள்ளது.

**கண்காணிப்புக் குழுக்கள் அமைத்தல்**

- மகளிர் சுகாதார வளாகத்தின் பராமரிப்பை கண்காணிக்க மாவட்ட அளவில் மற்றும் வட்டார அளவில், கண்காணிப்புக் குழுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவரால் அமைக்கப்பட்டுள்ளது.
- மேற்கண்ட குழுக்கள் கீழ்க்கண்டவை குறித்து விவாதித்து உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும்.
    - ஒவ்வொரு ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தின் பயன்பாட்டு நிலை
    - வளாகங்களை கிராம ஊராட்சி கால முறையில் பராமரிக்கும் விதம்
    - மகளிர் சுகாதார வளாகத்தினை பயன்படுத்துவோர் குழுக்கள் பராமரிக்கும் முறை
    - பயன்படுத்துவோர் குழுக்களின் கருத்துக்கள்/ஆலோசனைகள்
    - கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் அல்லது மண்டல அலுவலர்கள் ஆய்வின் போது தெரிவிக்கப்படும் கருத்துக்கள் / ஆலோசனைகள்

**திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்**

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) |
| கிராம அளவில் | : | கிராம ஊராட்சித் தலைவர் / தனி அலுவலர் |

# 10. ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள்

**துவக்கம்**

- 2012–13ம் ஆண்டில் ஆண்களுக்கு மேம்பட்ட சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தரும் பொருட்டு இத்திட்டம் துவக்கப்பட்டது.

**நோக்கம்**

- பொது சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்த கிராமப்புற பெண்களுக்கு உறுதி செய்து தரபட்டது போன்று ஆண்களுக்கும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி தருவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**திட்ட செயலாக்கம்**

**சுகாதார வளாகங்கள் அமைத்தல்**

❖ 2012–13ம் ஆண்டில் முதல் கட்டமாக ஒரு வட்டாரத்திற்கு இரண்டு ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் வீதம் தமிழகத்திலுள்ள 385 வட்டாரங்களில் தலா ரூபாய் 4,00,000/– மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

❖ ஒவ்வொரு வளாகமும் 8 கழிப்பறைகளை உள்ளடக்கியதாக இருக்கும். தண்ணீர் வசதியுடன் கூடிய குளிக்கும் இடம், துணி துவைக்கும் கல் ஆகியவையும் இருக்கும்.

❖ இதன் தொடர் பயன்பாட்டிற்காக ஒவ்வொரு வளாகத்திலும் தனியாக தண்ணீர் விநியோகம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

❖ தண்ணீர் விநியோகம் மற்றும் விளக்குகளுக்கு தேவையான மின் வசதி கிராம ஊராட்சிகளின் மூலம் பராமரிக்கப்படுகிறது.

**பயன்படுத்துவோர் குழுக்கள் அமைத்தல்**

❖ வளாகத்தின் உபயோகிப்பாளர்கள் கண்டறியப்பட்டு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது

❖ இதற்கென அமைக்கப்பட்ட பயன்படுத்துவோர் குழுக்கள், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் பராமரிக்கப்படுவதுபோல, இந்த வளாகங்களின் தினசரி பராமரிப்பினை மேற்கொள்கின்றனர். உரிய கால இடைவெளிகளில் பராமரிப்பு சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியால் மேற்கொள்ளப்படுகிறது.

**கண்காணிப்பு குழுக்கள் அமைத்தல்**

❖ ஆண்கள் சுகாதார வளாகத்தின் பராமரிப்பை கண்காணிக்க மாவட்ட அளவில் மற்றும் வட்டார அளவில், கண்காணிப்பு குழுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவரால் அமைக்கப்பட்டுள்ளது.

- குழுக் கூட்டத்தில் விவாதிக்க வேண்டியவை
- ஒவ்வொரு சுகாதார வளாக செயல்பாட்டின் நிலை
- ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகத்தினை பயன்படுத்துவோர் குழுக்கள் பராமரிக்கும் முறை
- சுகாதார வளாகங்களை கிராம ஊராட்சி கால முறையில் பராமரிக்கும் விதம்
- பயன்படுத்துவோர் குழுக்களின் கருத்துக்கள் / ஆலோசனைகள்
- கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் அல்லது மண்டல அலுவலர்கள் ஆய்வின் போது தெரிவிக்கப்படும் கருத்துக்கள் / ஆலோசனைகள்.

**திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்**

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்,<br>பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) |
| கிராம அளவில் | : | கிராம ஊராட்சித் தலைவர் / தனி அலுவலர் |

# 11. தூய்மையான கிராம இயக்கம்

**துவக்கம்**

- ❖ ''தூய்மையான கிராம இயக்கம்'' 2003–04 ஆம் ஆண்டில் முதன் முதலாக துவக்கப்பட்டு 2005–06ம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. 2011–12ம் ஆண்டில் மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**தூய்மையான கிராம இயக்கத்தின் முக்கிய நோக்கங்கள் :**

- ❖ திறந்தவெளியில் மலம் கழிப்பதனால் ஏற்படும் சுகாதார பாதிப்புகள் மற்றும் விளைவுகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- ❖ பல்வேறு தரப்பு மக்களின் சுகாதாரத் தேவைகளைக் கண்டறிவதுடன், குறிப்பாக மகளிர் மற்றும் குழந்தைகள், இளவயதினர், வயதானோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு சுகாதாரத் தேவையின் முக்கியத்துவத்தை உணர்த்துதல்.
- ❖ அங்கன்வாடிகள், பள்ளிகள் மற்றும் பொது இடங்கள் ஆகியனவற்றில் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.
- ❖ சுகாதாரத்தைப் பேணும் நோக்கில் பணியாற்றும் பலதரப்பட்ட அமைப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம் அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் ஏற்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளை நிலைப்படுத்துதல்.
- ❖ தீவிர தகவல் தொடர்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலமாக கிராம ஊராட்சிகள் மற்றும் இதர துறைகளையும் சமூகத்துடன் ஒருங்கிணைத்தல்.

**நிதி ஒதுக்கீடு**

- ❖ தனிநபர் இல்லங்கள், பள்ளிகள் ஆகியவற்றில் சுகாதார வசதி மற்றும் திறந்தவெளி மலம் கழித்தலை முழுமையாக அகற்றுவதன் மூலம் தூய்மையான சூழலை உருவாக்கியும், திடக்கழிவு மேலாண்மை மற்றும் நீர் சேகரிப்பு வாயிலாக 100% சுகாதாரத்தை எய்துகின்ற ஊராட்சிகள் மாநில அரசு வழங்கும் ரூ.5.00 இலட்சம் ரொக்கப் பரிசு பெறத் தகுதி அடைகின்றன.
- ❖ ஒவ்வொரு ஆண்டும் ஒரு மாவட்டத்திற்கு ஒரு கிராம ஊராட்சி என்ற அடிப்படையில் 31 சிறந்த கிராம ஊராட்சிகளுக்கு தலா ரூ.5.00 இலட்சம் வீதம் ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது.

**திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்**

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்,<br>பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) |

# 12. திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்

## திட்ட துவக்கம்

2015–16ம் ஆண்டு முதல் முதற்கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 2,000 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் துவங்கப்பட்டு, பின்னர் 7,000 கிராம ஊராட்சிகளிலும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. மேலும் இத்திட்டம் 2016–17ம் ஆண்டு மீதமுள்ள 3,524 கிராம ஊராட்சிகளிலும் விரிவாக்கம் செய்யப்பட்டது.

## நோக்கம்

கிராம ஊராட்சிகள் தூய்மையாகவும் மற்றும் சுகாதாரமாகவும் இருப்பதற்கு அரசு தொடர்ந்து அதிக முன்னுரிமை அளித்து வருவதுடன், கிராம ஊராட்சிகளில் மறுசுழற்சி மற்றும் குப்பைகள் அகற்றுவதற்கான வசதிகளுடன் கூடிய முறையான திடக்கழிவு மேலாண்மை அமைப்புகள் ஏற்படுத்துவதாகும்.

## திட்ட செயலாக்கம்

ஒரே ஒரு குக்கிராமத்தைக் கொண்ட கிராம ஊராட்சியாக இருப்பின் இத்திட்டம் செயல்படுத்துவதற்கு அந்த கிராம ஊராட்சியே ஒரு தனி அலகாகும். பெரிய ஊராட்சியாக இருப்பின் ஒரு குக்கிராமத்தையோ அல்லது குக்கிராமங்கள் தொகுப்பாகவோ இத்திட்டம் செயல்படுத்த அலகாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

i. திடக்கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு முன்பு அவை மக்கும் குப்பை (Biodegradable) மற்றும் மக்காத குப்பைகளாக (Non-Biodegradable) பிரிக்கப்படுகிறது.

ii. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மக்கும் கழிவுகள் மூலம் உரம் தயாரிப்பதற்கு இரண்டு குழிகளும், திடக்கழிவுகளை சேகரித்து வைப்பதற்கு ஒரு குழியும் தோண்டப்படுகிறது.

iii. கிராம ஊராட்சியில் 150 குடும்பத்திற்கு ஒரு பணியாளர் வீதம் திடக் கழிவு மேலாண்மைத் திட்ட பணிகளில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் வெளி ஆதாரம் முறையில் 66,025 தூய்மைக் காவலர்கள் தேர்வு செய்யப்பட்டு ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் பிரதி மாதம் ரூ.2,600/– வழங்கப்படுகிறது. இவர்கள் வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், பிரித்தல் மற்றும் திடக் கழிவுகளை குழிகளுக்கு பாதுகாப்பான முறையில் அகற்றுதல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

iv. தூய்மைக் காவலர்களுக்கு மாத ஊதியம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் வழங்க 2018–19ஆம் ஆண்டிற்கு

ரூ.206.04 கோடி மாநில நிதிக் குழு மான்யத்திலிருந்து ஒதுக்கீடு செய்து அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

v. திட்ட நிதியிலிருந்து மூன்று சக்கர மிதிவண்டிகள், தூய்மைப்படுத்தத் தேவையான உபகரணங்கள், தூய்மைக் காவலர்களுக்கு மேல் சட்டை, கையுறை மற்றும் தொப்பி ஆகியவை, பிரித்தல் மற்றும் சேமிப்பதற்கான கொட்டகைகள், தெருவில் வைக்கும் குப்பை தொட்டிகள், நறுக்கும் இயந்திரம் ஆகியவை வழங்கப்படுகிறது.

vi. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவை தூய்மைக் காவலர்களை கண்காணிக்கும் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுகிறது.

vii. மக்கிய உரம், மற்றும் மறு சுழற்சி செய்யக்கூடிய கழிவுகளை விற்பனை செய்வதன் மூலம் கிராம ஊராட்சிக்கு கிடைக்கும் வருமானத்தை, கிராம ஊராட்சியின் திடக் கழிவு மேலாண்மைத் திட்ட வங்கிக் கணக்கில் வரவாக்கப்படுகிறது.

**திடக்கழிவு மேலாண்மை கண்காணிப்புக் குழு அமைத்தல்**

தினசரி செயல்பாடுகளை கண்காணிக்க, சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி அளவில் திடக்கழிவு மேலாண்மைக் குழு ஒன்று கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

(1) கிராம ஊராட்சித் தலைவர்,

(2) கிராம ஊராட்சித் துணைத்தலைவர்,

(3) சம்மந்தப்பட்ட வார்டு உறுப்பினர்,

(4) சம்மந்தப்பட்ட குக்கிராமத்தைச் சார்ந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதி ஒருவர்

(5) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் பணித்தளப் பொறுப்பாளர்.

வார்டு உறுப்பினர் மற்றும் குக்கிராமம் பிரதிநிதித்துவம் உடைய / கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர் தங்களின் பகுதிகளில் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகளை கண்காணிப்பார்கள்.

**திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்**

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்,<br>பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) |
| கிராம அளவில் | : | கிராம ஊராட்சித் தலைவர் / தனி அலுவலர் |

# 13. பள்ளிக் கழிப்பறைகளை பராமரித்தல்

## திட்ட துவக்கம்

ஊரக பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் 2015–16 ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## திட்ட நோக்கம்

ஊரக பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

## சிறப்பு அம்சங்கள்

- ❖ ஒவ்வொரு அரசு / ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் உள்ள கழிப்பறையை சுத்தம் செய்ய கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலமாக அல்லது வெளி ஆதார முகமை (Outsourcing) மூலமாக சுகாதார பணியாளர் சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களால் ஈடுபடுத்தப்படுவர்.
- ❖ பள்ளிகளில் மாணவ, மாணவியரின் கழிப்பறை, வகுப்பறை மற்றும் பள்ளி வளாகம் ஆகியவற்றை சுத்தப்படுத்தி சுகாதாரமாக பராமரித்தல் சுகாதார பணியாளரின் பொறுப்பாகும்.
- ❖ தினந்தோறும் இருவேளைகளில், அதாவது காலையிலும் மாலையிலும் கழிப்பறையை கண்டிப்பாக சுத்தப்படுத்தப்பட வேண்டும்.
- ❖ பள்ளி வகுப்பறையை தினந்தோறும் காலை நேரத்தில் கண்டிப்பாக சுத்தப்படுத்த வேண்டும்.
- ❖ பள்ளி வளாகத்தினை வாரத்திற்கு இரண்டு நாட்கள் அதாவது திங்கள் மற்றும் வியாழக் கிழமைகளில் சுத்தம் செய்ய வேண்டும்.
- ❖ மேற்சொல்லப்பட்ட வழக்கமாக சுத்தம் செய்வதுடன், பள்ளிக் கல்வித்துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் பணியாளர்கள் மற்றும் தூய்மைக் காவலர்கள் சேர்ந்து பள்ளி வளாகத்தினை இரண்டு மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது காலாண்டு, அரையாண்டு, வருடாந்திட தேர்வு முடிந்து பள்ளி திறக்கும் முன்போ பள்ளி வளாகத்தினை சுத்தம் செய்வதோடு மட்டுமல்லாது ஒட்டு மொத்த பள்ளியிலும் தூய்மையாக வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
- ❖ வெளி ஆதாரம் மூலம் ஈடுபடுத்தப்படும் சுகாதார பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மாதாந்திர தொகை மற்றும் சுத்தம் செய்ய தேவைப்படும் பொருட்களுக்கு நிதி பள்ளிகளின் தரத்திற்கு ஏற்றவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- ❖ வெளி ஆதாரம் மூலம் ஈடுபடுத்தப்படும் சுகாதார பணியாளர்களுக்கான தொகையை தலைமை ஆசிரியர், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு / வெளி ஆதாரம் முகமை மூலம் பிரதி மாதம் விடுவிப்பார்.

- பள்ளிக்கு அனுமதிக்கப்பட்ட தொகைக்கு சுத்தம் செய்ய வேண்டிய தேவையான பொருட்கள் பள்ளி தலைமை ஆசிரியரால் கொள்முதல் செய்யப்படும்.
- மேற்படி பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் சுத்தம் செய்யும் பொருட்கள் வாங்க தேவையான நிதியை பள்ளி கிராம கல்விக் குழு கணக்கிற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) செலவு அறிக்கை கிடைக்கப்பட்டவுடன் முன்கூட்டியே வழங்குவார்.
- பள்ளி தலைமையாசிரியர்கள் பள்ளிக் கழிப்பறை / வகுப்பறை மற்றும் பள்ளி வளாகம் சுத்தப்படுத்துவதை கண்காணிக்க பொறுப்பாவார்.
- மாதத்தில் ஒருமுறை கிராம ஊராட்சித்தலைவர், வார்டு உறுப்பினர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகம் ஆகியோர் பள்ளிக் கழிப்பறை / வகுப்பறை மற்றும் பள்ளி வளாகத்தை சுத்தமாக வைத்திருப்பதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்வார்கள்.
- மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் கல்வித்துறையை சார்ந்த மாவட்ட அலுவலர்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைப்புக் குழு அரசு/ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சுத்தமாக இருப்பதை கண்காணிக்கும் மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வுகள் மேற்கொள்ளும்.

## நிதி ஒதுக்கீடு

சுகாதார பணியாளர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் தொகையும், தூய்மைப்படுத்த தேவையான பொருட்களை வாங்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகையும் பின்வருமாறு.

| வ. எண் | பள்ளிகள் விபரம் | சுகாதாரப் பணியாளர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் தொகை ரூ. | தூய்மை செய்வதற்கான பொருட்கள் வாங்க மாதந்தோறும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | ஊராட்சி ஒன்றிய பள்ளி /அரசு ஆரம்பப் பள்ளிகள் | 1,000/– | 300/– |
| 2 | ஊராட்சி ஒன்றிய பள்ளி /அரசு நடுநிலைப் பள்ளிகள் | 1,500/– | 500/– |
| 3 | அரசு உயர்நிலைப் பள்ளிகள் | 2,250/– | 750/– |
| 4 | அரசு மேல்நிலைப் பள்ளிகள் | 3,000/– | 1,000/– |

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மமாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்,<br>பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) |

# 14. தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

## நோக்கம்

நக்சலைட்டுகளின் செயல்பாட்டினை கட்டுப்படுத்தும் விதமாகவும், அவர்களின் வளர்ச்சியைத் தடுத்திடும் வகையிலும் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சமூக, பொருளாதார மேம்பாட்டினை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## மேற்கொள்ளப்படும் பணிகள்

- புதிய வீடுகள் கட்டுதல், தொகுப்பு வீடுகள் பழுது நீக்குதல்
- இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பு பயிற்சி, கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்
- மாற்றுத்திறனாளிகள், விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்குத் தனிநபர் உதவி
- ஆவின் பாலகம் கட்டுதல்
- வேளாண் கூலி விவசாயிகளுக்கு பூச்சி மருந்து தெளிப்பான் வாங்குதல், முழு மானியத்துடன் சூரிய சக்தி தண்ணீர் இயந்திரம் வழங்குதல்
- ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் குடிநீர் குழாய் விரிவாக்கம் செய்தல்
- அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்துதல்
- பயன்பாட்டில் இல்லாமல் பழுதடைந்த தனி நபர் கழிவறைக்கு பதிலாக புதிய கழிவறை கட்டுதல், மேலும் தனிநபர் இல்லக் கழிவறை கட்டும் திட்டத்திற்கு தேவைப்படும் மூலப்பொருட்கள் சுய உதவிக் குழுக்கள் மூலம் தயாரித்தல்.
- பள்ளிகளில் ஆர்.ஓ. முறையில் குடிநீர் சுத்திகரிப்பு செய்யும் கருவி நிறுவுதல்.
- அங்கன்வாடி மையங்களில் உள்ள குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல்
- அரசினர் ஆரம்ப சுகாதர நிலையங்களுக்கு மருத்துவ / தொழில் நுட்ப உபகரணங்கள் மற்றும் கருவிகள் வாங்குதல்

## நிதி ஒதுக்கீடு

இத்திட்டத்திற்கு தேவையான நிதி ஆதாரம் 100% மாநில அரசால் வழங்கப்படுகிறது.

**திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்**

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி , சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் |
| | | தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) |

# மத்திய அரசு திட்டங்கள்

## 15. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

### திட்ட செயல்பாடு

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் தமிழகத்தில் முதற்கட்டமாக 2.2.2006 முதல் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய 6 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.

இரண்டாம் கட்டமாக தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி மற்றும் கரூர் ஆகிய 4 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.

1.4.2008 முதல், தமிழகத்தில் இதர 21 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு நடைபெற்று வருகிறது.

### திட்ட நோக்கம்

- ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பினை அளிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தரமான மற்றும் நிலையான சொத்துக்களை உருவாக்குதல்.
- ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் அடிப்படை வளத்தை உருவாக்குதல்.
- சமூகப் பங்களிப்பை உறுதி செய்ய திறம்பட செயலாற்றுதல்.
- ஊராட்சி அமைப்பு முறையை வலுப்படுத்துதல்.


### பணிகள் தெரிவு செய்யும் முறை

ஒவ்வொரு ஊராட்சியிலும் இத்திட்ட விதிமுறைகளின்படி மேற்கொள்ளப்பட உள்ள பணிகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டு கிராம சபையில் தீர்மானம் பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

### வேலை கோருவதற்கான தகுதிகள்

- வேலை செய்ய இயலுகின்ற உடல் திறன் கொண்ட அனைவரும் இத்திட்டத்தில் வேலை பெற தகுதியுடையவர்கள்
- அந்த ஊராட்சியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- எந்த ஒரு சாதாரண உடல் உழைப்பிலான வேலையையும் செய்வதற்கு விருப்பமுடையவராக இருக்க வேண்டும்.
- 18 வது நிரம்பிய ஆண்/பெண் இருபாலரும் வேலை வாய்ப்பு பெற தகுதியுடையவர்.

- வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்பவர்கள் மட்டும் அல்லாமல் வேலை கோரும் மற்றவர்களும் வேலை பெற தகுதியானவர்கள்.
- பணிகளில் குறைந்தபட்சம் 33 சதவிகிதம் பெண்கள் பங்கு பெற வாய்ப்பு அளிக்க வேண்டும்.




**வேலை அடையாள அட்டை பெறுதல்**

**நடைமுறை**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நாளொன்றுக்கு குறைந்தபட்சம் 8 மணி நேரம் (உணவு இடைவேளை 1 மணி நேரத்துடன்) மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அளவு வேலை செய்தால் அரசு நிர்ணயித்த ஊதியம் வழங்கப்படும்.

**திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

- குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948ன்படி, விவசாய (திறன்சாரா) தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.
- ஒரு நபருக்கு ஒரு நாளுக்கான ஊதியம் மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்படுகிறது. 2011–12ல் ரூ.119/– என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 2012 – 13 ஆம் ஆண்டு ரூ.132/– என உயர்த்தப்பட்டது. 2013–14 ஆம் ஆண்டுக்கு ரூ.148/– ஆகவும், 2014–15 ஆம் ஆண்டுக்கு ரூ.167/– ஆகவும், 2015–16 ஆம் ஆண்டுக்கு ரூ.183/– ஆகவும், 2016–17 ஆம் ஆண்டுக்கு ரூ.203/– ஆகவும், 2017–18 ஆம் ஆண்டுக்கு ரூ.205/– எனவும், 2018–19 ஆம் ஆண்டுக்கு ரூ.224/– எனவும் வழங்கப்பட்டு வருகிறது.
- ஆண்கள் மற்றும் பெண்களுக்குச் சமஅளவிலான ஊதியம் வழங்கப்படும்.
- வேலையின் போது விபத்து ஏற்பட்டு முழுமையான ஊனமுற்றாலும் அல்லது உயிரிழப்பு ஏற்பட்டாலும் ரூ.25,000/– இழப்பீட்டு தொகையாக வழங்கப்படும்.
- தற்போது தேசிய மின்னணு, நிதி மேலாண்மை முறை (NeFMS) மூலம் தொழிலாளர்களின் வங்கிக் கணக்கில் ஊதியம் ஈடு செய்யப்படுகின்றது. 15 நாட்களுக்குள் ஊதியத் தொகை வழங்குதல் உறுதிசெய்யப்பட வேண்டும்.

- மூன்றில் ஒரு பங்கு பயனாளிகள், பெண்களாக இருக்க வேண்டும்.
- வேலை நடைபெறும் இடங்களில், குடிநீர், முதலுதவி நிழற்கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.
- வேலை நடைபெறும் இடம், கிராமத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திற்குள் இருக்க வேண்டும். வேலை நடைபெறும் இடம் 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருந்தால், போக்குவரத்து மற்றும் வாழ்வாதாரத் தொகையாக ஊதியத்தில் 10 சதவீதம் கூடுதலாக வழங்கப்படும். எனினும் தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2 கி.மீக்கு உள்ளாக இருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- வழிகாட்டி நெறிமுறைகளின்படி, கிராமத்திற்கான திட்டத் தொகுப்பினை(Shelf of Project), கிராம சபை ஒப்புதல் அளித்தபின், அதில் 50 விழுக்காடு வேலைகள் கிராம ஊராட்சியின் மூலம் செயல்படுத்த ஒதுக்கப்பட வேண்டும்.
- திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான (Unskilled Labour) ஊதியச் செலவு 100 விழுக்காடு, கட்டுமானப் பொருட்களின் செலவினம், திறன் சார்ந்த (Skilled Labour) மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் (Semi-Skilled Labour) ஊதியச் செலவில் 75 விழுக்காடு மத்திய அரசாலும் 25 சதவீதம் மாநில அரசாலும் ஏற்கப்படுகிறது.
- இத்திட்டத்தின் வேலைக்கான ஊதியம் (Labour Component) மற்றும் பொருளுக்கான (Material Component) விகிதாச்சாரம் 60:40 என்று அனுமதிக்கப்பட்டுள்ளது.
- அனைத்து செயல்பாடுகளும் ஒளிவு மறைவின்றி இணையதளத்தில் (www.nrega.nic.in) பதிவுகள் செய்யப்படுகின்றது. எனவே இத்திட்டத்தினைப் பற்றி பொது மக்கள் அனைவரும் இணையதளத்தின் மூலம் தெரிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- ஒப்பந்ததாரர்கள் அல்லது தொழிலாளர்களுக்கு மாற்றான இயந்திரங்களுக்கு அனுமதியில்லை. தற்பொழுது சில பணிகளில் தரம் மற்றும் நீடித்த தன்மை ஆகியவற்றை உறுதி செய்யும் பொருட்டு மனிதனால் செய்ய இயலாத பணிகளில் இயந்திரங்களின் பயன்பாடு அவசியமாகிறது. கிணறுகள் தோண்டுதல், சாலையமைத்தல், கட்டிடங்கள் கட்டுதல், மரம் வளர்ப்பு போன்ற சில பணிகளில் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படிஇயந்திரங்கள் பயன்படுத்தப்படுகிறது.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் சமூகத் தணிக்கையினை, கிராம சபை, அதற்காக அமைக்கப்பட்டுள்ள ‘‘சமூகத் தணிக்கைக் குழு’’ மூலம் மேற்கொள்ளும்.
- குறைகளைத் துரிதமாகத் தீர்க்கும் வகையில், குறை தீர்க்கும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கட்டணம் இல்லாத் தொலைபேசி சேவை ‘‘1299’’ (Toll free Helpline ‘1299’) ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.

- இத்திட்டத்தின் அனைத்துக் கணக்கு மற்றும் ஆவணங்களை பொதுமக்கள் பரிசீலிக்கலாம்.
- இத்திட்டச் செயல்பாடு குறித்து அறிவுரைகள் வழங்கிடவும், கண்காணிக்கவும், மதிப்பீடு செய்யவும், ''தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றம்'' என்ற அமைப்பு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் பிரிவு 12ன்படி அமைக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு பரிந்துரைத்த 7 பதிவேடுகள் மற்றும் வேலை அடையாள அட்டைக்கான இருப்பு பதிவேடு போன்றவை கிராம ஊராட்சிகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**மாற்று திறனாளிகளுக்கான பணிகள் :–**

**சிறப்பு பணிகள்:–**

அரசாணை நிலை எண் 52, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(ம.அ.தி–1) துறை, நாள் 25.06.2012–ன்படி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணித்தளத்தில் மாற்றுத் திறனாளிகள் மேற்கொள்வதற்கான சிறப்பு பணிகள் கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

- பணித்தளத்தில் தொழிலாளர்களுக்கு தண்ணீர் வழங்கும் பணியாளர்
- குழந்தைகளை பராமரிக்கும் பொறுப்பாளர்
- குழந்தைகள் பராமரிப்பு பொறுப்பாளருக்கு உதவியாளர். (ஒவ்வொரு 5 குழந்தைகளுக்கும் ஒரு கூடுதல் உதவியாளர் அமர்த்தலாம்).
- பணித்தளப் பொறுப்பாளர் (Worksite Supervisor/ Mate) முன் அளவீட்டினை மேற்கொள்ள உதவுதல் (100 க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருப்பின் ஒரு மாற்றுத் திறனாளியினை பணித்தள பொறுப்பாளருக்கு உதவியாளராக அமர்த்தலாம்)

**கீழ்கண்ட சிறு பணிகளுக்கும் மாற்றுத் திறனாளிகளை உட்படுத்தலாம்:–**

- பணித்தளத்தில் அகற்றப்பட்ட மரங்களை அப்புறப்படுத்துதல் (இலை, தழைகள் மற்றும் சிறு மரங்கள்)
- ஆழப்படுத்தப்படும் இடங்களில் தண்ணீர் தெளித்தல் (குறிப்பாக கோடை காலங்களில்)
- மண்வெட்டி, கடப்பாறை போன்றவற்றை கொண்டு கரைகளில் கொட்டப்படும் மண்களை சமப்படுத்துதல்
- கரைகளை சமன்படுத்துதல் (Benching)
- கரைகளின் சரிவுப்பகுதியினை சீர்செய்தல்.

**மண் தொடர்பான பணிகள் :–**

- உடல் உழைப்பினை மேற்கொள்ளத் தகுதியுள்ள மாற்றுத் திறனாளிகளை மண்வேலை தொடர்பான பணிகளான முட்புதர்களை அகற்றுதல், ஆழப்படுத்துதல், மரம் நடுதல், மண்மூடுதல் மற்றும் நீர்பாய்ச்சுதல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தலாம்.
- பணித்தளங்களில் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தால், அவர்களை மேலே கூறப்பட்டுள்ள சிறப்புப் பணிகளை மேற்கொள்ள மட்டுமே அனுமதிக்க வேண்டும்.
- பணித்தளங்களில் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் மட்டுமே மண்தொடர்பான பணிகளுக்கு பயன்படுத்தலாம். அப்போது, அவர்கள் 5 அல்லது 10 பேர் கொண்ட குழுவாக பிரிக்கப்பட்டு, சாதாரண தொழிலாளர்கள் மேற்கொள்ள வேண்டிய பணி அளவில் 50 சதவீத அளவினை மட்டுமே அவர்கள் மேற்கொள்ள முன் அளவீடு செய்ய வேண்டும்.

**இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட பணிகள்:–**

**பொதுப் பணிகள் :–**

- புதிய குட்டைகள் அமைத்தல்
- ஏற்கனவே உள்ள குட்டை, குளம், ஊரணி, கோயில் குளங்கள் போன்ற நீர்வள ஆதாரங்களை புனரமைத்தல்.
- நீர்வரத்துக் கால்வாயை தூர்வாருதல்.
- பாசன குளங்களை தூர்வாருதல் மற்றும் கரைகளை பலப்படுத்துதல்
- மண்வரப்பணை மேம்படுத்துதல் (Earthern Bunding)
- மீள்நிரப்புத்தண்டு அமைத்தல் (Recharget Shaft)
- மீள்நிரப்பு குழி அமைத்தல் (Recharget Pit)
- தடுப்பணைகள் கட்டுதல் (வலைகம்பி, கற்பாறைகள் மற்றும் கான்கிரிட்)
- கல்வரப்பணை கட்டுதல் (Stone Bunding)
- ஊறிஞ்சி குழி அமைத்தல் (Soak Pit)
- பிரித்தெடுக்கும் கூடங்கள் கட்டுதல் (Segregation Shed)
- புதிய மண்சாலை மற்றும் ஜல்லி சாலை / சிமெண்ட் சாலை / பேவர் பிளாக் சாலைகளை அமைத்தல்.
- நீர்வள / மண்வள பாதுகாப்பு பணிகள் மற்றும் வெள்ளத் தடுப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.

- வறட்சியினைத் தடுக்கும் வகையில் காடு வளர்ப்பு மற்றும் மரம் நடுதல் பணிகள்

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் திருத்திய அறிவிக்கை–1 பத்தி (4)ல் தெரிவித்துள்ளவாறு கீழ்க்கண்ட பொது உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

- ➢ கிராம ஊராட்சி சேவை மையங்கள்.
- ➢ வட்டார ஊராட்சி சேவை மையங்கள்.
- ➢ அங்கன்வாடி மையங்கள்
- ➢ உணவுதானிய இருப்பு கிடங்குகள்
- ➢ விளையாட்டுத் திடல்கள் அமைத்தல்
- ➢ சுடுகாடுகளை கட்டுதல்
- ➢ மரங்கள் நடுதல் (வட்டாரம் மற்றும் சாலைகளின் இருமருங்கிலும்)
- ➢ மண் புழு உர அலகுகள் அமைத்தல்.

- மகளிர் சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கான கட்டிடங்கள் கட்டுதல்

**தனிநபர் சொத்து உருவாக்கும் பணிகள் :–**

- பண்ணைக் குட்டைகள் அமைத்தல்.
- விவசாயிகளின் நிலங்களில் மரங்கள் நடுதல் மற்றும் நில மேம்பாடு பணிகள்
- தனி நபர் மற்றும் பொதுக் கிணறுகள் அமைத்தல்.
- ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களான பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம், முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் போன்றவற்றை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருமுகப்படுத்தி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் திறன்சாரா பணிகளுக்கான ஊதியக் கூறினை மேற்கொள்ளுதல்.
- தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், சிறு / குறு விவசாயிகள் நிலச் சீர்த்திருத்த திட்ட பயனாளிகள், பிரதமமந்திரி குடியிருப்புத் திட்ட பயனாளிகள் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் ஆகியோரின் நிலங்களில் பாசன வசதிகளை ஏற்படுத்துதல், மரக்கன்றுகளை நடுதல், நில மேம்பாட்டு பணிகள் மற்றும் தோட்டக்கலை சார்ந்த பணிகள்.
- தனி நபர் நிலங்கள் மற்றம் கிராம ஊராட்சி நிலங்களில் மண்புழு உர அலகுகள் அமைத்தல்

- வீடு கட்டும் திட்டப் பயனாளிகளுக்கு நொச்சி செடி வழங்குதல்
- கோழிக் கொட்டகை அமைத்தல்
- ஆட்டுக் கொட்டகை அமைத்தல்
- மாட்டுக் கொட்டகை அமைத்தல்
- கால்நடைகளுக்கான தீவன தண்ணீர் தொட்டி அமைத்தல்

மத்திய அரசு தெரிவித்துள்ளபடி, தகவல், கல்வி மற்றும் தொடர்பு (IEC) ஒரு அங்கமாக ஒளி / ஒலி ஊடகங்கள் மற்றும் திட்ட வழிகாட்டி நெறிமுறைகள், பணி விவரம், பணி செய்ய வேண்டிய அளவு போன்றவை குறித்த மக்கள் தகவல் பலகைகள் ஊராட்சி / குக்கிராமங்கள் / பணித்தளங்களில் நிறுவுதல் மற்றும் கிராம ஊராட்சி / கிராம ஊராட்சி சேவை மையக் கட்டிடங்களில் சுவர் விளம்பரங்கள் எழுதுதல் உள்ளிட்ட பல்வேறு தொடர்பு முறைகள் செயல்படுத்தப்படுகிறது. இதனால், தொழிலாளர்கள் பணி குறித்த கடமைகள் மற்றும் உரிமைகளையும் தெரிந்துகொள்வார்கள்.

**திட்ட செயலாக்கம்**

- திட்டப் பணிகளைத் தெரிவு செய்தல், பணிகளை செயல்படுத்துதல் ஆகியவை கிராம ஊராட்சியின் கடமைகளாகும்.
- கிராம ஊராட்சிகளில் தயார் செய்யப்பட்ட பணிகளின் பட்டியலிலிருந்து (Shelf of Projects) முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஊராட்சிக்குரிய தொழிலாளர்கள் மதிப்பீடு (Labour Budget) அந்த ஊராட்சியின் கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- ஒரு குடியிருப்பில் உள்ளோர் பணி செய்ய வேண்டிய இடத்திற்கு எளிதாக வரும் பொருட்டு, அக்கிராம ஊராட்சிகளில் உள்ள குடியிருப்புகள் தொகுதிகளாக (Clusters) பிரிக்கப்பட்டு, ஒரு தொகுதிக்கு குறைந்தபட்சம் ஒரு பணி செய்திட வேண்டும் (1 work per cluster) என்று ஆணையிடப்பட்டுள்ளது. உதாரணமாக, ஒரு ஊராட்சியில் உள்ள 10 குக்கிராமங்கள், 4 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டால் குறைந்தபட்சம் 4 பணிகள் அவ்வூராட்சியில் நடைபெறும்.
- ஒரு ஊராட்சியில் எத்தனை தொகுதிகள் உள்ளனவோ அத்தனை பணிகள் ஒரே நேரத்தில் செயல்படுத்தப்படுகிறது.

**தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட வாரம் :** வியாழன் முதல் புதன் வரை.

| **தேசிய மின்னணு நிதி மேலாண்மை மூலம் ஊதியம் வழங்குவதற்கான நடைமுறைகள்** | **ஒவ்வொரு நடைமுறைகளுக்குமான கால அளவு (நாட்களில்)** |
|---|---|
| 1. வாரத்திற்கான பணி ஆரம்பித்தல் | வியாழன் |
| 2. தொழிலாளர்களுக்கான தினசரி வருகைப் பட்டியல் இறுதி செய்தல் | புதன் |
| 3. வருகை பதிவேட்டில் தொழில்நுட்ப அலுவலர்களிடம் ஒப்படைத்தல் | 2 நாட்கள் (புதன், வியாழன்) |
| 4. தொழிலாளர்கள் மேற்கொண்ட பணியினை அளவிடுதல் | 3 நாட்கள் (வியாழன் முதல் சனி வரை) |
| 5. தொழிலாளர்கள் மேற்கொண்ட பணியினை மேலளவு செய்தல் | 3 நாட்கள் (வெள்ளி , சனி மற்றும் அடுத்த வார திங்கள்) |
| 6. ஊதிய பட்டியல் தயாரித்தல் (வருகை வேலை குறித்த அளவீடு மற்றும் ஊதிய விகித பட்டியல் தயாரித்தல் குறித்த விவரங்கள் உள்ளீடு செய்தல்). | 5 நாட்கள் (வெள்ளி, சனி, திங்கள்,செவ்வாய் மற்றும் புதன்) |
| 7. ஊதியப் பட்டியல் 100% சரிபார்த்தல் (முதல் கையெழுத்தாளர் – து.வ.வ.அ (மகாதேஊவேஉதி), இரண்டாம் கையெழுத்தாளர் மற்றும் அனுமதிப்பவர் வ.வ.அ.(கி.ஊ.) மற்றும் நிதி பரிமாற்ற ஆணை விடுவித்தல் | 5 நாட்கள் (சனி, திங்கள், செவ்வாய்,புதன், மற்றும் வியாழன்) |

## நிதி ஒதுக்கீடு

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பயனாளிகளுக்கு, **6** நவம்பர் **2016** முதல் தேசிய மின்னணு நிதி மேலாண்மை முறை (Ne-FMS) மூலம் நேரடியாக மத்திய அரசால் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் ஊதியத் தொகை வரவு வைக்கப்படுகிறது. மத்திய அரசிடமிருந்து பெறப்படும் பொருட்கூறு மற்றும் நிர்வாக செலவினத்திற்கான தொகை **1–4–2017** முதல் மின்னனு நிதி மேலாண்மை முறை (e-FMS) மூலம் வழங்கப்படுகிறது.

## மின்னணு வருகைப் பதிவேடு (e-MR)

மத்திய அரசின் வழிகாட்டுதலின் படி, தமிழ் நாட்டில் மின்னணு வருகைப் பதிவேடு (e-MR) வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருவள்ளூர் மாவட்டம் கருணாகரச்சேரி கிராம ஊராட்சியில் மின்னணு வருகைப் பதிவேடு **31.08.2017** அன்று மாதிரி அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

05.10.2017 முதல் மின்னணு வருகைப் பதிவேடு மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் தலா ஒரு கிராம ஊராட்சி வீதம் செயல்படுத்தப்பட்டது.

02.11.2017ல் மாநிலத்தில் உள்ள 50 சதவிகித கிராம ஊராட்சிகளிலும் 16.11.2017–ல் மீதமுள்ள 50 சதவீத கிராம ஊராட்சிகளிலும் மின்னணு வருகைப் பதிவேடு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திட்ட செயல்பாடுகள்**

**1) மாநில அளவில் திட்டத்தினை செயல்படுத்துதல்**

**மாநில வேலை உறுதி மன்றக் குழு**

- மாநில அரசுக்குத் திட்டத்தினை செயல்படுத்திட அறிவுரை வழங்குதல்
- மாநிலத்தில் திட்டம் செயல்படுத்தப்படுவதை கண்காணித்தல்
- மத்தியில் உள்ள வேலை உறுதி மன்றக் குழுவுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்
- ஆண்டறிக்கை தயார் செய்து மாநில சட்டமன்றத்திற்கு அளித்தல்
- குழுவிற்கான மாநில ஒருங்கிணைப்பாளர் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் / ஆணையர் ஆவார்
- இயக்குநர் / ஆணையர் ஊரக வளர்ச்சித் துறை மாநில வேலை உறுதி மன்ற நிதிக்கு ஒருங்கிணைப்பாளராக செயல்படுகிறார்

**2) மாவட்ட அளவில் திட்டத்தினை செயல்படுத்துதல்**

மாவட்ட ஆட்சித் தலைவர் இத்திட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளராகவும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர், இணை திட்ட ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுகின்றனர். அவர்களின் பணி பின்வருமாறு.–

- வட்டார வளர்ச்சி அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து திட்டத்தினை செயல்படுத்திட ஊராட்சிகளில் தயாரிக்கப்பட்ட செயல்திட்டத்தில் இருந்து வேலைகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கி, நிதியினை விடுவித்தல்.
- நடைபெறும் பணிகளை கண்காணித்தல்.
- குறைகள் மற்றும் புகார்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல்
- மாநில அரசுக்கு காலமுறையில் அறிக்கை அனுப்புதல்

**3) வட்டார அளவில் திட்டத்தினை செயல்படுத்துதல்**

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) வட்டார அளவில் திட்ட அலுவலராக செயல்படுவார். அவரின் பணி பின்வருமாறு.–

- ஊராட்சிகளிலிருந்து பணிகளுக்கான செயல்திட்டத்தினை ஒருங்கிணைத்து மாவட்ட நிர்வாகத்திற்கு அனுப்பி வைத்தல்
- தொழிலாளர்களுக்கு உரிய காலத்தில் ஊதியம் வழங்குவதை உறுதி செய்தல் மற்றும் கிராம சபைகள் நடத்திட நடவடிக்கை எடுத்தல்
- ஊராட்சிகளில் பணிகள் நடைபெறுவதை கண்காணித்தல்
- மாவட்ட நிர்வாகத்திற்கு அறிக்கைகளை அனுப்பி வைத்தல்

**4) ஊராட்சி அளவில் திட்டத்தினை செயல்படுத்துதல்**

ஊராட்சி மன்றத் தலைவர் ஊராட்சி திட்ட செயலாக்க அலுவலராக செயல்படுவார். அவரின் பணி பின்வருமாறு.–

- முன்னுரிமை அடிப்படையில் பணிகளை தேர்வு செய்து, கிராம சபையின் ஒப்புதல் பெற்று வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல்
- வேலை அடையாள அட்டை கோருபவர்களின் விவரங்களை பதிவு செய்து அவர்களுக்கு வேலை அட்டை வழங்குதல்
- வேலை நடைபெறுவதை மேற்பார்வையிடுதல்
- தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குதல்
- திட்டத்திற்கான பதிவேடுகள் பராமரித்தல்
- வேலை நடைபெறும் இடங்களில் அடிப்படை வசதிகளை செய்து வைத்தல்
- வேலை நடைபெறும் இடங்களில் பணியாளர்களுக்கு காயம் அல்லது விபத்து ஏற்பட்டால் அதற்கான அறிக்கையினை அனுப்பி வைத்தல்

**திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுகவேண்டிய அலுவலர்கள்**

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்,<br>பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை– 15 |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) |
| ஊராட்சி அளவில் | : | தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) |

## குறை தீர்க்கும் அமைப்பு மற்றும் அணுக வேண்டிய அலுவலர்கள்

| வ. எண். | விபரம் | தொடர்பு அலுவலர் | கால அளவு | மேல் முறையீட்டு அலுவலர் |
|---|---|---|---|---|
| 1. | வேலை அடையாள அட்டை வேண்டி தனிநபர்கள் பதிவு செய்தல் | ஊராட்சி மன்றத் தலைவர் | 15 நாட்கள் | வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) |
| 2. | வேலை வழங்குதல்–வருடத்திற்கு ஒரு குடும்பத்திற்கு 100 நாட்கள் | ஊராட்சி மன்றத் தலைவர் | 15 நாட்கள் | வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) |
| 3. | பணியிடத்தில் அடிப்படை வசதிகள் (குடிநீர் மற்றும் முதலுதவி) | ஊராட்சி மன்றத் தலைவர் | – | வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) |
| 4. | விபத்து அல்லது மரணம் – வேலையின் போது விபத்து ஏற்பட்டு காயமுற்றால் இலவச மருத்துவ உதவி மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கும் நாட்களுக்கு அரை ஊதியம்– | ஊராட்சி மன்றத் தலைவர் | – | வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) |
| 5. | ஊதியம் வழங்குதல் | ஊராட்சி மன்றத் தலைவர் | அதிகபட்சம் 15 நாட்கள் | வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) |
| 6. | தொழிலாளர் குடியிருப்பு பகுதியிலிருந்து 5 கிமீக்கு மேல் பணியிடம் இருந்தால் பயணப்படி (10% ஊதியம்) | ஊராட்சி மன்றத் தலைவர் | | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் , வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) |
| 7. | குறை மற்றும் புகார்களை தெரிவிக்க வேண்டிய இலவச தொலைபேசி எண். “1299” | இணை திட்ட ஒருங்கிணைப்பாளர் | அலுவலக நேரம் | மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் |
| 8. | சமூக தணிக்கை மற்றும் சிறப்பு கிராம சபை | ஊராட்சி மன்றத் தலைவர் | வருடத்திற்கு 4 முறை | வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) |
| 9. | 40 சதவிகிதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளின் 50 சதவிகித வேலைக்கு முழு ஊதியம் வழங்குதல் | ஊராட்சி மன்றத் தலைவர் | – | வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) |

# 16. தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)

## திட்ட துவக்கம்

மத்திய அரசால் முழு சுகாதார திட்டம் 1999ஆம் ஆண்டில் முதலாவதாக அறிமுகப்படுத்தப்பட்டு 2004–ம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் மத்திய அரசால் 1.4.2012 முதல் 'நிர்மல் பாரத் அபியான்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

தற்போது மத்திய அரசால் 2014ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2ம் நாள் முதல், நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் தொடர்ச்சி திட்டமாக தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) தொடங்கப்பட்டுள்ளது.

## திட்ட நோக்கம்

அ) திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழித்து, தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தி ஊரகப் பகுதிகளில், மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்பாடு செய்தல்.

ஆ) 2.10.2019க்குள் தூய்மை பாரதத்தின் இலக்கினை எய்த ஊரகப் பகுதிகளில் சுகாதார மேம்பாட்டின் செயல்பாடுகளை விரைவுபடுத்துதல்.

இ) நிலையான சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்திட ஊராட்சி அமைப்புகள் மற்றும் சமூகங்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் சுகாதாரக் கல்வி மூலம் ஊக்குவித்தல்.

ஈ) நிலையான சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பான வகையில், சிக்கனமான மற்றும் பொருத்தமான தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல்

உ) ஊரகப் பகுதியில் ஒட்டுமொத்த சுகாதாரத்தினை ஏற்படுத்தத் தேவையான இடங்களில் அறிவியல் பூர்வமான திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை முறைகளை, சமூகத்தால் நிர்வகிக்கப்படும் வகையில் ஏற்படுத்துதல்.

## திட்ட செயலாக்கம்

### தனி நபர் இல்லக் கழிப்பிடங்கள்

தனிநபர் கழிப்பிட அலகு தொகை – ரூ.12,000/–

- மத்திய அரசு நிதி – ரூ. 7,200/–
- மாநில அரசு நிதி – ரூ. 4,800/–

**இத்திட்டத்தின் கீழ் ஊக்கத் தொகை பெற தகுதியான ஊரகக் குடும்பங்கள்.**

1. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள்.
2. வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள், வீடு உள்ள நிலமற்ற உழைப்பாளிகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்கள் தலைமையில் செயல்படும் குடும்பங்கள்.

**சமூக சுகாதார வளாகங்கள்**

- மொத்த அலகுத் தொகை – ரூ.2,00,000/–
- மத்திய அரசு நிதி – ரூ.1,20,000/– (60 %)
- மாநில அரசு நிதி – ரூ.60,000/– (30 %)
- சமூகம்/ஊராட்சியின் பங்குத் தொகை – ரூ.20,000/– (10 %)

**திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை :**

கிராம ஊராட்சியில் உள்ள குடியிருப்பு வீடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கீழ் குறிப்பிட்டபடி (மத்திய அரசு : மாநில அரசு) 60 : 40 என்ற விகிதத்தில் அலகுத்தொகை நிர்ணயிக்கப்படும்..

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்,<br>பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) |
| கிராம அளவில் | : | கிராம ஊராட்சித் தலைவர் / தனி அலுவலர் |

# 17. பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)

## திட்டத்தின் நோக்கம்

ஊரக குடியிருப்புத் திட்டமான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் 2016–17–ஆம் ஆண்டு முதல் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) என சீரமைக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) நவம்பர் 20, 2016–ல் துவங்கப்பட்டது. ஊரகப் பகுதிகளில் வாழும் வீடு இல்லாத, குடிசை வீடுகளில் மற்றும் மிகப்பழுதடைந்த வீடுகளில் வசிக்கும் ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிளுடன் கூடிய நிலையான வீடு கட்டித் தருவதே பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) முக்கிய நோக்கமாகும்.

## வீடுகள் ஒதுக்கீடு செய்தல்

- மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர், ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வீடுகள் ஒதுக்கீடு செய்வதை முடிவு செய்வார்.
- பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் மொத்த ஒதுக்கீட்டில் 60 விழுக்காடு ஆதிதிராவிடர் / பழங்குடியின வகுப்பினருக்கும், 40 விழுக்காடு இதர வகுப்பினருக்கும் (சிறுபான்மையினர் உட்பட) ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- மேலும், மொத்த ஒதுக்கீட்டில் 3% வீடுகள் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

## பயனாளிகளுக்குரிய தகுதிகள்

- சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் 2011–ன் அடிப்படையில் கிராம சபை மூலம் பயனாளிகள் கண்டறியப்படுகின்றனர்.
- பயனாளிகளை தேர்ந்தெடுத்தல் மற்றும் முன்னுரிமைப்படுத்துதல் ஆகியன சேர்த்தல் மற்றும் நீக்கல் காரணிகள் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.
- 269 சதுர அடி கொண்ட வீடு கட்டுவதற்கு தேவையான அளவு நிலம் பயனாளிக்கு சொந்தமாக இருக்க வேண்டும்.
- குடும்ப தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவர் பெயரிலோ வில்லங்கமற்ற வீட்டு மனைப்பட்டா இருக்க வேண்டும்.
- பயனாளி அரசின் இதர வீடு கட்டும் திட்டங்களின் கீழ் பயன் பெற்றவராக இருக்கக் கூடாது.

## பணிகளுக்கான மின்னணு அனுமதி வழங்குதல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களால் நில உரிமை, மற்றும் வீடு கட்டுவதற்கு தேவையான அளவு இடம் இருப்பதை உறுதி செய்த பிறகு தகுதியுள்ள பயனாளிகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) மின்னனு அனுமதி ஆணையை வழங்குவார்.

கட்டுமானத்திற்கும், இதர தொழில்நுட்ப அம்சங்களுக்கும், ஒன்றிய / உதவி பொறியாளர்கள் மற்றும் ஒன்றிய மேற்பார்வையாளர்கள் பொறுப்பாவார்கள்.

## நிதி ஆதாரம்

மத்திய, மாநில அரசுகளுக்கிடையே 60:40 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.1,20,000 –ல் மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.72,000 (60%) மற்றும் மாநில அரசின் பங்குத் தொகை ரூ.48,000 (40%) ஆகும். அலகுத் தொகையுடன் கான்க்ரீட் மேற்கூரை அமைப்பதற்காக தமிழக அரசு கூடுதல் மான்யமாக ரூ.50,000 வழங்குகிறது.

ஒவ்வொரு பயனாளிக்கும், அலகுத் தெகையுடன் கூடுதலாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் 90 மனித சக்தி நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்படும் (90 Xரூ224 = ரூ.20160)

மேலும், பயனாளிக்கு தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணிக்கு ரூ.12,000 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்படும்,

## சிறப்பம்சங்கள்

- குடும்பத் தலைவரின் பெயரிலோ அல்லது கணவர் மற்றும் மனைவி ஆகியோர் பெயரிலோ வீடு ஒதுக்கீடு செய்யப்படும்.
- வீட்டின் பரப்பளவு குறைந்தபட்சம் 269 சதுர அடி (அல்லது) 25 சதுர மீட்டருக்கு குறையாமல் இருக்க வேண்டும்.
- பயனாளிகள் தங்களாகவே வீட்டைக் கட்டிக் கொள்ளவேண்டும்.
- ஒவ்வொரு வீடும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்துடன் ஒருங்கிணைந்து தனிநபர் இல்ல கழிப்பறையுடன் கட்டப்பட வேண்டும்.
- பயனாளிகள் கதவுகள் மற்றும் ஜன்னல்களைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ளலாம். பயனாளிகளால் கதவுகள் மற்றும் ஜன்னல்களை ஏற்பாடு செய்ய இயலாத நிலையில், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கதவுகள் மற்றும் ஜன்னல்களை வழங்க ஏற்பாடு செய்து, அதற்கான தொகையினை திட்ட நிதியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளப்படும்.
- கட்டி முடிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டிலும் திட்டத்தின் பெயர், பயனாளியின் பெயர் மற்றும் வீடு கட்டப்பட்ட ஆண்டு ஆகிய விபரங்கள் தெளிவாகத் தெரியும் வகையில் வண்ணத்தினால் எழுதப்படவேண்டும்.

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்,<br>பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை– 15 |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி ) |
| ஊராட்சி அளவில் | : | தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) |

# 18. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

## நோக்கம்

மாநில மற்றும் மத்திய அரசின் திட்டங்களால் ஏற்கனவே உருவாக்கப்பட்ட கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளியினை நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூர் தேவைக்கேற்ப நிலையான சமுதாயச் சொத்துக்கள் மற்றும் சமுதாயக் கட்டமைப்பு பணிகளை தேர்வு செய்து நிரப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டம் 1993–ம் ஆண்டு மத்திய அரசால் துவக்கப்பட்டது.

## நிதி ஒதுக்கீடு

ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் ரூ.5 கோடி நிதியினை மத்திய அரசு ஒதுக்கீடு செய்கிறது.

### மாவட்டங்களை தேர்வு செய்தல்

### அ) மக்களவை உறுப்பினர்

மக்களவை உறுப்பினர்களைப் பொறுத்தவரை அவரவர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலேயே இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### ஆ) மாநிலங்களவை உறுப்பினர்

மாநிலங்களவை உறுப்பினர்களைப் பொறுத்தவரை, அவரவர் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்திற்குள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் பணிகளைப் பரிந்துரைக்கலாம்.

### இ) நியமன உறுப்பினர்

நியமன உறுப்பினர்களைப் பொறுத்தவரை, இந்தியாவில் எந்தப் பகுதியிலும் பணிகளைச் செயல்படுத்தப் பரிந்துரைக்கலாம்.

## ஒருங்கிணைப்பு மாவட்டம் (Nodal District)

நாடாளுமன்ற உறுப்பினர், தனக்குத் தேவையான ஒருங்கிணைப்பு மாவட்டத்தினை (Nodal District) தேர்வு செய்து, புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்துக்கு தெரிவிக்கலாம்.

மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட பகுதி ஒரு மாவட்டத்திற்கும் மேல் இருப்பின், மக்களவை உறுப்பினர் ஏதேனும் ஒரு மாவட்டத்தினை ஒருங்கிணைப்பு மாவட்டமாக தேர்வு செய்யலாம்.

**அனுமதிக்கப்பட்ட பணிகள்**

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது தொகுதிக்குட்பட்ட பகுதியில், நிலையான சொத்துக்களை உருவாக்கிடக் கீழ்கண்ட பணிகளை பரிந்துரைக்கலாம்.

- குடிநீர் பணிகள்
- கல்வி
- மக்கள் நலவாழ்வு
- சுகாதாரம்
- சாலைப் பணிகள்

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பணிகள்**

- நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் 15 விழுக்காடு தாழ்த்தப்பட்ட பிரிவினர் வசிக்கும் பகுதிகளுக்கும், 7.5 விழுக்காடு பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கும் பயன்படுத்த வேண்டும்.
- நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில், பழங்குடியினர் வாழும் பகுதி இல்லையெனில், வரையறுக்கப்பட்ட நிதியினைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வாழும் பகுதிகளுக்கு பயன்படுத்தலாம்.
- அதேபோல், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வாழும் பகுதி இல்லையெனில் பழங்குடியினர் வாழும் பகுதிக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

**இதர பணிகளுக்கான ஒதுக்கீடு**

- வெள்ளம், புயல், சுனாமி, பூகம்பம் மற்றும் வறட்சி போன்ற பேரிடர்களால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் பணிகளை பரிந்துரை செய்யலாம்.
- பேரிடர் பாதிக்கப்படாத பகுதிகளில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர், பேரிடர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் செய்யப்பட வேண்டிய பணிகளுக்காக, இத்திட்டத்தின் கீழ், ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.10 லட்சம் வரை பரிந்துரை செய்யலாம்.
- பேரிடரின் விளைவு கடுமையாக இருப்பின், பாதிக்கப்பட்ட மாவட்டத்திற்கு அதிகபட்சமாக ரூ.50 லட்சம் வரை பணிகளுக்காக பரிந்துரை செய்யலாம்.

**செயல்படுத்தும் முறைகள்**

- இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் அவர்கள் விருப்பத்திற்கிணங்க, வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு, அவர்கள் தொகுதிகளுக்கு செய்ய வேண்டிய பணிகளை மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்ய வேண்டும்.
- மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்படும்.
- நிர்வாக அனுமதி வழங்கிய பின் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் இப்பணிகளை தொடர்புடைய துறையினர் செயல்படுத்துவார்கள்.

**திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்**

| | | |
|---|---|---|
| தொகுதி அளவில் | : | மாநிலங்களவை / மக்களவை உறுப்பினர் |
| மாநில அளவில் | : | இயக்குநர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி , சென்னை –15 |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) |

# 19. பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம்

**நோக்கம்**

சாலை வசதியில்லாத 500–க்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்களுக்கு அனைத்து பருவ காலங்களிலும் பயன்படுத்தத்தக்க வகையில் தேவையான சிறுபாலங்கள் மற்றும் வடிகால் வசதியுடன் கூடிய சாலைகள் அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**செயலாக்கம்**

இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் ஊரகச் சாலைகள் அந்தந்த திட்டஇயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக செயல்படுத்தப்படுகிறது. இதர மாவட்டசாலைகள் சம்மந்தப்பட்ட கோட்டப் பொறியாளர் (தே.நெ) மூலமாக செயல்படுத்தப்படுகிறது.

**நிதி ஒதுக்கீடு**

இத்திட்டம் 60 விழுக்காடு மத்திய அரசின் பங்களிப்பு மற்றும் 40 விழுக்காடு மாநில அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

**பணிகள் தேர்வுமுறை :**

இத்திட்டத்தில் வழிகாட்டு நெறிமுறைகளின்படி 500–க்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்களில் சாலை இணைப்பு வசதி ஏற்படுத்தப்படுகிறது. மேலும், தேசியஊரகச் சாலை மேம்பாட்டு முகமையால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள சாலைத் தொகுப்பில்(Core Network)உள்ள மிகவும் பழுதடைந்த சாலைகளும் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**திட்டத்தில் பயன் பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களைப் பெற அணுக வேண்டிய அலுவலர்கள் :**

| | | |
|---|---|---|
| மாநிலஅளவில் | : | இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை– 15 |
| மாவட்டஅளவில் | : | மாவ ட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டாரஅளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) |

# 20. குறை தீர்க்கும் வழி முறை

ஊராட்சி நிர்வாகம் மற்றும் ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் தொடர்பான குறைகளை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களிடம் தெரிவித்து நிவாரணம் பெறலாம் .

கிராம ஊராட்சிகளின் செயல்பாடு குறித்த புகார்களை வாரந்தோறும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள் கிழமை அன்று நடைபெறும் பொதுமக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரிடத்தில் நேரிடையாக அளிக்கலாம். மேலும் மாதந்தோறும் நடைபெறும் மனு நீதி நாள் கூட்டத்திலும் புகார்கள் தெரிவிக்கலாம்.

மாவட்ட ஆட்சியர்கள், திட்ட இயக்குநர்கள் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை), உதவி இயக்குநர்கள் ( ஊராட்சிகள்) மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்கள் (வளர்ச்சி) ஆகியோர்களின் தொலைபேசி எண்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## மாவட்ட ஆட்சித் தலைவர்

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | குறியீடு எண். | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | | | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|---|---|---|
| | | | தொலைபேசி எண். | | நிகரி | |
| 1 | காஞ்சிபுரம் | 044 | 27237433 | 27237424 | 27238477 | collrkpm@tn.nic.in |
| 2 | திருவள்ளூர் | 044 | 27661600 | 27662451 | 27662299 | collrtlr@tn.nic.in |
| 3 | கடலூர் | 04142 | 230999 | 230651 | 230555 | collrcud@tn.nic.in |
| 4 | விழுப்புரம் | 04146 | 222450 | 223264 | 222470 | collrvpm@tn.nic.in |
| 5 | வேலூர் | 0416 | 2252345 | 2252501 | 2253034 | collrvel@tn.nic.in |
| 6 | திருவண்ணாமலை | 04175 | 233333 | 232260 | 233026 | collrtvm@tn.nic.in |
| 7 | சேலம் | 0427 | 2452233 | 2451172 | 2400700 | collrslm@tn.nic.in |
| 8 | நாமக்கல் | 04286 | 281100 | 281101 | 281106 | collr@nmk.com |
| 9 | தர்மபுரி | 04342 | 230500 | 234444 | 230886 | collrdpi@tn.nic.in |
| 10 | கிருஷ்ணகிரி | 04343 | 239500 | 239301 | 239300 | collrkgi@tn.nic.in |
| 11 | ஈரோடு | 0424 | 2266700 | 2260207 | 2262555 | collrerd@tn.nic.in |
| 12 | திருப்பூர் | 0421 | 2218811 | 2474722 | 2218822 | collrtup@tn.nic.in |
| 13 | கோயம்புத்தூர் | 0422 | 2301320 | 2301114 | 2301523 | collrcbe@tn.nic.in |
| 14 | உதகமண்டலம் | 0423 | 2442344 | 2442450 | 2443971 | collrnlg@tn.nic.in |
| 15 | தஞ்சாவூர் | 04362 | 230102 | 230121 | 230857 | collrtnj@tn.nic.in |
| 16 | நாகப்பட்டினம் | 04365 | 252700 | 252500 | 253048 | collrngp@tn.nic.in |
| 17 | திருவாரூர் | 04366 | 223344 | 221000 | 220889 | collrtvr@tn.nic.in |
| 18 | திருச்சிராபள்ளி | 0431 | 2415358 | 2415031 | 2411929 | collrtry@tn.nic.in |
| 19 | கரூர் | 04324 | 257555 | 256508 | 257800 | collrkar@tn.nic.in |
| 20 | பெரம்பலூர் | 04328 | 225700 | 224200 | 224455 | collrpmb@tn.nic.in |
| 21 | அரியலூர் | 04329 | 223351 | 228336 | 223351 | collrari@tn.nic.in |
| 22 | புதுக்கோட்டை | 04322 | 221663 | 221624 | 221690 | collrpdk@tn.nic.in |
| 23 | மதுரை | 0452 | 2531110 | 2532501 | 2533272 | collrmdu@tn.nic.in |
| 24 | தேனி | 04546 | 253676 | 255401 | 251466 | collrthn@tn.nic.in |
| 25 | திண்டுக்கல் | 0451 | 2461199 | 2460080 | 2461082 | collrdgl@tn.nic.in |
| 26 | இராமநாதபுரம் | 04567 | 231220 | 230056 | 230558 | collrrmd@tn.nic.in |
| 27 | விருதுநகர் | 04562 | 252525 | 252600 | 252500 | collrvnr@tn.nic.in |
| 28 | சிவகங்கை | 04575 | 241466 | 240391 | 241581 | collrsvg@tn.nic.in |
| 29 | திருநெல்வேலி | 0462 | 2501222 | 2501032 | 2500224 | collrtnv@tn.nic.in |
| 30 | தூத்துக்குடி | 0461 | 2340600 | 2340601 | 2340606 | collrtut@tn.nic.in |
| 31 | கன்னியாகுமரி | 04652 | 279555 | 279090 | 260999 | collrkkm@tn.nic.in |

## திட்ட இயக்குனர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | குறியீடு எண். | அலுவலகம் | | | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|---|---|---|
| | | | தொலைபேசி எண். | | நிகரி | |
| 1 | காஞ்சிபுரம் | 044 | 27238651 | 27237153 | 27238651 | drdakpm@tn.nic.in |
| 2 | திருவள்ளூர் | 044 | 27663808 | 27663731 | 27661517 | drdatlr@tn.nic.in |
| 3 | கடலூார் | 04142 | 294278 | 294159 | 294161 | drdacud@tn.nic.in |
| 4 | விழுப்புரம் | 04146 | 223432 | 222481 | 222481 | drdavpm@tn.nic.in |
| 5 | வேலூார் | 0416 | 2253334 | 2253177 | 2258348 | drdavel@tn.nic.in |
| 6 | திருவண்ணாமலை | 04175 | 233720 | 232172 | 232639 | drdatvm@tn.nic.in |
| 7 | சேலம் | 0427 | 2451236 | 2451563 | 2451236 | drdaslm@tn.nic.in |
| 8 | நாமக்கல் | 04286 | 280107 | 280108 | 280107 | drdanmk@tn.nic.in |
| 9 | தர்மபுரி | 04342 | 230128 | 234147 | 230733 | drdadpi@tn.nic.in |
| 10 | கிருஷ்ணகிரி | 04343 | 231800 | 230022 | 239364 | drdakgi@tn.nic.in |
| 11 | ஈரோடு | 0424 | 2260444 | 2260555 | 2260555 | drdaerd@tn.nic.in |
| 12 | திருப்பூர் | 0421 | 2971145 | 2971146 | 2218999 | drdatup@gmail.com |
| 13 | கோயம்புத்தூார் | 0422 | 2301547 | 2300756 | 2304445 | drdacbe@tn.nic.in |
| 14 | உதகமண்டலம் | 0423 | 2443090 | 2442053 | 2443090 | drdangl@tn.nic.in |
| 15 | தஞ்சாவூர் | 04362 | 231412 | 231190 | 270065 | drdatnj@tn.nic.in |
| 16 | நாகப்பட்டினம் | 04365 | 253080 | 253051 | 253080 | drdang@tn.nic.in |
| 17 | திருவாரூர் | 04366 | 222168 | 227100 | 227100 | drdatvr@tn.nic.in |
| 18 | திருச்சிராபள்ளி | 0431 | 2464851 | 2414153 | 2410580 | drdatry@tn.nic.in |
| 19 | கரூர் | 04324 | 257141 | 257601 | 256600 | drdakar@tn.nic.in |
| 20 | பெரம்பலூார் | 04328 | 225277 | 225377 | 225377 | drdapmb@tn.nic.in |
| 21 | அரியலூார் | 04329 | 228564 | 228565 | 223351 | drdaari@tn.nic.in |
| 22 | புதுக்கோட்டை | 04322 | 223766 | 221766 | 2323118 | drdapdk@tn.nic.in |
| 23 | மதுரை | 0452 | 2532636 | 2530026 | 2531635 | drdamdu@tn.nic.in |
| 24 | தேனி | 04546 | 254517 | 254902 | 254902 | drdathn@tn.nic.in |
| 25 | திண்டுக்கல் | 0451 | 2460648 | 2461925 | 2460087 | drdatndgl@tn.nic.in |
| 26 | இராமநாதபுரம் | 04567 | 231375 | 230630 | 230967 | drdarmd@tn.nic.in |
| 27 | விருதுநகர் | 04562 | 252733 | 252809 | 252703 | drdavnr@tn.nic.in |
| 28 | சிவகங்கை | 04575 | 240388 | 242002 | 244272 | drdasvg@tn.nic.in |
| 29 | திருநெல்வேலி | 0462 | 2500378 | 2500611 | 2501309 | drdatnv@tn.nic.in |
| 30 | தூத்துக்குடி | 0461 | 2340575 | 2341003 | 2340088 | drdatut@tn.nic.in |
| 31 | கன்னியாகுமரி | 04652 | 279889 | 279673 | 279889 | drdakkm@tn.nic.in |

## உதவி இயக்குனர், (ஊராட்சிகள்)

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | அலுவலகம் | | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|---|
| | | குறியீடு எண். | தொலைபேசி எண். | |
| 1 | காஞ்சிபுரம் | 044 | 27237175 | adptskpm@tn.nic.in |
| 2 | திருவள்ளூர் | 044 | 27660446 | adptstlr@tn.nic.in |
| 3 | கடலூர் | 04142 | 221083 | adptscud@tn.nic.in |
| 4 | விழுப்புரம் | 04146 | 277167 | adptsvpm@tn.nic.in |
| 5 | வேலூர் | 0416 | 2553153 | adptsvel@tn.nic.in |
| 6 | திருவண்ணாமலை | 04175 | 232784 | adptstvm@tn.nic.in |
| 7 | சேலம் | 0427 | 2451632 | adptsslm@tn.nic.in |
| 8 | நாமக்கல் | 04286 | 280152 | adptsnmk@tn.nic.in |
| 9 | தர்மபுரி | 04342 | 232662 | adptsdpi@tn.nic.in |
| 10 | கிருஷ்ணகிரி | 04343 | 232899 | adptskgi@tn.nic.in |
| 11 | ஈரோடு | 0424 | 2660087 | adptserd@tn.nic.in |
| 12 | திருப்பூர் | 0421 | 2971166 | adptstup@gmail.com |
| 13 | கோயம்புத்தூர் | 0422 | 2303509 | adptscbe@tn.nic.in |
| 14 | உதகமண்டலம் | 0423 | 2444052 | adptsngl@tn.nic.in |
| 15 | தஞ்சாவூர் | 04362 | 236258 | adptstnj@tn.nic.in |
| 16 | நாகப்பட்டினம் | 04365 | 253055 | adptsng@tn.nic.in |
| 17 | திருவாரூர் | 04366 | 221359 | adptstvr@tn.nic.in |
| 18 | திருச்சிராபள்ளி | 0431 | 2464058 | adptstry@tn.nic.in |
| 19 | கரூர் | 04324 | 256952 | adptskar@tn.nic.in |
| 20 | பெரம்பலூர் | 04328 | 277705 | adptspmb@tn.nic.in |
| 21 | அரியலூர் | 04329 | 228173 | adptsari@tn.nic.in |
| 22 | புதுக்கோட்டை | 04322 | 222171 | adptspdk@tn.nic.in |
| 23 | மதுரை | 0452 | 2533288 | adptsmdu@tn.nic.in |
| 24 | தேனி | 04546 | 262729 | adptsthn@tn.nic.in |
| 25 | திண்டுக்கல் | 0451 | 2427392 | adptstndgl@tn.nic.in |
| 26 | இராமநாதபுரம் | 04567 | 230431 | adptsrmd@tn.nic.in |
| 27 | விருதுநகர் | 04562 | 252765 | adptsvnr@tn.nic.in |
| 28 | சிவகங்கை | 04575 | 240283 | adptssvg@tn.nic.in |
| 29 | திருநெல்வேலி | 0462 | 2573219 | adptstnv@tn.nic.in |
| 30 | தூத்துக்குடி | 0461 | 2340597 | adptstut@tn.nic.in |
| 31 | கன்னியாகுமரி | 04652 | 279882 | adptskkm@tn.nic.in |

## மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | குறியீடு எண். | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|---|---|
| | | | தொலைபேசி எண். | நிகரி | |
| 1 | காஞ்சிபுரம் | 044 | 27232198,27238838 | 27237789 | papdkpm@tn.nic.in |
| 2 | திருவள்ளூர் | 044 | 27662301 | 27665248 | papdtlr@tn.nic.in |
| 3 | கடலூர் | 04142 | 284567/562 | 294056 | papdcud@tn.nic.in |
| 4 | விழுப்புரம் | 04146 | 222664,223603 | 222470 | papdvpm@tn.nic.in |
| 5 | வேலூர் | 0416 | 2252718,2253265 | 2253265 | papdvel@tn.nic.in |
| 6 | திருவண்ணாமலை | 04175 | 232089,233023 | 232089 | papdtvm@tn.nic.in |
| 7 | சேலம் | 0427 | 2450367,2451683 | 2452960 | papdslm@tn.nic.in |
| 8 | நாமக்கல் | 04286 | 280634,281114 | 280634 | papdnmk@tn.nic.in |
| 9 | தர்மபுரி | 04342 | 230001,230561 | 230775 | papddpi@tn.nic.in |
| 10 | கிருஷ்ணகிரி | 04343 | 236200,233933 | 236200 | papdkgi@tn.nic.in |
| 11 | ஈரோடு | 0424 | 2268679,2266766 | 2268679 | papderd@tn.nic.in |
| 12 | திருப்பூர் | 0421 | 2971178 /77 | 2218766 | papdtup@gmail.com |
| 13 | கோயம்புத்தூர் | 0422 | 2300712,2303712 | 2303712 | papdcbe@tn.nic.in |
| 14 | உதகமண்டலம் | 0423 | 2443937,2443829 | 2443971 | papdngl@tn.nic.in |
| 15 | தஞ்சாவூர் | 04362 | 237047,238170 | 230857 | papdtnj@tn.nic.in |
| 16 | நாகப்பட்டினம் | 04365 | 253049,253081 | 253048 | papdng@tn.nic.in |
| 17 | திருவாரூர் | 04366 | 221003,221360 | 226045 | papdtvr@tn.nic.in |
| 18 | திருச்சிராபள்ளி | 0431 | 2410876,2412307 | 2411929 | papdtry@tn.nic.in |
| 19 | கரூர் | 04324 | 257700 | 257700 | papdkar@tn.nic.in |
| 20 | பெரம்பலூர் | 04328 | 277901,277956 | 224555 | papdpmb@tn.nic.in |
| 21 | அரியலூர் | 04329 | 228901/902 | 228903 | papdari@tn.nic.in |
| 22 | புதுக்கோட்டை | 04322 | 221698,226624 | 221658 | papdpdk@tn.nic.in |
| 23 | மதுரை | 0452 | 2531678,2532501 | 2531678 | papdmdu@tn.nic.in |
| 24 | தேனி | 04546 | 254753,250066 | 250962 | papdthn@tn.nic.in |
| 25 | திண்டுக்கல் | 0451 | 2460088,2460082 | 2432133 | papdtndgl@tn.nic.in |
| 26 | இராமநாதபுரம் | 04567 | 231672,230059 | 231672 | papdrmd@tn.nic.in |
| 27 | விருதுநகர் | 04562 | 252013 | 252500 | papdvnr@tn.nic.in |
| 28 | சிவகங்கை | 04575 | 240389,240391 | 241525 | papdsvg@tn.nic.in |
| 29 | திருநெல்வேலி | 0462 | 2501036 | 2501036 | papdtnv@tn.nic.in |
| 30 | தூத்துக்குடி | 0461 | 2340579,2340598 | 2340598 | papdtut@tn.nic.in |
| 31 | கன்னியாகுமரி | 04652 | 279391 | 278019 | papdkkm@tn.nic.in |

# அலுவலக கைபேசி எண்கள்

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | திட்ட இயக்குனர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) | உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 7373704201 | 7402606003 | 7402606005 |
| 2 | திருவள்ளூர் | 7373704202 | 7402606110 | 7402606111 |
| 3 | கடலூர் | 7373704203 | 7402606217 | 7402606219 |
| 4 | விழுப்புரம் | 7373704204 | 7402606325 | 7402606326 |
| 5 | வேலூர் | 7373704205 | 7402606575 | 7402606606 |
| 6 | திருவண்ணாமலை | 7373704206 | 7402606609 | 7402606611 |
| 7 | சேலம் | 7373704207 | 7402606744 | 7402606746 |
| 8 | நாமக்கல் | 7373704208 | 7402606852 | 7402606854 |
| 9 | தர்மபுரி | 7373704209 | 7402606939 | 7402606941 |
| 10 | கிருஷ்ணகிரி | 7373704210 | 7402606997 | 7402607002 |
| 11 | ஈரோடு | 7373704211 | 7402607079 | 7402607082 |
| 12 | திருப்பூர் | 7373704212 | 7402607160 | 7402607162 |
| 13 | கோயம்புத்தூர் | 7373704213 | 7402607246 | 7402607248 |
| 14 | உதகமண்டலம் | 7373704231 | 7402608688 | 7402608690 |
| 15 | தஞ்சாவூர் | 7373704214 | 7402607335 | 7402607336 |
| 16 | நாகப்பட்டினம் | 7373704215 | 7402607429 | 7402607431 |
| 17 | திருவாரூர் | 7373704216 | 7402607516 | 7402607518 |
| 18 | திருச்சிராபள்ளி | 7373704217 | 7402607671 | 7402607593 |
| 19 | கரூர் | 7373704218 | 7402607683 | 7402607685 |
| 20 | பெரம்பலூர் | 7373704220 | 7402607783 | 7402607785 |
| 21 | அரியலூர் | 7373704219 | 7402607734 | 7402607736 |
| 22 | புதுக்கோட்டை | 7373704221 | 7402607871 | 7402607859 |
| 23 | மதுரை | 7373704222 | 7402607921 | 7402607923 |
| 24 | தேனி | 7373704223 | 7402608011 | 7402608013 |
| 25 | திண்டுக்கல் | 7373704224 | 7402608078 | 7402608079 |
| 26 | இராமநாதபுரம் | 7373704225 | 7402608156 | 7402608158 |
| 27 | விருதுநகர் | 7373704226 | 7402608263 | 7402608260 |
| 28 | சிவகங்கை | 7373704227 | 7402608350 | 7402608351 |
| 29 | திருநெல்வேலி | 7373704228 | 7402608422 | 7402608423 |
| 30 | தூத்துக்குடி | 7373704229 | 7402608541 | 7402608543 |
| 31 | கன்னியாகுமரி | 7373704230 | 7402608624 | 7402608627 |

**மாநில அளவில் கீழ் குறிப்பிட்ட முகவரியில் அணுகலாம்.**

இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி,
பனகல் கட்டிடம், சைதாப்பேட்டை, சென்னை – **600 015.**
தொலைபேசி எண் **– 044 – 24338690**, நிகரி எண் **– 044 – 24343205**
மின்னஞ்சல் முகவரி **–** drd.tn@nic.in

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

# 21. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**

தமிழ்நாட்டில் மகளிரை சுய உதவிக்குழுக்களாக அமைத்து, திறன் வளர் பயிற்சிகள் வழங்கி, கூட்டமைப்புகள் மூலம் ஒருங்கிணைத்து, வங்கிகள் மூலம் கடனுதவிகள் பெறச் செய்து, சிறு தொழில்களில் ஈடுபடுத்தி வருவாயைப் பெருக்குவதன் மூலம் வறுமையை குறைத்து சமுதாய மற்றும் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்திட வேண்டும் என்பதற்காக 'தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்'1983 நிறுவப்பட்டது. இந்நிறுவனம், மாநிலத்திலுள்ள வறுமையில் வாடும் ஏழை மக்களுக்கு நீடித்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித் தரும் நோக்கத்துடன் 2012–13ஆண்டிலிருந்து தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினை செயல்படுத்தி வருகிறது.

**1. நிதி உள்ளாக்கம்:**

**சுய உதவிக் குழுக்களுக்கான திட்டங்களும் அதன் செயல்பாடுகளும்**

**அ. சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் உதவி பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்**

- குறைந்தபட்சம் 6 மாத காலம் முடிவுற்ற சுய உதவிக்குழுக்கள்
- சுய உதவி குழுக்கள் கீழ்கண்டவற்றை தவறாது கடைபிடித்திருக்க வேண்டும்.
    1. கூட்டங்கள் நடத்துதல்
    2. சேமிப்பு
    3. உள்கடன் கொடுத்தல்
    4. கடன் வசூலித்தல்
    5. பேரேடுகள் பராமரித்தல்
- தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**திட்டத்தின் செயல்பாடு**

- வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களை மேற்கொள்ள வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் அளிக்கப்பட்டு சுய உதவிக்குழு பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வழிவகை செய்யப்படும்.
- சுய உதவிக்குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார நடடிவக்கைகள் நிலைத்த தன்மையை அடைய இரண்டாவது மறுகடன் மற்றும் தொடர் மறுகடன் இணைப்பு வங்கிகள் மூலமாக வழங்கப்படும்.

**கடன் அளவு:–**

வங்கிகள் மூலம் முதல் கடன் இணைப்பாக – ரூபாய் 1,00,000/–

இரண்டாவது – ரூபாய் 2,00,000/–

மூன்றாவது கடன் – ரூபாய் 3,00,000/–

நான்காவது – ரூபாய் 5,00,000 முதல் 10,00,000 வரை வழங்கப்படும்.

**தொடர்புகொள்ளவேண்டிய அலுவலர்**

திட்ட இயக்குநர்

மாவட்ட இயக்க மேலாண்மை அலகு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

**சுய உதவிக் குழுக்களுக்கான வட்டி மானியம்:–**

மத்திய அரசு வட்டிமானிய திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளிடமிருந்து பெறப்படும் 3 லட்சம் ரூபாய் வரையிலான கடன் தொகையின் மீது 7 விழுக்காட்டிற்கு மேல் விதிக்கப்படும் வட்டித் தொகையில் அதிகபட்சமாக 5.5 விழுக்காடு மட்டும் வட்டிமானியமாக தமிழ்நாட்டில் தர்மபுரி, கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல் வேலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் தவிர நீங்களாக 22 மாவட்டங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினால் வழங்கப்படுகிறது.

இத்திட்டம் தருமபுரி, கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல் வேலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் மத்திய அரசால் நேரிடையாக செயல்படுத்தப்படுகிறது.

**சிறப்பாகச் செயல்படும் வங்கியாளருக்கான விருது:–**

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு வழங்குவதில் சிறப்பாக செயல்படும் வங்கியாளர்களை ஊக்குவிக்கும் விதத்தில் மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறந்த கீழ்காணும் வங்கி /வங்கி கிளைகளுக்கு விருதுகள் வழங்கப்படுகிறது.

| வ. எண் | விருதுகளின் பெயர் | பரிசுவிபரம் |
|---|---|---|
| அ) | மாநிலஅளவில் சிறப்பாக செயல்பட்ட வங்கிக்கான விருது | முதல் மூன்று வங்கிகளுக்கு– நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் |
| ஆ) | மாநிலஅளவில் சிறப்பாக செயல்பட்ட– சுய உதவிக் குழு /பெண்களுக்கான தனி வங்கிக்கிளைக்கான விருது | முதல்பரிசு– ரூ.1 லட்சம்<br>இரண்டாவதுபரிசு– ரூ.75,000/– |
| இ) | மாநிலஅளவில் சிறப்பாக செயல்பட்ட– பிற வங்கிக் கிளைக்கான விருது | முதல்பரிசு– ரூ.1 லட்சம்<br>இரண்டாவதுபரிசு– ரூ.75,000/–<br>மூன்றாம் பரிசு– ரூ.50,000/– |
| ஈ) | மாவட்ட அளவில் சிறந்த வங்கிக்கான விருது | ஒரு நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் |
| உ) | மாவட்ட அளவில் சிறந்த வங்கிக் கிளைக்கான விருது | முதல்பரிசு ரூ.15,000/–<br>இரண்டாவதுபரிசு– ரூ,10,000/–<br>மூன்றாவதுபரிசு– ரூ.5,000/– |

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்குப் பெருங்கடன் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்**

- தர மதிப்பீட்டில் தேர்வு பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்

## திட்டத்தின் செயல்பாடு

- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளால் வங்கிகளிலிருந்து கடன் பெற்று உறுப்பினர் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்கப்படுகின்றன.

## வழங்கப்படும் கடன் தொகை

- கடன் விண்ணப்பம் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு, கடன் தேவை மற்றும் நுண்கடன் திட்டத்தின் அடிப்படையில் பெருங்கடனுக்கான தொகை நிர்ணயம் செய்யப்படும்.

- பொதுவாக பெருங்கடன் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக இணைந்துள்ள குழுக்களின் எண்ணிக்கை அடிப்படையில் ரூ.20 இலட்சம் முதல் ரூ. 1 கோடி வரை பெறப்பட்டு, உறுப்பினர் குழுக்களுக்கு அவர்களது தேவையின் அடிப்படையில் தொழில் துவங்கிட மற்றும் தொழில் மேம்பாட்டுக்கும் கடனாக வழங்கப்படும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**

திட்டஇயக்குநர்,

மாவட்ட இயக்க மேலாண்மைஅலகு,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

அனைத்து மாவட்டங்கள்.

**2. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்:**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், மிகவும் வறிய நிலையில் உள்ள ஏழை மக்களைக் கண்டறிந்து சுய உதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்து அவர்களுக்கான நிலைத்த தன்மையுடைய அமைப்புகளை உருவாக்கி பல்வேறு திறன் பயிற்சிகள் மூலம் வலுப்படுத்தி, இலாபம் தரக்கூடிய சுய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதன் மூலம் அவர்களது வாழ்வாதார நிலையை உயர்த்தி, வறுமையை ஒழிப்பதே இவ்வியக்கத்தின் குறிக்கோளாகும்.

தமிழ்நாட்டிலுள்ள 31 ஊரக மாவட்டங்களில் மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட ஏழை மக்களின் குடும்பங்களை வறுமையிலிருந்து விடுபடச் செய்யும் நோக்கில் வலுவான மற்றும் உயிரோட்டமான மக்கள் அமைப்புகளை உருவாக்கி, வாழ்வாதாரத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை பெற வழிவகை செய்வதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

**சமுதாய ஒருங்கிணைப்பு மற்றும் சமுதாய உள்ளாக்கம்:**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் "அனைத்து கிராம ஊராட்சிகளிலிருந்தும் தகுதியான ஊரக ஏழை மக்கள் குடும்பங்கள் மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டு அதன் விவரங்கள் கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறப்பட்டது. சமுதாய ஒருங்கிணைப்பில் தகுதியான ஊரக ஏழை குடும்பங்களிலிருந்து குனறந்தபட்சம் ஒரு மகளிராவது மகளிர் சுய உதவிக் குழுவில் சேர்க்கப்படுகிறது. மக்கள் நிலை ஆய்வில் கண்டறியப்பட்டவர்களில் நலிவுற்றோர், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், மாற்றுத் திறனாளி, முதியோர் மற்றும் சிறுபான்மையினர் போன்றோர்களுக்கு முன்னுரிமை அளித்து சுய உதவிக் குழுவில் இணைக்க சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

**மகளிர் சுய உதவிக்குழு அமைத்தல்:**

ஒரே கிராமத்தில் ஒருமித்த கருத்துடைய 18 வயது முதல் 60 வயது வரை உள்ள மகளிர் 12 முதல் 20 எண்ணிக்கையில் ஒன்றிணைந்து தங்களின் முன்னேற்றத்திற்காகவும், சமூக வளர்ச்சிக்காகவும் குழுவாக சேர்ந்து செயல்படுவதாகும். மேலும் மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர்கள் மற்றும் முதியோர்கள் குறைந்த பட்சம் 5 நபர்களைக் கொண்டும் சிறப்பு குழுக்களாக அமைக்கப்படுகிறது.

**புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கும் வழிமுறைகள்:**

மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட ஏழை மக்களைக் கொண்டு குழுக்கள் அமைக்க தொடர்ந்து கூட்டங்கள் நடத்தி தீர்மானம் நிறைவேற்றுதல், சுய உதவிக் குழுவில் இணைவதன் அவசியத்தை உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தல் (சமூக ரீதியிலான மற்றும் பொருளாதார ரீதியாக முன்னேற்றம்). மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு தனி வங்கி கணக்கு துவங்கி செயல்படுத்துதல்.

**சுய உதவிக் குழு உறுப்பினர் தகுதிகள்:**

1. மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட ஏழை மக்கள் ஒரே கிராமம் அல்லது ஒரே பகுதியைச் சேர்ந்தவர்கள் / வசிப்பவர்களாக இருக்க வேண்டும்.
2. வயது 18 முதல் 60 வயதிற்கு உட்பட்டவர்கள்.
3. குறைந்தபட்சம் 12 முதல் 20 வரை மகளிர்கள் குழு உறுப்பினராகலாம்.

**மகளிர் சுய உதவிக் குழுவின் செயல்பாடுகள்:**

புதிய சுய உதவிக் குழுக்கள் கீழ்கண்டவாறு ஐந்து அம்ச கொள்கைகளை பின்பற்றப்பட்டு வருகிறது.

1. உறுப்பினர்கள் தொடர் கூட்டங்கள் நடத்தி குழுவின் அனைத்து செயல்பாடுகளிலும் பங்கேற்றல், உறுப்பினர்களின் தொடர் சேமிப்பு, உறுப்பினர்களுக்கு உட்கடன் கொடுத்தல், கடனை திரும்ப செலுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் தொடர்ந்து கணக்கு பதிவேடுகள் பராமரித்து வெளிப்படை தன்மையை உறுதிப்படுத்துதல்.
2. மகளிர் சுய உதவிக் குழுக்களில் தீர்மான புத்தகம், சேமிப்பு மற்றும் வருகைப் பதிவேடு, ரொக்கப் புத்தகம், பொதுப்பேரேடு மற்றும் உறுப்பினர் பாஸ்புத்தகங்கள் போன்ற நிலையான பதிவேடுகள் பராமரிக்கப்படும்.

**மகளிர் சுய உதவிக் குழுக்களின் நிதி ஆதாரங்கள்:**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தால் அமைக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் நிலைத்த தன்மையுடன் செயல்பட பின்வருமாறு நிதி ஆதாரம் அளிக்கப்படும்.

**1. சுழல்நிதி:**

மூன்று மாதங்கள் முடிவடைந்த புதிய மகளிர் சுய உதவிக் குழுக்களை தர ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு ரூ.15,000/– சுழல் நிதியாக வழங்கப்படும். இந்நிதியை தங்களது சேமிப்பு போலவே கருதி சுழல்நிதியை பயன்படுத்தலாம், உட்கடனாகவும் உறுப்பினர்களுக்கு சிறு நிதியாக வழங்கப்படும்.

**2. சமுதாய முதலீட்டு நிதி:**

சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார செயல்பாடுகளுக்காக கடனாக வழங்கப்படும் தொகை சமுதாய முதலீட்டு நிதியாகும்.

சமுதாய முதலீட்டு நிதியானது கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களிலிருந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு மாற்றப்பட்டு பிறகு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலிருந்து தகுதியான சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விடுவிக்கப்படுகிறது. சுய உதவிக் குழுவிற்கு அதிகபட்ச தொகையாக ரூ.75,000 வீதம் ஆண்டிற்கு 9% வட்டியுடன் கடனாக வழங்கப்படுகிறது. இத்தொகை சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் கூட்டமைப்பின் மூலம் கடனாக விடுவிக்கப்படுகிறது.

**3. நலிவுற்றோர் மேம்பாட்டு நிதி:**

மக்கள் நிலை ஆய்வின்போது மாற்றுத்திறனாளி மற்றும் நலிவுற்றோர் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு நலிவுற்றோர் மேம்பாட்டு நிதியாக ரூ.10,000/– முதல் ரூ. 25,000/– வரை தனி நபர் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. நலிவுற்றோருக்கான நிதியானது மாற்றுத்திறனாளிகளின் நுகர்வுக்கும், வாழ்வாதார நலம் பேணுவதற்கும் மருத்துவ செலவிற்கும் மற்றும் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்விற்கும் பயன்படுத்தப்படுகிறது.

**சமுதாய உட்கட்டமைப்புகள்:**

**கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்:**

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், இலக்கு மக்களை உள்ளடக்கிய ஒரு சமுதாய அமைப்பாகவும், கிராம அளவில் உள்ள மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர் மற்றும் விளிம்புநிலை சமூகத்தினரின் வறுமையை குறைப்பதற்காக தனி நபர் கடன் அளித்து வறுமையிலிருந்து மேம்படுத்திட செயலாற்றி வருகிறது.

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு:**

கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து தகுதி வாய்ந்த சுய உதவிக் குழுக்களும் ஜனநாயக முறையில் ஒன்றாக இணைந்து செயல்படவும், சுய உதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்தி பல்வேறு நிதி சார்ந்த மற்றும் இதர சேவைகளை சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கி வழி நடத்திடவும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஒரு சமுதாயம் சார்ந்த பதிவு செய்யப்பட்ட அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் பதிவு பெற்ற அமைப்பாகும். மேலும் இந்த அமைப்பானது ஊராட்சி அளவிலான முதல் நிலை கூட்டமைப்பாக செயல்பட்டு,

சுய உதவிக் குழுக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான அடிப்படைத் தளமாக விளங்குகிறது.

**கடமைகள் மற்றும் பொறுப்புகள்:**

- மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட தகுதி வாய்ந்த மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை அமைத்தல் ஒருங்கிணைத்தல் மற்றும் வலுப்படுத்துதல்.
- குழுக்கள் வலுப்பெற தேவையான பயிற்சி மற்றும் நிதியினை பெற்று வழங்குதல்.
- திட்டம் சார்ந்த தகவல்களை குழு உறுப்பினர்களுக்கு தெரிவித்தல்.
- சுய உதவிக் குழுக்களின் கணக்கு மற்றும் பதிவேடுகளை பராமரித்தல், குழுக்களை தரம் பிரித்தல் மற்றும் மதிப்பீட்டிற்கு ஏற்பாடு செய்தல்.
- ஊராட்சி அளவில் மகளிருக்கான சமூக பிரச்சனை, ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் இதர பிரச்சனைகள் தொடர்பான அரசு திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல்.

**வட்டார அளவிலான கூட்டமைப்பு:**

வட்டார அளவில் அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் சமுதாய வள பயிற்றுநர்களை ஒருங்கிணைத்திடவும், வலுப்படுத்திடவும் நிலைத்த தன்மை அடையச் செய்திடவும் வட்டார அளவிலான கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளன.

வட்டார அளவிலான கூட்டமைப்பானது நிலைத்த தன்மையுடைய முதல் நிலை அமைப்புகளான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களை வலுப்படுத்துவதற்கு சரியான பாலமாக அமையும்.

**பணிகள்:**

- வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து சுய உதவிக் குழுக்களுக்கு உரிய நேரத்தில் தேவைப்படும் நிதியுதவி பெறுவதற்கு அனைத்து வழிகாட்டுதலும் வழங்குதல்.
- வங்கி கடனை சரியான காலத்தில் திருப்பி செலுத்துவதை உறுதி செய்தல்.
- நிலைத்த வாழ்வாதார தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து மக்கள் அமைப்புகளுக்கும் தேவைப்படும் பயிற்சி மற்றும் நிதியினை பெற்று தர உதவுதல்.
- வட்டார அளவில் மகளிருக்கான பல்வேறு அரசு நல திட்ட உதவிகளை பெற வழிவகை செய்தல்.

மேலும் வட்டார அளவிலான கூட்டமைப்பானது திட்டம் குறித்த பல்வேறு பயிற்சிகளை சமூக வள பயிற்றுநர், சமூக வல்லுநர்கள் மூலம் அளிக்கும் பயிற்சி நிறுவனமாக வட்டார அளவில் செயல்படும். தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்தின் கீழ் 16 வட்டாரங்களில் வட்டார அளவிலான கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்பட்டு வந்த தமிழ்நாடு புதுவாழ்வு திட்டத்தின் 120 வட்டாரங்களிலும் வட்டார அளவிலான கூட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

**தொடர்பு கொள்ளவேண்டிய அலுவலர்**

திட்ட இயக்குநர்

மாவட்ட இயக்க மேலாண்மை அலகு

தமிழ் நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

அனைத்து மாவட்டங்கள்.

## தீன் தயாள் உபாதியாய கிராமின் கௌசல்யயோஜனா (DDU-GKY)

**(தொழில் மற்றும் பணியமர்வு பயிற்சி )**

## 3.திறன் பயிற்சி

### அ. தொழில் மற்றும் பணியமர்வு பயிற்சி

தீன் தயாள் உபாதியாய கிராமின் கௌசல்யயோஜனா (DDU-GKY) திறன் பயிற்சிதிட்டமானது, தமிழ்நாட்டில் 2012–13 ஆண்டு முதல் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வியக்கம் கிராமப்புற இளைஞர்களின் தேவைகளின் அடிப்படையில் அவர்களின் குடும்ப வருமானத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் அவரவர் தொழில்திறன் விருப்பங்களுக்கு ஏற்றவாறு கற்றுதரப்படுகிறது. இத்திட்டமானது, கிராமப்புற ஏழை இளைஞர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பயிற்சியளித்து, தனியார் நிறுவனங்களில் பணியமர்த்துவதை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன், அவர்களுக்குத் தொடர்ந்து ஆலோசனை மற்றும் கண்காணிப்பு வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டNCVT / SSC பாடத்திட்டங்களின் படிபயிற்சி நடத்தும் பயிற்சி நிறுவனங்களை அங்கீகரித்தும் ,சான்றளித்தும், பயிற்சி பெற்றவர்களில் குறைந்தது 70 விழுக்காடு பயிற்சியாளர்களை மாநிலத்தில் நிலவும் குறைந்தபட்ச ஊதியத்திற்கு குறையாமல் பணியில் அமர்த்தியும் பல்வேறு தொடர் முயற்சிகளின் மூலமும் கிராமப்புறங்களில் வறுமையை ஒழித்திடும் உன்னத நோக்கத்துடன் அரசுநடிவடிக்கை எடுத்து வருகின்றது.

### திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- 3 முதல் 12 மாதங்கள் வரை வேலை வாய்ப்புடன் கூடிய சந்தை சார்ந்த தொழில்திறன் பயிற்சிகள்.
- தொழில்திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உத்திரவாதம்

### திட்டத்தில் பயன் பெறுபவர்கள் விழுக்காடு

- 50 விழுக்காடு அட்டவணை மற்றும் பழங்குடியினர்
- 15 விழுக்காடு சிறுபான்மையினர்
- 3 விழுக்காடு மாற்றுத் திறனாளிகள்
- 33 விழுக்காடு பெண்கள் (அனைத்து பிரிவினரையும் உள்ளடக்கிய பின்)

### பயிற்சியில் சேருவதற்கான தகுதிகள்

- 18 வயதிலிருந்து 35 வயது வரை உள்ள இளைஞர்கள் (ஆண், பெண் இருபாலருக்கும்)
- பெண்கள், மாற்றுத் திறனாளிகள், நலிவடைந்தோர் மற்றும் விளிம்புநிலை பழங்குடியினர் முதலியோருக்கு வயது வரம்பு 45 ஆக தளர்த்தப்பட்டுள்ளது.

### திட்ட செயல்பாடு

- தீன் தயாள் உபாதியாய கிராமின் கௌசல்யயோஜனா திட்டத்தின் கீழ் நிரந்தர பதிவு எண் பெற்ற பயிற்சி நிறுவனங்களால் இணையதளம் மூலமாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் மாநில அளவிலான உயர்மட்ட குழுவானது சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குகிறது.
- மாநில அளவிலான உயர்மட்ட குழுவின் அனுமதியின் அடிப்படையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தலைமை அலுவலகத்தின் வாயிலாக பயிற்சி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் இடப்பட்டு பயிற்சிஅளிக்கப்படுகின்றது.
- ஒவ்வொரு பயிற்சிக்கான திறன் இடைவெளி ஆய்வின் விபரங்களை பயிற்சிஅளிக்கும் நிறுவனம் அளிப்பதோடு, அதற்கான வேலை வாய்ப்பிற்கான சாத்தியக்கூறுகள் தற்போது மற்றும் வருங்காலத்தில் இருப்பதையும் உறுதி செய்து அவ்விரங்களை அந்நிறுவனம் வழங்குகிறது.
- தரமான பாடத்திட்டம் மற்றும் SSC/NCVT ஆகியவற்றால் பரிந்துரைக்கப்பட்ட அடிப்படை பாடத்திட்டத்தினை அனைத்து பயிற்சிகளுக்கும் பின்பற்றுவதுடன் அடிப்படை ஆங்கிலத்தில் பேச்சுத்திறன், அடிப்படை கணினி அறிவு மற்றும் மென் திறன் போன்ற திறன் மேம்பாட்டு பாடங்களையும் கொண்டதாக பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

- பயிற்சியின் பாடத்திட்டமானது 40 விழுக்காடு விளக்கப்பாடமும், 60 விழுக்காடு செய்முறைப் பயிற்சியும் கொண்டிருப்பதுடன் பயிற்சியின் போது பாடத்திட்ட குறிப்புகளும் அளிக்கப்படுகின்றது.
- பயிற்சி காலத்தில், பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு சீருடை வழங்கப்படுகிறது.
- நிறுவன பயிற்சிக்குப் பின் இரண்டாம் கட்டமாக மொத்த பயிற்சி காலஅளவில் மூன்றில் ஒரு பங்கிற்கு மிகாமல் பணியமர்த்தும் இடத்திலேயே களப்பயிற்சி (OJT- On the Job Training) அளிக்கப்படுகிறது.
- பயிற்சி நிறைவு பெற்ற உடன் NCVT மற்றும் SSC ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் பயிற்சியாளர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட தரமான சான்றிதழ்கள் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் வழங்கப்படுகிறது.
- பயிற்சி நிறுவனங்கள், பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு குறைந்தது ஓராண்டு காலம் வரை ஆலோசனை வழங்கி, அவர்கள் பணியில் தொடர்ந்து நீடிப்பதற்கும் அவர்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கவும் வழிவகை செய்யப்படுகின்றது.

## உண்டு உறைவிடப் பயிற்சி

2016–17 முதல் இப்பயிற்சியானது உண்டு உறைவிடப் பயிற்சியாகவும் வழங்கப்படுகிறது. அவ்வாறு தங்கி பயிலாத முறையில் வழங்கப்படும் பயிற்சிக்கு ஒவ்வொரு இளைஞருக்கும் நாளொன்றுக்கு ரூ.125 என்ற வீதத்தில் அவர்கள் வருகை தந்த காலத்திற்கு கணக்கிடப்பட்டு மதிய உணவு மற்றும் போக்குவரத்துக் கட்டணத்திற்காக அளிக்கப்படுகிறது.

### பணியமர்வுக்கு பின் அளிக்கப்படும் ஊக்கத்தொகை

வறுமைக் கோட்டிற்கு கீழ் / மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டு திறன் பயிற்சி பெற்று பணியில் அமர்த்தப்பட்ட இளைஞர்களுக்கு அவர்களது உடனடி தேவையை கருத்தில் கொண்டு குறிப்பிட்ட காலத்திற்கு மாதம் ரூ.1000 ஊக்கத் தொகையாக அவர்களின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

அந்தந்த மாவட்டத்தில் பணியில் இருந்தால் 2 மாதங்களுக்கும், மாவட்டத்திற்கு வெளியே மாநிலத்திற்குள் பணியிலிருந்தால் 3 மாதங்களுக்கும், மாநிலத்தை விட்டு வேறு மாநிலத்தில் பணியிலிருந்தால் 6 மாதங்களுக்கும் இவ்வூக்கத் தொகை வழங்கப்படுகிறது.

## திறன் பயிற்சி சாதனைகள் (2012–2016)

2012 முதல் 2016 ஆண்டு வரை, 40,179 இளைஞர்களுக்கு ஒட்டுநர் பயிற்சி, தகவல் தொழில் நுட்பம், ஆடைகள் மற்றும் ஆயத்த ஆடை, விருந்தோம்பல், கட்டுமானம், சுகாதாரம்,

சில்லறை வணிகம் மற்றும் அழகுகலை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் திறன் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களில் 31,642 இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

2016–17 முதல் 2018–19 ஆண்டு வரை 3 ஆண்டுகளுக்கு 44,416 இளைஞர்களுக்கு ரூ.565.96 கோடி செலவில் பயிற்சிகள் வழங்கப்பட்டு பணியமாத்தப்பட உள்ளனர்.

## ஆ.வேலைவாய்ப்பு முகாமின் மூலம் நேரடி வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பு முகாமானது வேலை கொடுப்பவர் மற்றும் வேலை தேடுபவர்களை ஒரு குடையின் கீழ் இணைக்க தமிழக அரசால் துவக்கப்பட்ட ஒரு தனித்துவம் வாய்ந்த முன் முயற்சியாகும். இம்முகாம்களில் இளைஞர்களின் தகுதி மற்றும் திறன்களுக்கு ஏற்றவாறு பணியமர்வு செய்யப்படுகின்றனர்.

இம்முகாம்களுக்கு மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் பின்வருமாறு :

- மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட இயக்க மேலாண்மை அலகானது மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து வேலைவாய்ப்பு முகாம் நடத்துவதற்கு நாள், இடம் மற்றும் தேதி பற்றி ஊரக பகுதிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- புகழ்பெற்ற தொழில் மற்றும் உற்பத்தி நிறுவனங்களை இம்முகாம்களில் பங்கேற்க அழைப்பு விடுத்தல்.
- முறையான பதிவு, கலந்தாய்வு மற்றும் நிறுவனங்களின் தேவைக்கேற்ப இளைஞர்களை தேர்வு செய்தல்.

2015–16 ஆம் ஆண்டில் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் வாழ்வாதாரம் பகுதிகளில் 90 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. இதில் 2,464 நிறுவனங்கள் பங்கேற்றனர். 36,653 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணியமர்வு செய்யப்பட்டுள்ளனர்.

2016–17 ஆம் ஆண்டில் 385 வேலைவாய்ப்பு முகாம்கள் மாநிலத்தின் வட்டாரத்திற்கு ஒன்று வீதம் நடத்திட இலக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டு அதில் நாளது வரை 366 வட்டராங்களுக்கான வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இம்முகாம்களின் வாயிலாக 35,660 இஞைர்கள் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்க செயல்பாடுகளின் மூலம் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

2017–18ம் நிதியாண்டில் மாவட்ட அளவில் 59 முகாம்களும், வட்டார அளவில் (வட்டாரத்திற்கு 1 வீதம்) 385 முகாம்களும் நடத்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் நாளது வரை மாவட்ட அளவில் 37 முகாம்களும், வட்டார அளவில் 148 முகாம்களும் நடத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 3 ,343 நிறுவனங்களில் மொத்தம் 25,104 நபர்கள் பணியமர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**

**திட்டஇயக்குநர்,**

**மாவட்ட இயக்க மேலாண்மைஅலகு,**

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**

**அனைத்து மாவட்டங்கள். (சென்னை நீங்கலாக).**

## 4. வட்டார அளவிலான கூட்டமைப்புகளுக்கு பயிற்சி

மாநிலத்தில் உள்ள அனைத்து 385 வட்டார அளவிலான கூட்டமைப்புகளுக்கும் நிர்வாகம் மற்றும் நிதிமேலாண்மை குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த கூட்டமைப்பு இரண்டாம் நிலை சமுதாயம் சார்ந்த நிறுவனங்களாகும். ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலுள்ள பிரதிநிதிகளை உறுப்பினர்களாக கொண்ட அமைப்பே இக்கூட்டமைப்பாகும். இக்கூட்டமைப்பு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலுள்ள உறுப்பினர்களுக்கு உதவியாகவும் மேலும் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு வழிகாட்டும் அமைப்பாகவும் இருக்கும்.

மேலும் இவை சுய உதவிக்குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பயிற்சி வழங்கும் பயிற்சி மையமாகவும் செயல்படும். இதன் மூலம் சமுதாய வல்லுநர்களுக்கு பயிற்சி வழங்கும் வாய்ப்பு போதியஅளவில் கிடைக்கப்பெறும். வட்டார அளவிலான கூட்டமைப்பு வட்டார அளவிலான பயிற்சி மையமாகவும் செயல்படும். சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு வழங்கப்படும் திறன் வளர்ப்பு பயிற்சிகளுக்கு இம்மய்யம் உறுதுணையாக இருக்கும். இக்கூட்டமைப்புகளுக்கு திறன் வளர்ப்பு சார்ந்த பயிற்சிகளில் 15% சேவைக் கட்டணம் வழங்கப்படும். இக்கூட்டமைப்புகளானது எதிர்காலத்தில் தனிபெரும் சமுதாயம் சார்ந்த நிறுவனங்களாக உருவெடுப்பதோடு பல்வேறு நிறுவனங்களுக்கு பயிற்சிகள் வழங்கி சுயமான நிலைத்த நிறுவனங்களாகவும் வளர்ச்சி பெறும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**

**திட்டஇயக்குநர்,**

**மாவட்ட இயக்க மேலாண்மைஅலகு,**

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**

**அனைத்து மாவட்டங்கள். (சென்னைநீங்கலாக).**

## 5.விருதுகள்

### சிறந்த சுய உதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான விருதுகள்

சிறப்பாக செயல்படும் 10 சுய உதவிக்குழுக்களுக்கு தலா ரூ.1.00 இலட்சம் வீதம் மாநில அளவிலான விருதுகள் வழங்கப்படுகிறது. மாவட்ட அளவில் சிறந்த மூன்று சுய உதவிக் குழுக்களுக்கு அனைத்து மாவட்டங்களில் தலா ரூ.25,000 வீதம் மூன்று விருதுகள் வழங்கப்படுகிறது.

சிறப்பாக செயல்படும் 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூ.3.00 இலட்சம் வீதம் மாநில அளவிலான விருதுகள் வழங்கப்படுகிறது. அனைத்து மாவட்டங்களில் மாவட்ட அளவில் சிறந்த ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு தலா ரூ.1.00 இலட்சம் விருதுகள் வழங்கப்படுகிறது.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**

**திட்ட இயக்குநர்,**

**மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,**

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**

**அனைத்து மாவட்டங்கள்.**

## 6.சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களைச் சந்தைப்படுத்துதல் திட்டங்கள்

### அ. கண்காட்சிகள்:

- **மாநில அளவிலான கண்காட்சி:**

  மாநில அளவில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் வருடத்திற்கு மூன்று முறை விற்பனைக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது. கடந்த 2017-18ம் ஆண்டில் நடத்தப்பட்ட கண்காட்சியில் 120 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு ரூ.55.34 இலட்சம் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்து பயனடைந்துள்ளனர்

- **கட்டாய/ விருப்பக் கண்காட்சி:**

  கட்டாய / விருப்பக் கண்காட்சி மாவட்ட அளவில் நடத்தப்படுகிறது. மகளிர் சுய உதவிக் குழு உற்பத்தி 1039 மகளிர் சுய உதவிக்குழுவினர் கலந்து கொண்டு ரூ.201.83 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**ஆ. கல்லூரி சந்தை:**

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை இளம் தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் நோக்கத்துடன் கல்லூரிகளில் விழாக்கள் மற்றும் முக்கிய பொது நிகழ்ச்சிகள் நடைபெறும் போது, கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக வளாகங்களில் கல்லூரி சந்தைகள் (College Bazaars) நடத்தப்படுகின்றன. கடந்த 2017–18ம் ஆண்டில் மாநில அளவில் 123 கல்லூரிகளில் நடத்தப்பட்ட இக்கண்காட்சிகளில் 3103 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு ரூ.219.97 இலட்சம் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

**இ. நடமாடும் மதி விற்பனை அங்காடி :**

அரசாணை எண்.117 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள்.05.09.2013ன் வழியே, மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு மக்கள் அதிகமாக கூடும் இடம் மற்றும் சுற்றுலாத் தலங்களில் 100 மதி நடமாடும் விற்பனை அங்காடிகள் மாவட்டந்தோறும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கீட்டின்படி அமைக்கப்பட்டு 2017–18ம் ஆண்டு ரூ.230.47 இலட்சத்திற்கு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**ஈ. மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் :**

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திபொருட்களை மாநில, தேசிய மற்றும் சர்வதேச சந்தைப்படுத்தும் நோக்கத்தோடு, மாநில அளவில், மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் (SSMS) அமைக்கப்பட்டு மாவட்டங்களில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்ப, விற்பனை செய்திட மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் (DSMS) மாநில அளவில் ஏற்படுத்தியுள்ள மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு கொண்டிருக்கிறது.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**

**திட்டஇயக்குநர்,**
**மாவட்ட இயக்க மேலாண்மைஅலகு,**
**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**
**அனைத்து மாவட்டங்கள்.**

## 7. கலாச்சாரப் போட்டிகள்

மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்களிடையே ஆண்டுதோறும் பொங்கல் திருநாள் சமயத்தில் வட்டார மற்றும் மாவட்ட அளவில் பல்வேறு கலாச்சாரப் போட்டிகள் நடத்தப்பட்டு, அவர்களிடம் மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொணர்வதுடன், அனைவரும் ஒற்றுமையுடன் எந்த ஓர் பாகுபாடும்

இன்றி, சேர்ந்து வாழும் பண்பை வளர்க்கிறது. இதனால் தமிழகம் ஓர் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**

**திட்ட இயக்குநர்**
**மாவட்ட இயக்க மேலாண்மை அலகு**
**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**

## 8. வாழ்வாதார மேம்பாடு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் உள்ள பண்ணை மற்றும் பண்ணை சாரா தொழிலில் ஈடுபடும் மகளிரின் வருமானத்தை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு வாழ்வாதார நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவை பின்வருமாறு:

**பண்ணைத் தொழில் (Farm Activity)**

**முதன்மை உற்பத்தியாளர் குழு:**

விவசாயத்தில் ஒரே வகையான பயிர் சாகுபடி செய்யும் 30 மகளிரை ஒருங்கிணைத்து விவசாய உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்படுகிறது.

உற்பத்தி செய்யப்படும் பயிர் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலுக்கு ஏற்ப நவீன தொழில் நுட்பங்களில் திறன் பயிற்சி , விவசாயம் மற்றும் கால்நடைத் துறையுடன் இணைந்து நடத்தப்படுகிறது.

நாளது தேதிவரை, பண்ணை சார்ந்த தொழில் மேம்பாட்டுத் திட்டமானது, முதல் கட்டமாக 768 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு, மொத்தம் 30720 மகளிர் பயனடைந்துள்ளனர். உற்பத்திக் குழுக்களைப் போலவே ஆடு வளர்ப்பு மற்றும் மாடு வளர்ப்பு மகளிரையும் ஒருங்கிணைத்து உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு குழுவிற்கும், தேவையான பொது வசதிகளான விவசாயக் கருவிகள், விதைகள், மருந்துகள் போன்ற இடு பொருட்கள் கொள்முதல் செய்தல் மற்றும் சந்தை வாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றிற்காக ரூ.30,000 நிதி உதவி அளிக்கப்படுகிறது.

மேலும், கூடுதலாக 3044 கிராம ஊராட்சிகளில் பண்ணை சார்ந்த தொழில் விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 76100 பயனாளிகள் பயன் பெறுவர். மேலும், ஒரு ஊராட்சிக்கு ஒரு விவசாய உற்பத்தியாளர் குழு என்ற அடிப்படையில், 3044 விவசாய உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்படும். இக் குழுக்களுக்கு விவசாயத் தொழில்கள் மேற்கொள்வதற்கு ரூ.40,000/– முதல் ரூ.1,00,000/– வரை சுழல்நிதி வழங்கப்படும்.

**பண்ணை சாரா தொழில் மேம்பாடு: (Non - Farm Activity)**

பண்ணை சாரா தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு, இத்திட்டமானது முதல் கட்டமாக 800 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் 10 நபர்கள் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் புதிதாக தொழில் தொடங்கவோ, ஏற்கனவே செய்து வரும் தொழிலை மேம்படுத்தவோ அல்லது மாற்றி அமைக்கவோ ஒவ்வொருவருக்கும் தலா ரூ.10,000 கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 8,000 மகளிர் பயனடைந்துள்ளனர். ரூ.8.00 கோடி செலவீனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில், 160 சிறு தொழில் நிறுவனங்கள் நிறுவவோ அல்லது மேம்படுத்தவோ ஒரு அலகிற்கு ரூ. 2.90 இலட்சம் கடனுதவி வழங்கப்படும்.

ஒவ்வொரு அலகிலும் 15 பயனாளிகள் கண்டறியப்பட்டு, ஒவ்வொரு பயனாளிக்கும் ரூ.19,000/– (ரூ.15,000/–சுழல்நிதி மற்றும் ரூ.4,000/– திறன்வளர்ப்பு) புதிய வாழ்வாதாரத் திட்டங்கள் செயல்படுத்தவும் அல்லது மேம்படுத்தவும் வழங்கப்படுகிறது. கடனுதவி பெறப்பட்ட 2 மாதங்களுக்கு பிறகு தொகையினை திரும்ப செலுத்தலாம்.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**

**திட்ட இயக்குநர்,**
**மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,**
**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**
**அனைத்து மாவட்டங்கள்.**

## 9. ஒத்த தொழில் குழுக்கள் (Common livelihood groups)

ஒரு கிராமம் – ஒரு உற்பத்தி பொருள் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஒரே மாதிரியான தொழிலில் ஈடுபட்டுள்ள குழுக்களை கண்டறிந்து அவைகளை ஊக்குவித்து ஒரு கிராமம் அளவில் அல்லது சில கிராமங்களை இணைத்து விவசாயம் சாராத தொழிலாளர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு தொழில் தொகுப்புகள் உருவாக்கப்பட்டு அவற்றிற்கு அனைத்து வகையான நிதி வசதி ஏற்படுத்தி, உற்பத்தியை பெருக்கி, சந்தை வாய்ப்புகளும் உருவாக்கி தரப்படுகிறது. இதுவரை 919 ஒத்த தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டு, இக்குழுக்களுக்கு ரூ.9.19 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**வாழ்வாதார சமூக வள பயிற்றுநர்கள்**

சமூக மக்களே தங்கள் சமூகத்தை திறம்பட மேளாண்மை செய்திட வேண்டும் என்பது தேசிய ஊரக வாழ்வாதார வழிகாட்டு நெறிமுறை ஆகும். இக்குறிக்கோளை அடையும்

வகையில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் வாழ்வாதார நடவடிக்கைகளை கண்காணிக்கும் பொருட்டு ஒருவர் கண்டறியும் பொருட்டு அவரை சமூக வள பயிற்றுநராக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. வாழ்வாதார நடவடிக்கைகளை செயல்படுத்த மொத்தம் 1536 சமூக வள பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 6088 சமூக வள பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளித்து 3044 விவசாயிகள் உற்பத்தி குழு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**

**திட்டஇயக்குநர்,**
**மாவட்ட இயக்க மேலாண்மைஅலகு,**
**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**
**அனைத்து மாவட்டங்கள்.**

## 10. பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் (Mahila kisan sashakthikaran Pariyojana)

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு துணைக் கூறாக “பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம்” மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், விவசாய தொழிலில் ஈடுபடும் மகளிரைக் கண்டறிந்து விவசாயத்தில் அவர்களது பங்கேற்பினை அதிகப்படுத்தி அவர்களுக்கு பல தொழில்நுட்ப பயிற்சிகளை அளிப்பதின் மூலம் உற்பத்தித் திறனை அதிகரித்து, அவர்களின் வருமானத்தை பெருக்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைச் சார்ந்த 10 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 166 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. மொத்தம் 15.96 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டம் மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். 14800 பெண் விவசாயிகளுக்கு நாளது வரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ரூ.3.99 கோடி நிதி பெறப்பட்டு நாளது வரை ரூ.3.52 கோடி செலவீனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, 2வது கட்டமாக, கரூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ரூ.8.39 கோடியில் செயல்படுத்தப்படும். மூன்று வருடங்களில் 12000 பெண் விவசாயிகள் பயனடைவர்.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**
**திட்டஇயக்குநர்,**
**மாவட்ட இயக்க மேலாண்மைஅலகு,**
**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**
**அனைத்து மாவட்டங்கள்.**

## 11. ஏழை மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டம்

## (Special Livelihood Scheme for Women Headed Households (WHH)

2011ம் ஆண்டு மக்கள் தொகையின்படி, 25.88 இலட்சம் குடும்பங்கள் மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்டுள்ளது. ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு உதவும் பொருட்டு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி வழங்கிடும் புதிய திட்டம் அரசு ஆணை எண் 82 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (சிஜிஎஸ் 3) துறை நாள் 25.5.2015 மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கு தேவைப்படும் நிதி ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படுத்தப்படும் பல்வேறு வாழ்வாதார இயக்க திட்டங்களின் மூலம் பெறப்படும். தமிழ்நாடு திறன் வளர்ச்சி இயக்கம் மூலம் 2522 மகளிருக்கு பயிற்சி வழங்கும் பொருட்டு,3.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாளது வரை 2342 மகளிர் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் கீழ் இதுவரை (ஊரகம் மற்றும் நகர்ப்புறம்) 78453 மகளிர் பயனடைந்துள்ளனர்.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**

**திட்டஇயக்குநர்,**
**மாவட்ட இயக்க மேலாண்மைஅலகு,**
**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**
**அனைத்து மாவட்டங்கள்.**

## 12.கிராமிய தொழில் முனைவோர் திட்டம்
## (Start/Up Village Entrepreneurship Programme)

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு உப கூறான "கிராமிய தொழில் முனைவோர் திட்டம் , கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழைகள், தங்களின் வறுமை நிலையிலிருந்து முன்னேறுவதற்கு தொழில் தொடங்கவும், அத்தொழிலில் நிலையாக செயல்படும் வகையில் அவர்களுக்கு உதவுதலே இத்திட்டத்தின் நோக்கமாகும். தொழில் தொடங்கி ஆறு மாதங்களுக்கு , தேசிய ஊரக வாழ்வாதார இயக்க மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்பின் உதவியுடன் தொழில் திறன் வளர்க்கவும், கடனுதவி வழங்கவும் உதவுகிறது. இத்திட்டம் காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் ஆகிய 2 மாவட்டங்களில் தலா இரண்டு வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் ஊரக பகுதிகளில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் 2,400 நுண் நிறுவனங்கள் தொடங்க நிதி உதவி வழங்கியும், மற்றும் தொழிலினை நிலை நிறுத்தவும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு நான்கு வருடங்களுக்கு ரூ.11.96 கோடியாகும். நாளது வரை ரூ.20.00 இலட்சம் அடிப்படை ஆய்வுகள் மற்றும் திறன் வளர்ப்பிற்காக திட்டம் செயல்படுத்தப்படும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**

**திட்டஇயக்குநர்,**
**மாவட்ட இயக்க மேலாண்மைஅலகு,**
**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**
**அனைத்து மாவட்டங்கள்.**

## 13. அம்மா இருசக்கர வாகனத் திட்டம்

இத்திட்டம் உழைக்கும் மகளிரின் அன்றாட செயல்பாட்டை இலகுவாக்கும் நோக்கத்துடன் அவர்களின் பணியிடங்கள், வங்கி, மற்றும் சமுதாய அமைப்புப் பணிகளை சிரமமின்றி செய்வதற்கு ஏதுவாக இரு சக்கர வாகனங்கள் வாங்குவதற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மகளிரால் எளிதில் பயன்படுத்தும் வகையில் இவ்வாகனங்கள் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தின்படி கியர் இல்லாத அல்லது ஆட்டோ கியர் உடைய இரு சக்கர வாகனங்கள் மட்டுமே இத்திட்டத்தின் மூலம் வாங்க முடியும். மாற்றுத் திறனாளிகளின் உபயோகத்திற்கேற்ப வடிவமைக்கப்பட்ட மூன்று சக்கர வாகனங்களும் வாங்கலாம். இத்திட்டம் 2017–18 ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

**இத்திட்டத்தின் கீழ் தகுதி பெறும் பயனாளிகள்*:***

வாழ்வாதாரம் ஈட்டும் பொருட்டு தனி நபராகவா, கூட்டாகவோ பணிபுரியும் மகளிர், தொலை தூரங்களுக்கு சென்று பணிபுரியும் பெண்கள் மற்றும் தனது வருமானத்தை மட்டுமே பிரதானமாகக் கொண்டு குடும்பம் நடத்தும் மகளிர் ஆகியோர் பயனாளிகளாக உறுதி செய்யப்படுவர். மேலும், கீழ்காணும் பிரிவுகளைச் சார்ந்தவர்களும் தகுதியுடையவராவர்.

அ. அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புச் சாரா பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பெண் தொழிலாளர்கள்.

ஆ. கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் மகளிர்.

இ. சுய தொழில் செய்யும் மகளிர் மற்றும் சிறு தொழில் செய்பவர்கள்.

ஈ. அரசாங்க நிதி உதவி பெறும் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரசு திட்டங்கள்/ சமூகம் சார்ந்த நிறுவனங்கள் – ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்பு சங்கம், மாவட்ட மக்கள் கற்றல் மையம் (மகமை), ஆகியவற்றில் பணிபுரியும் மகளிர், தொகுப்பூதியம் தினக்கூலி மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஊதியம் பெறும் மகளிர்.

உ. வங்கி தொடர்பாளர்கள் / வங்கி வழி நடத்துநர்கள் மற்றும் ‘‘ASHA’’ பணியாளர்கள்

இத்திட்டம் மாநில அரசுத் திட்டமாகும். 2017–18 ம் ஆண்டில் ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் கியர் இல்லாத / ஆட்டோ கியரில் இயங்கும் வசதியுடன் கூடிய 125 CC-க்கு மிகாமல் தரமான புதிய இருசக்கர வாகனம்

வாங்கிக் கொள்ள அதிகபட்ச மானியமாக வாகன விலையில் 50 சதவீதமோ அல்லது ரூ.25,000/– இவற்றில் எது குறைவோ அத்தொகை வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் வருடத்திற்கு ஒரு இலட்சம் உழைக்கும் மகளிர் பயன் பெறுவர். இத்திட்டம் 2017–18 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் 24.2.2018 முதல் நடைமுறைபடுத்தப்பட்டு , நாளது வரை 1069 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். ரூ.2.68 கோடி செலவீனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**

**திட்டஇயக்குநர்,**

**மாவட்ட இயக்க மேலாண்மைஅலகு,**

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**

**அனைத்து மாவட்டங்கள்.**

## 14. தீன் தயாள் அந்தியோதய யோஜனா தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (DAY – NULM)

தீன் தயாள் அந்தியோதய யோஜனா – தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கமானது (DAY – NULM) மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி விகிதாச்சாரஅடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது நகர்புரங்களில் பின்தங்கிய மற்றும் ஏழை குடும்பங்களுக்கு வலுவான நிறுவன அமைப்புகளை உருவாக்கித் தருவதன் மூலம் அவர்களின் நிலையான வாழ்வாதாரத்தை அடிமட்ட நிலையிலிருந்து நிலையான லாபம் தரக்கூடிய வகையில் சுய வேலை மற்றும் திறன் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உறுதி செய்கிறது. இத்திட்டத்தின் நோக்கமாக நகர்புற உறைவிடமற்றோருக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய உறைவிடத்தை படிப்படியாக உயர்த்தித் தருவது. மேலும் நகர்ப்புர சாலையோர வியாபாரிகளுக்கு சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் நிதிஆதாரங்களின் மூலம் கடன், சமூக பாதுகாப்பு மற்றும் திறன் வளர்ப்பின் மூலம் வளர்ந்து வரும் சந்தை வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உதவுகிறது.

இத்திட்டமானது அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் (664) வசிக்கும் மக்களை கணக்கில் கொண்டு அவர்களின் இடையூறுகளைத் தீர்ப்பதற்காக கீழ்க்காணும் திட்டக் கூறுகளின் வழியே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1. **சமூக அணிதிரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு:** இத்திட்டமானது சுய உதவிக்குழுக்கள் மற்றும் அவர்களது கூட்டமைப்பின் மூலம் ஏழை எளிய மக்களை

சமூக அணிகளாக ஒன்று திரட்டுகிறது. அச்சுய உதவிக்குழுக்களை மேம்படுத்தும் கூட்டமைப்பினை உருவாக்குதல், மற்றும் அதன் தொடர்பான பிற நடவடிக்கைகளை தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு கண்காணித்தல் வங்கி இணைப்பு ஆகியவற்றிற்கு ஒரு சுயஉதவிக் குழுவிற்கு அதிக பட்சமாக ரூ.10000/– செலவிடப்படுகிறது. மேலும் ஒரு சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூ.10000/– கொடுக்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்களின் பகுதி கூட்டமைப்பிற்கு ஒரு முறை சுழற்சி நிதியாக ரூ.50000/–கொடுக்கப்படுகிறது. மேலும் நகர்புற வாழ்வாதார மையங்கள் அமைக்க ஒரு மையத்திற்கு ரூ.10,00,000/– ஆதார நிதியாக வழங்கப்படுகிறது.

2. **திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சி மூலம் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்** (EST&P): இத்திட்டமானது நகர்புற ஏழை மக்களின் திறனை மேம்படுத்தும் வகையில் சுய வேலைவாய்ப்பு மற்றும் ஊதியம் பெறும் வேலை வாய்ப்புகளை மேம்படுத்தும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. பயிற்சி கட்டணம், பயிற்சி உபகரணம், பயிற்சியாளர்களின் கட்டணம், குறு நிறுவன வளர்ச்சி, வேலைவாய்ப்பு தொடர்பான செலவுகளுக்காக ஒரு பயனாளிக்கு ரூ.15,000/– வழங்கப்படுகிறது.

3. **திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி:** மாநில மற்றும் நகரத்தில் வலுவான நிறுவனங்களை தேசிய மற்றும் மாநில மற்றும் நகர்புற அளவில் உருவாக்குதல் இத்திட்டத்தின் செயல்பாடாகும். இதற்காக சராசரியாக ஒரு திறன் பயிற்சிக்கு அதிகபட்சமாக ரூ.7500/–யை செலவிடப்படுகிறது.

4. **சுய வேலைவாய்ப்புத் திட்டம்** : இத்திட்டமானது நகர்புற ஏழைகளில் தனிநபர்கள் / குழுக்களுக்கு நிதியுதவியின் மூலம் சுய வேலைவாய்ப்பு / குறு நிறுவன அமைப்புகளை அமைத்துத் தருவதாகும். இத்திட்டத்தின் கீழ் தனி நபரோ அல்லது குழுக்களோ குறு நிறுவனங்களை அமைப்பதற்காக முறையே ரூ.2 லட்சம் முதல் அதிக பட்சமாக ரூ.10 லட்சம் ரூபாய் வரை வழங்கப்படுகிறது. தனிப்பட்ட மற்றும் குழு நிறுவனங்களுக்கு வங்கி கடனில் 7 சதவிகித வட்டி மானியம் வழங்கப்படுகிறது. மேலும் வங்கிக் கடனை முறையாக திருப்பிச் செலுத்தும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கும் கூடுதலாக 3 சதவிகித வட்டி மானியமாக வழங்கப்படும்.

5. **நகர்புற உறைவிடமற்றோருக்கு உறைவிடம்:** இத்திட்டத்தின் மூலம் உறைவிடம் இல்லாத குழந்தைகள், வயதானவர்கள், முதியவர்கள் ஆகியவர்களின் பாதுகாப்பிற்காக அடிப்படை உள் கட்டமைப்புகளுடன் கூடிய தங்குமிடம் முக்கியமாக குடிநீர், கழிவரை, பாதுகாப்பு போன்ற அடிப்படை வசதிகளை செய்துத்தரப்படுகிறது. இதற்கான கட்டமைப்பு செலவாக ஒரு சதுர அடிக்கு ரூ.1000/–, பராமரிப்பு செலவாக ஒரு மாதத்திற்கு ரூ.5000/–, ஒரு வருடத்திற்கு தங்கும் செலவாக ரூ.1,00,000/–,

உணவிற்காக ஒரு நபருக்கு ரூ.50/– இதனை பராமரிக்கும் பணியாளர்களுக்கு ரூ 3.60 லட்சம் ஒரு வருடத்திற்கு மூலதன செலவினமாக தரப்படும்.

6. **நகர்ப்புற சாலையோர வியாபாரிகளுக்கு வாழ்வாதாரம்:** நகர்ப்புற சாலையோர வியாபாரிகளின் பாதிப்புகளை கண்டறிந்து அவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குதல், சாலையோர சந்தைவாய்ப்புகளை மேம்படுத்துதல், சாலையோர விற்பனையாளர்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் அவர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையில் பயிற்சி, நிதி ஆதாரங்கங்களின் மூலம் கடன் வசதி மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டத்தில் அவர்களை இணைத்தல் ஆகியவையே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

7. **புதிய முயற்சிகள் மற்றும் சிறப்புத் திட்டங்கள்** : இத்திட்டமானது புதிய முயற்சிகளின் மூலம் புதுமையான திட்டங்களை ஊக்குவித்தலாகும். இம்முயற்சியானது பொதுமக்கள், தனியார் மற்றும் சமூக பங்களிப்பின் மூலம் நகர்புற வாழ்வாதாரத்தை ஊக்குவித்தல், மேலும் சிறப்புத் திட்டங்களின் மூலம் நகர்புற வறுமையை நீக்குதலாகும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**

**திட்டஇயக்குநர்,**

**மாவட்ட இயக்க மேலாண்மைஅலகு,**

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**

**அனைத்து மாவட்டங்கள்.**

## மகளிர் திட்டம் மாவட்ட செயலாக்க அலகின் முகவரிகள்

| வ.எண். | அலுவலகம் | முகவரி | தொலைபேசி |
|---|---|---|---|
| 1. | அரியலூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், அரியலூர் | 04329-228505 |
| 2. | சென்னை | திட்ட இயக்குநர்,<br>மகளிர் திட்டம்,<br>100,அண்ணாசாலை, கிண்டி.<br>சென்னை – 600 032 | 044-2235063 |
| 3. | கோயம்புத்துார் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.<br>கோயம்புத்துார் -641 008 | 0422 -2301855 |
| 4. | கடலூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>பூமாலை வணிக வளாகம் (முதல் மாடி), (BSNL<br>அலுவலகம் எதிரில்) G.H.ரோடு, கடலூர்-607001 | 04142 -294143 |
| 5. | தருமபுரி | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இரண்டாவது மாடி,<br>டிடிடிசி கட்டிடம்.தருமபுரி -636 705. | 04342 – 233298 |
| 6. | திண்டுக்கல் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம். தரைத்தளம்,<br>திண்டுக்கல் - 624 005. | 0451 - 2460050 |
| 7. | ஈரோடு | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>முதல் மாடி, பூமாலை வணிக வளாகம்,<br>பெருந்துறை ரோடு, குமலன் குட்டை.<br>ஈரோடு – 638 011. | 0424- 2257087 |

| வ.எண். | அலுவலகம் | முகவரி | தொலைபேசி |
|---|---|---|---|
| 8. | காஞ்சிபுரம் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.<br>காஞ்சிபுரம் - 631 502. | 044 – 27236348 |
| 9. | கன்னியாகுமரி. | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>நாகர்கோவில், பூமாலை வணிக வளாகம்,<br>வடச்சேரி,கன்னியாகுமரி – 629 001. | 04652 -272275 |
| 10. | கருர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.<br>இரண்டாவது மாடி,கருர்-639 005. | 04324 -257377 |
| 11. | கிருஷ்ணகிரி | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.எண். 106 & 107,<br>இரண்டாவது மாடிகிருஷ்ணகிரி- 635 001 | 04343 –235267 |
| 12. | மதுரை | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>புது நத்தம் ரோடு, மதுரை – 625 014 | 0452 – 2566220 |
| 13. | நாகப்பட்டினம் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்.<br>மூன்றாவாது மாடி, நாகப்பட்டினம் - 611 003. | 04365 - 253061 |
| 14. | நீலகிரி | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>அலெக்சாண்டர் காலேஜ்,<br>பேங்க் லைன்,<br>வண்டிச்சோலை, நீலகிரி -643 001. | 0423-2444430/35 |

| வ.எண். | அலுவலகம் | முகவரி | தொலைபேசி |
|---|---|---|---|
| 15. | நாமக்கல் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>இரண்டாவது மாடி, நாமக்கல் - 637 003. | 04286 - 281131 |
| 16. | பெரம்பலூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்<br>பெரம்பலூர் - 621 212. | 04328 - 225362 |
| 17. | புதுக்கோட்டை | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>52, எழில் நகர், புதுக்கோட்டை – 622 005. | 04322 – 230950 |
| 18. | இராமநாதபுரம் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>1/314, பாரதி நகர்,வெளிப்பட்டினம் (அஞ்சல்)<br>இராமநாதபுரம்-623 535. | 04567 - 231341 |
| 19. | சேலம் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>207, 2வது மாடி, மாவட்ட ஆட்சியர் அலுவலக<br>வளாகம், சேலம் - 636 001. | 0427 - 241552 |
| 20. | சிவகங்கை | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>44/69, எழில் காம்ப்ளக்ஸ், தரை தளம்,<br>மேலூர் தெரு, சிவகங்கை-630 561. | 04575 - 240962 |
| 21. | திருநெல்வேலி | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>கொக்கிர குளம், பழைய ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>திருநெல்வேலி-627 009 | 0462-2500302 |

| வ.எண். | அலுவலகம் | முகவரி | தொலைபேசி |
|---|---|---|---|
| 22. | திருவண்ணாமலை | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>எண் 4/15, 7வது தெரு காந்தி நகர்,<br>திருவண்ணாமலை – 606 601. | 04175 - 227476 |
| 23. | தஞ்சாவூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>எண் 223 இரண்டாவது மாடி,<br>புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>திருச்சி ரோடு, தஞ்சாவூர்-613 007. | 04362 -277907 |
| 24. | தேனி | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>அறை எண். 71, 4 வது மாடி,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>தேனி- 625 531. | 04546 - 255203 |
| 25. | திருப்பூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,திருப்பூர். | 0421 - 2218770 |
| 26. | திருவள்ளூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>1வது மாடி, மாவட்ட ஆட்சியர் அலுவலக<br>வளாகம், திருவள்ளூர்-602 001. | 044 -27664528 |
| 27. | திருவாரூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>2வது மாடி, புதிய ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>திருவாரூர் - 610 101. | 04366-221031 |
| 28. | தூத்துக்குடி | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>2வது மாடி, ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>கோரம்பாளையம், தூத்துக்குடி- 101. | 0461-2341282 |

| வ.எண். | அலுவலகம் | முகவரி | தொலைபேசி |
|---|---|---|---|
| 29. | திருச்சி | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>திருச்சி-620 001. | 0431-2412726 |
| 30. | வேலூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>பூமாலை வணிக வளாகம்,<br>கற்பகம் சூப்பர் மார்க்கெட் எதிரில்,<br>அண்ணாசாலை, வேலூர்-632 001. | 0416-2215765 |
| 31. | விழுப்புரம் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>TAHDCO பில்டிங், நெ. 62/56-ஏ சென்னை<br>நெடுஞ்சாலை, விழுப்புரம்-605 602. | 04146-223736 |
| 32. | விருதுநகர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>விருதுநகர். | 04562-252036 |

# பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் (IFAD) உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (PTSLP)

# 22. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் (IFAD) உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (PTSLP)

## திட்டக் குறிக்கோள் மற்றும் நோக்கம்

நிலைத்த தன்மையுடன் கூடிய வாழ்வாதாரங்களை ஏற்படுத்தி அவற்றை சீரிய முறையில் நிர்வகிக்கத் தக்க திறமையான தற்சார்பான கடலோர சமுதாயத்தை உருவாக்குவதே இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளில் வாழும் மக்களால் குறிப்பாக பெண்களால் செயல்படுத்தப்படும் வாழ்வாதார தொழில்கள் மற்றும் வள ஆதார அமைப்புகள் நிலைத்து செயல்படுத்துவதை இத்திட்டம் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

| திட்டக் கூறு | விபரம் | பயனாளிகள் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| **1. கடலோர பகுதி வள ஆதார மேலாண்மை** | | | |
| சமுதாய உட்கட்டமைப்பு வசதி | மக்களின் பங்கேற்புடன் உட்கட்டமைப்பு வசதிகள் கண்டறியப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. | திட்டப் பகுதியிலுள்ள கிராம மக்கள் | மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் |
| மீன்வள ஆதார மேலாண்மை | மீன் வளத்தினை அதிகரிக்கும் பொருட்டு செயற்கை பவள உறைவிடங்களை உருவாக்குதல். | திட்டப் பகுதியில் கடலோர கிராமங்களில் மீன் பிடி படகுகள் மூலம் கடலில் மீன் பிடிப்பவர்கள் | மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் |
| **2. ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் உபகரணங்கள்** | | | |
| நலிவுற்ற தொழில் முனைவோர் மூலதன நிதி | திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 70 சதவீதம் தொகை நாபின்ஸ் நிறுவனநிதி, 25 சதவீதத் தொகை நலிவுற்ற தொழில் முனைவோர் மூலதன நிதி மற்றும் 5 சதவீதத் தொகை பயனாளிகளின் பங்களிப்பு | கூட்டு பொறுப்புக் குழுக்களால் தொடங்கப்படும் புதிய தொழில் திட்டங்கள | ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம கூட்டு வள மேம்பாட்டு மையங்கள் மற்றும் மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் |

| திட்டக் கூறு | விபரம் | பயனாளிகள் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| காப்பீடு திட்டங்கள் (ஆயுள் மற்றும் பொது) | குறைவான சந்தா தொகையில் ஆயுள் காப்பீடு மற்றும் பொது காப்பீடு மீன் பிடி உடைமைகளுக்கான காப்பீடு | திட்டப் பகுதியில் குடியிருக்கும் அனைத்து தரப்பினர் | ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம கூட்டு வள மேம்பாட்டு மையங்கள் மற்றும் மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் |
| துயர் குறைப்பு நிதி | இயற்கை பேரழிவின் போது மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு 6% வட்டியில் கடன் | மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் | ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர் |
| பொருள் உருவாக்கம் மற்றும் புதிய உத்திகளுக்கான நிதி | சமையலறை கழிவுகளிலிருந்து எரிவாயு உற்பத்தி செய்யும் கலன் அமைத்தல். | ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் | ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம கூட்டு வள மேம்பாட்டு மையங்கள் மற்றும் மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர் |

| திட்டக் கூறு | விபரம் | பயனாளிகள் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| **3. வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி** | | | |
| மீன் விற்பனை சங்கங்கள் | திட்டப் பகுதியிலுள்ள கடலோர மீனவ கிராமங்களில் படகுகள் மற்றும் இயந்திரம் பொருத்தப்படாத படகுகள் மூலம் மீன் பிடிக்க செல்லும் மீனவர்களை ஒருங்கிணைத்து சங்கங்களை ஏற்படுத்துதல். | மீன் பிடி படகுகள் மூலம் கடலில் மீன் பிடிக்க செல்லும் மீனவர்கள். | மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் |
| கடன் மீட்புத் தொகை | திட்டப் பகுதியில் கடலோர மீனவ கிராமங்களிலுள்ள மீனவ சங்கங்களில் இணைந்துள்ள மீனவர்களின் கடன் மீட்புத் தொகையை கொடுத்து கடனிலிருந்து விடுவித்தல். | திட்டப் பகுதியில் கடலோர மீனவ கிராமங்களிலுள்ள மீனவ சங்கங்களில் இணைந்துள்ள மீனவர்களாக இருக்க வேண்டும். | மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் |
| **குறுந்தொழில் வளர்ச்சி** | | | |
| கூட்டு பொறுப்புக் குழு | கடலோர மக்களின் சுய வேலை வாய்ப்புகள் | மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் மீன் விற்பனை செய்யும் பெண்கள். | கிராம கூட்டு வள மேம்பாட்டு மையங்கள், மீன் விற்பனை சங்கங்கள் மற்றும் மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் |